வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு வாரமலர்

Eelanadu




Email : news@eelanadu.lk மலர் : 03 23.01.2022 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 49 பக்கங்கள் : 20



07

தென்னிலங்கை அரசியலில் எட்டப்படும் இராஜதந்திர அடைவுகள்!



08

விமானங்களை பயமுறுத்தும் ஐந்தாவது தலைமுறை



10

சிவபூமி மனவிருத்தி கல்வியினூடாக ஒரு சமூகப் புரட்சி



13

கோடிகளை இழக்கும் ஜொகோவிச்

# மனித உரிமைகள் கண்காணிப்பக அறிக்கை மிகைப்படுத்தப்பட்டது!

## வெளிவிவகார அமைச்சு மறுப்பு அறிக்கை

கொழும்பு, ஜனவரி 23

**மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் 'உலக அறிக்கை - 2022' இலங்கையின் தற்போதைய மனித உரிமைகள் தொடர்பான நிலைமை மிகைப்படுத்தப்பட்ட மற்றும் தேவையற்ற மற்றும் எதிர் மறையாக சித்திரிப்பனவாக உள்ளது என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.**

மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட சர்வதேச சமூகத்துடன் ஆக்கபூர்வமாக ஈடுபடுவதற்கான கொள்கையை இலங்கை பின்பற்றுகின்றது. எவ்வாறாயினும், சவாலான உலகளாவிய பொருளாதார மற்றும் சமூக சூழலின் போது பரபரப்பான மற்றும் பக்கச்சார்பான அறிக்கையிடல் உள்நாட்டு முரண்பாடுகளை தீவிரப்படுத்தி மோசமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றது. பொறுப்பான, சமநிலையான மற்றும் பாரபட்சமற்ற அறிக்கையிடலின் முக்கியத்துவத்தை நாங்கள் முன்னிலைப் படுத்துகின்றோம் என்று வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

மேலும், உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயன்முறை மூலம் நிலையான சமாதானத்தை நிலைநாட்டுவதில் இலங்கை ஈடுபட்டுள்ளதாக கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற மனித 19

## செவ்வாய் வரை மின் தடைப்படாது

கொழும்பு, ஜன. 23

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வரை நாட்டில் மின்வெட்டை நடைமுறைப்படுத்துவதற்கான அவசியம் இல்லை என மின்சக்தி அமைச்சர் காமினி லொக் குகே தெரிவித்துள்ளார். 19

## ஓ. எல். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் காலம் நீடிப்பு

கொழும்பு, ஜன. 23

க.பொ.தர சாதாரண தர பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் காலம் நீடிக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. 19

## சித்திரை புத்தாண்டுக்கு முன் புலமைப்பரிசில் பெறுபேறு!

கொழும்பு, ஜன. 23

கொவிட் தொற்றுநோய் காரணமாக பல சந்தர்ப்பங்களில் பிற்போடப்பட்ட 2021 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை நேற்று நடைபெற்றது.

இந்தநிலையில், புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை மிக விரைவில் வெளியிட எதிர்ப்பார்ப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன குறிப்பிட்டார்.

இதன்படி எதிர்வரும் ஏப்ரல் மாதம் தமிழ், 19



## கஞ்சா போதைப்பொருளுடன் சுழிபுரத்தில் தம்பதியர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 23

கஞ்சா போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சுழிபுரத்தைச் சேர்ந்த தம்பதியர் கைது செய்யப்பட்டுள்ளனர். 19

## யாழ்ப்பாண நகரிலும் வளி மாசாக்கம் உச்சம்!

கொழும்பு, ஜன. 23

யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் நான்கு நகரங்களில் வளி மாசடைதல் அதிகரித்துள்ளது என்று தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், கொழும்பு, புத்தளம், கண்டி ஆகிய இடங்களிலும் வளி மாசடைதல் அதிகரித்துள்ளது என்று தேசிய கட்டட ஆய்வு 19

## புதுவருட பிறப்புக்கு முன்னர் சீனா 10 இலட்சம் தொன் அரிசி வழங்கும்!

### வெளிவிவகார அமைச்சர் பீரிஸ்

கொழும்பு, ஜன. 23

தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னதாக சீனா 10 இலட்சம் தொன் அரிசியை அன்பளிப்பாக வழங்கும். இதன்மூலம் பொதுமக்கள் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாட முடியும் என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை மகா சங்கத்தினரை 19

## 29, 30ஆம் திகதிகளில் யாழில் நீதி அமைச்சின் நடமாடும் சேவை!

யாழ்ப்பாணம், ஜன. 23

நீதியமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நடமாடும் சேவை எதிர் வரும் 29, 30ஆம் திகதிகளில் காலை 9.30 மணிதொடக்கம் 4 மணிவரை யாழ்ப் 19

## மேலும் 75 ஒமைக்ரோன் தொற்றாளர் அடையாளம்!

கொழும்பு, ஜன. 23

நாட்டில் மேலும் 75 பேருக்கு ஒமைக்ரோன் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக ஆய்வகத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவ 19

## துறைமுக நகருக்கான கட்டணங்கள் சீன வங்கிக்கே செலுத்த வேண்டும்!

கொழும்பு, ஜன. 23

கொழும்பு, துறைமுக நகரில் படங்கள், காணொலிகள் எடுப்பதற்கான கட்டணத்தை சீன வங்கிக்கே வழங்க வேண்டும் என்று தெரிய வருகின்றது.

கொழும்பு துறைமுக நகரில் படங்கள், காணொலிகள் எடுப்பதானால் 30 ஆயிரம் ரூபாய் முதல் 50 ஆயிரம் ரூபாய் வரை கட்டணமாக செலுத்தப்படவேண்டும் என்ற அறிவிப்பு அண்மையில் வெளியானது.

இந்த நிலையில் தனிப்பட்ட தேவைக்கான படத்திற்கான கட்டணம் ஒரு மணி நேரம் முதல் மூன்று மணி நேரம் வரை எடுப்பதற்கு 2 முதல் 5 பேர் வரை படப்பிடிப்பில் ஈடுபட்டால் 30 ஆயிரம் ரூபாயும், 6 -10 19

## பாதுகாக்கப்பட்ட வலயங்களிலும் மீன்பிடியில் ஈடுபட உரிமையுண்டு

### யாரும் தடுக்க முடியாது என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜன. 23

மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்து வலுப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் விவசாய மற்றும் நீர் வேளாண்மை செயற்பாடுகள் தடை செய்யப்பட முடியாதவை என்பதே தற்போதைய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வனப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் நியாயமான நோக்கங்களுக்கும் மதிப்பளிக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

மருதங்கேணி, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும்போதே கடற்றொழில் அமைச்சர் மேற் 19

## இப்படியும் நடக்கிறது...!

பதின்மூன்றாம் திருத்தத்தில் ஈழத்தமிழருக்கு,

1) சுயநிர்ணய உரிமை இருக்கின்றதா?
இல்லை.
2) இறைமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா?
இல்லை.
3) தாயகக் கோட்பாடு அங்கீகரிக்கப்பட்டுள்ளதா? இல்லை.
4) தமிழர்கள் ஒரு தேசிய இனமாக ஏற்கப்பட்டிருக்கிறார்களா?
இல்லை.
5) காணி அதிகாரம் உள்ளதா?
இல்லை.
6) பொலிஸ் அதிகாரம் உள்ளதா?
இல்லை.
7) தன்னாட்சி அதிகாரம் உள்ளதா?
இல்லை.
8) பாதுகாப்புசார் அதிகாரங்கள் உள்ளனவா?
இல்லை.
9) நிதிசார் சுயாதீன அதிகாரங்கள் உள்ளனவா?
இல்லை.
10) வடக்கு, கிழக்கு இணைப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா?
இல்லை.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரிடமிருந்து ஊடகர்களுக்கு அனுப்பப்பட்ட குறிப்பு ஒன்றில் கேட்கப்பட்ட கேள்விகளும் அவற்றுக்கு அவர்களே வழங்கிய பதில்களுமே மேலே தரப்பட்டுள்ளன.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் ஊடகர்களாக இருந்தவர்கள் பல்வேறு கோணங்களிலும் நடத்தி முடித்த விவாதங்கள் இவை.

ஆனால், அதனை அன்று நிராகரித்தவர்களில் முக்கியமானவர்கள் விடுதலைப் புலிகள். அதனை நிராகரித்துவிட்டு, அவர்கள் அப்போது உலகின் மிகப்பெரிய இராணுவம் ஒன்றுடனேயே மோதலுக்கு தயாரானார்கள்.

அப்போது, ‘உலகின் மிகப்பெரிய இராணுவம் ஒன்றுடன் மோத முடியுமா என்றெல்லாம் நாங்கள் நினைக்கவில்லை. இந்தியா எம்மீது ஒரு தீர்வை திணிக்க நினைக்கிறது. அதனை முற்றாக எதிர்க்கவேண்டும்’ என்ற எண்ணம் மாத்திரமே புலிகளிடமிருந்தது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், ஈ. பி. ஆர். எல். எவ். அதனை ஏற்றுக்கொண்டு, இணைந்த வடக்கு, கிழக்கு மாகாண சபையை ஏற்படுத்தி ஆட்சி செய்ததுபோல, புலிகள் அதனை ஏற்றுக்கொண்டிருந்தால் நிலைமை வேறுவிதமாக மாறியிருக்கும் என்று வாதிடுபவர்களும் நம் மத்தியில் உண்டு. அது வேறு விவாத்திற்குரியது.

ஆனால், பலத்த எதிர்பார்ப்புக்களுடன், வடக்கு மாகாண சபைக்கு முதன்முதலாக தேர்தல் நடந்தபோது, அதன் முதலமைச்சர் வேட்பாளராக நீதியரசர் விக்னேஸ்வரன் களமிறக்கப்பட்டபோது, நான் முதலமைச்சரானதும் இராணுவத்தை வெளியேற்றுவேன் என்றுகூட, உணர்ச்சி மேலீட்டால் மேடைகளில் பேசியதையும் நாம் பார்த்தோம்.

ஆனால், முதல்வர் கதிரையில் அமர்ந்ததும், கால்கள் இல்லாத முறிந்த கதிரையில், தான் அமர வைக்கப்பட்டிருப்பதாக கூறிய விக்னேஸ்வரன், இப்போது என்ன சொல்கிறார்?

இந்திய தூதரகத்தில் தமிழ் தேசியக் கட்சிகளின் கூட்டு கோரிக்கை ஆவணத்தை கையளித்துவிட்டு வெளியே வரும்போது, மாகாண சபைகளுக்கான தேர்தல்களை உடனே நடத்தவேண்டும், மாகாண சபைகளால் இன்று நாம் எதிர்கொள்ளும் பிரச்னைகளை- முக்கியமாக இந்த நில அபகரிப்பை தடுத்து நிறுத்தலாம் என்றார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி சொல்வதுபோல எதுவும் இல்லை என்று வைத்துக்கொண்டாலும்,

1) இன்றைய அரசு செய்ய நினைக்கின்ற நில அபகரிப்பை தடுத்து நிறுத்தலாம்.

2) மாகாண சபைகளுக்கான தொல்லியல் தொடர்பான நியதிச்சட்டத்தை இயற்றி, தொல்லியல் என்ற பெயரில் அரசு முன்னெடுக்கும் பௌத்தமயமாக்கலை தடுத்து நிறுத்தலாம்.

3) மாகாண சபைகளுக்கான மீன்பிடிச் சட்டத்தை தயாரித்து இன்றைய மீனவர் பிரச்னையை எதிர்கொள்ளலாம்.

4) ஒற்றையாட்சியை ஏற்கமுடியாது என்று கூறுகின்ற நாங்களே, ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு கட்டுப்படுவோம் என்று சத்தியம் செய்துவிட்டு, பாராளுமன்றம் செல்வது, நமது பிரச்னையை உலகம் அறியச் செய்வதற்காகவே என்றால், மாகாண அரசில் இருந்துகொண்டும் அதன் பலவீனங்களை எடுத்துச்சொல்லி, சர்வதேசத்திடம் நமது நியாயங்களை எடுத்துச் செல்லலாம்.

இப்படியே பல விடயங்களை சொல்லிக்கொண்டே போகலாம். இந்தப் பத்தி போதாமல் இருக்கும்.

இல்லை, இது எங்களை- எங்கள் இனத்தை அழத்துவிடும், ஒற்றையாட்சிக்குள் முடக்கிவிடும் என்று வாதிட்டால், அப்போது புலிகள் இதனை எதிர்த்தபோது, தாங்கள் தமது ஆயுதப் போராட்டத்தால் இறைமையுள்ள நாடு ஒன்றை அடைவோம் என்று சொன்னதுபோல, இதனை எதிர்க்கின்ற நாங்கள், எதிர்பார்க்கின்ற தீர்வை எப்படி அடைவோம், அதற்கான பாதை என்ன? என்பதுபோன்ற விபரங்களையும் அல்லவா மக்ககள் முன்னால் வைக்கவேண்டும்.

அதனை அடைவதற்கான வழி இல்லை என்பதற்காக நமக்கு அழிவை ஏற்படுத்துகின்ற, நமது இனத்தையே இல்லாமல் செய்துவிடுகின்ற ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்று கேட்டால், அதுவும் நியாயமானதுதான்.

இல்லை, ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டுவிட்டால் பின்னர் அதனை நிராகரிக்கின்ற தார்மீக உரிமையை இழந்துவிடுவோம் என்று தொடர்ந்து வாதிட்டால் - பாராளுமன்ற ஆசனங்களுக்காக ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டு செய்கின்ற சத்தியத்தையும் நாம் செய்யலாமா என்றும் நம்மை நாமே கேட்கவேண்டியிருக்கும்!

**- ஊர்க்குருவி.**

# மீன்பிடிக்கசென்று காணாமல்போன மீனவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்!

வடமராட்சி, ஜன. 23

வடமராட்சி வல்வெட்டித்துறையிலிருந்து மீன்பிடிக்கச் சென்று காணாமல் போயிருந்த மீனவர்கள் இருவர் நேற்று மாலை கண்டுபிடிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சுந்தரலிங்கம் கெங்காரூபன் (வயது 37), தவராசா சுதர்சன் (வயது 41) ஆகியோர் நேற்று முன்தினம் அதிகாலை மீன்பிடிப்பதற்காக கடலுக்கு சென்றிருந்தனர். மாலையாகியும் அவர்கள் கரை திரும்பவில்லை. இந்த நிலையில், அவர்களின் குடும்பத்தவர்கள் பொலிஸ் நிலையத்திற்கும், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தகவல் வழங்கினர்.

இதையடுத்து, ஏற்கனவே கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களுக்கும் இது குறித்த தகவல் வழங்கப்பட்ட. அத்துடன், கரையிலிருந்தும் தேடுதலுக்காக மீனவர்கள் சென்றிருந்தனர்.

இந்நிலையில் குறித்த மீனவர்கள் இருவரும் நேற்று மாலை கண்டுபிடிக் கப்பட்டனர் என்று பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதி மீனவர்கள் கரையில் உள்ளவர்களுக்கு தகவல் வழங்கியுள்ளனர்அவர்களின் தகவலின் அடிப்படையில் இன்று காலை அவர்கள் கரை திரும்பலாம் என்று தெரியவருகின்றது.

(ஐ-2)

# சுவாமி விவேகானந்தரின் வருகை; யாழ்ப்பாணத்தில் 4 நிகழ்ச்சிகள்!

யாழ்ப்பாணம், ஜன. 23

சுவாமி விவேகானந்தரின் இலங்கை வருகையின் 125ஆவது ஆண்டு நிறைவையொட்டி இராமகிருஷ்ண மிஷன் நாடு முழுவதும் பல நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது. இதன் ஓர் அங்கமாக யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் விசேட நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன.

வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு வைத்தீஸ்வரா கல்லூரி - சிவன் கோயிலிலிருந்து ஊர்வலத்துடன் நிகழ்ச்சிகள் தொடங்கும்.

முற்பகல் 11 மணிக்கு கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியிலும், மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் கதிரேசன் கோயிலிலும் நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்ச்சிகளில் யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் பங்கேற்கவுள்ளார். அத்துடன், தமிழ்நாட்டிலிருந்து வந்த ஹரிவ்ரதானந்த மகாராஜூம் பங்கேற்பார். (ஐ)

# மந்திகை உணவு நிலையங்களில் சுகாதார அதிகாரிகள் சோதனை!

வடமராட்சி, ஜன. 23

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மந்திகைப் பகுதியை பொதுசுகாதார பரிசோதகர்கள் குழு திடீர் சுற்றிவளைப்பு பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது, பல உணவு கையாளும் நிறுவனங்களில் சமைத்த, சமைக்காத உணவுகளை ஒன்றாக பேணியமை, பிளாஸ்ரிக் தட்டில் இடியப்பம் தயாரிப்பு, ஊழியர் தங்கும் அறையை உணவுப்பொருள் களஞ்சியமாக பேணியமை, காலாவதியான பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்தமை, காலாவதியான பொருளை காலாவதியாகாத பொருளுடன் சூட்சுமமான முறையில் காலாவதி திகதி தெரியாதவாறு இலவச இணைப்பாக இணைத்திருந்தமை, பூஞ்சணம் வளர்ந்த பனங்கட்டிகளை விற்பனைக்காக வைத்திருந்தமை போன்ற சுகாதாரத்துக்கு விரோதமான விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்படுவதற்கான சட்ட நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகள்மேற்கொள்ளப்பட்டுள்ளது. போதியளவு அறிவூட்டலும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டபோதும் இவ்வாறு பொறுப்பற்ற விதமாக வர்த்தகர்கள் நடந்துகொள்வது சமூக விரோத செயலாகும் என்று சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(ஐ-2)

# ‘மலையகம்’ தனி அடையாளத்தை இல்லாதொழிப்பதற்கு முயற்சி!

## இராதாகிருஷ்ணன் எம். பி. சாடல்

நுவரெலியா, ஜன. 23

‘மலையகம்’ என்ற அடையாளத்தை இல்லாதொழிக்கும் முயற்சியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஈடுபடுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதனை உறுதிப்படுத்தும் விதத்திலேயே இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் உரை அமைந்துள்ளது.” என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது கொள்கை விளக்க உரையில் மலையக மக்கள் தொடர்பில் எதுவும் குறிப்பிடவில்லை என நாம் சுட்டிக்காட்டியிருந்தோம். எனினும், ஜனாதிபதியின் உரையை நியாயப்படுத்தும் வகையில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் கருத்து வெளியிட்டுள்ளார். அதாவது மலையக மக்களும் இலங்கை பிரஜைகள்தான். எனவே, இலங்கை மக்கள் தொடர்பில் கதைத்தால் போதும் என்ற தோரணையில் அவர் உரையாற்றியுள்ளார்.

மலையகத் தமிழர்களும் இந்த நாட்டில் வாழும் தேசிய இனம்தான். எமக்கென தனித்துவமான அடையாளங்கள் உள்ளன. மலையகத் தமிழர்கள், பெருந்தோட்ட மக்கள் என்ற அடிப்படையில் எமக்கு தேசிய மட்டத்தில் கோட்டாக்கள் கிடைக்கின்றன. அரச வேலை வாய்ப்பு, பல்கலைக் கழக வாய்ப்பு உள்ளிட்ட விடயங்களின் போது இந்த அடையாளம் எமக்கு உதவியாக இருக்கின்றன. எனவே, இவற்றை தொலைத்துவிடமுடியாது. மலையகத் தமிழர்கள் என்ற அடை யாளத்தை நாம் இழந்துவிடக்கூடாது. - என்றார்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
23.01.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், தை 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# பந்து இப்போது அரசாங்கத்தின் பக்கம்?

அரசியல் முரண்பாடுகளை கைவிட்டு, கூட்டமைப்பினர், அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட வேண்டுமென்று - அமைச்சர் நமால் ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். அதேபோன்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் அப்படியானதோர் அழைப்பை விடுத்திருக்கின்றது. சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்துடன் இருக்குமா என்னும் சந்தேகம் நிலவுகின்ற நிலையில், அவர்கள் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுப்பது வேடிக்கைதான்.

ஜனாதிபதியின் கொள்கை உரையில் அவ்வாறானதோர் அழைப்பை அவர் விடுத்திருந்தார். அதாவது, வடக்கு கிழக்கிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார். ஆனால் ஜனாதிபதி, கூட்டமைப்பு என்று அழுத்திக் குறிப்பிடவில்லை. கூட்டமைப்பின் ஒத்துழைப்பை கோரும் அரச தரப்பினர், மறுபுறமோ, இன்றுவரையில் கூட்டமைப்பை சந்திப்பதை ஜனாதிபதி தொடர்ந்தும் புறக்கணித்துவருவது தொடர்பில் பேசுவதில்லை. உண்மையிலேயே கூட்டமைப்பின் ஒத்துழைப்பு, ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் தேவைப்பட்டால், முதலில் ஜனாதிபதி கூட்டமைப்புடன் உத்தியோகபூர்வமாக பேச வேண்டும்.

பிரதான ஆறு தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து, அரசியல் யாப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு கடிதமொன்றை அனுப்பியிருக்கின்றன. எதற்காக அவர்கள் இலங்கையின் விடயமொன்றை அமுல்படுத்துவதற்கு இந்தியாவின் உதவியை நாடுகின்றன? ஏனெனில், இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு ஓரளவு பாதுகாப்பாக இருக்கக் கூடிய, மாகாண சபை முறைமையையும் இல்லாமலாக்கிவிடலாம் - அல்லது, பலவீனப்படுத்திவிடலாம் என்னும் அச்சத்தின் காரணமாகவே இவ்வாறானதொரு கோரிக்கையை இந்தியாவை நோக்கி முன்வைத்திருக்கின்றனர். அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்னையில் நம்பிக்கையுடன் செயல்பட்டிருந்தால் தமிழ் கட்சிகள் இந்தியாவை நோக்கி செல்ல வேண்டியேற்பட்டிருக்காது.

பாரதூரமான பொருளாதார நெருக்கடி நிலவுகின்றபோதும் - இப்போதும்கூட, தமிழ் மக்களின் ஆகக்குறைந்த கோரிக்கைகளைக்கூட அரசாங்கம் கருத்தில் கொள்ளவில்லை. இந்த நிலையில் எவ்வாறு கூட்டமைப்பின் உதவியை அரசாங்கம் கோர முடியும்? எனவே, அரசாங்கம் கூட்டமைப்பின் ஒத்துழைப்பை கோருவதற்கு முன்னர், தமிழ் மக்களின் நன்மதிப்பை பெறும் வகையில் சில முன்னெடுப்புக்களை செய்து காண்பிக்க வேண்டும்.

முதல் கட்டமாக, தமிழ் கட்சிகள் இந்தியாவை நோக்கி வைத்திருக்கின்ற கோரிக்கையை, நடைமுறையில் செய்து காண்பிக்க வேண்டும். இதன் மூலம் உள்நாட்டுக்குள்ளேயே அனைத்து பிரச்னைகளையும் தீர்க்க முடியும் என்றும் நம்பிக்கை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். அரசியல் யாப்பில் இருக்கின்ற மாகாண சபையை கூட, இல்லாமலாக்கிவிட வேண்டுமென்னும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அரசாங்கமொன்று, தமிழ் மக்களின் உரிமைக்கான அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் கூட்டமைப்பை நோக்கி அழைப்பு விடுவதை, தமிழ் மக்கள் ஒருபோதுமே சாதமாக பார்க்க ஸ்ரீமாட்டார்கள். தமிழ் மக்கள் சாதகமாக நோக்காத ஒரு விடயத்தை கூட்டமைப்பால் ஒருபோதுமே செய்யவும் முடியாது.

எனவே, இப்போது பந்து சிங்கள ஆட்சியாளர்களின் பக்கமே இருக்கின்றது. தங்களுடைய பக்கத்தில் செய்ய வேண்டியதை செய்தால் - நாட்டின் பொது நலன் கருதிய விடயங்களுக்கு கூட்டமைப்பாலும் உதவ முடியும். தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் பிரச்னைகளில் பாராமுகமாக இருக்கின்ற ஓர் அரசாங்கத்திற்கு, எந்த நம்பிக்கையின் அடிப்படையில் தமிழ் தலைமைகளால் ஒத்துழைக்க முடியும்?



# ஒமைக்ரோனின் ‘சகோதர வைரஸ்’ உலகம் விழிப்புடன் அவதானிப்பு!

## ஆய்வக சோதனையில் பிடிபடாத ‘கள்ளத்தனமான திரிபு’ என ஐயம்

குமாரதாஸன் - பாரிஸ்

*கடந்த இரு தினங்களாக ஐரோப்பிய செய்தி ஊடகங்களில் இத்தகவல் வெளியாகி வருகிறது. ‘பதற்றப்பட ஒன்றும் இல்லை. இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான்’ என்கின் றனர் நிபுணர்கள்.*

*விவரம் இதுதான். ஒமைக்ரோனில் இருந்து சிறிது மாறுபட்ட அதன் ‘சகோதர வைரஸ் திரிபு’* (little brother variant of Omicron) *ஒன்றை உலக அறிவியலாளர்கள் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர் எனத் தகவல் வெளியாகியிருக்கிறது.* BA.2 *எனப்படுகின்ற அந்த இரண்டாவது திரிபை சில அறிவியலாளர்கள் ‘கள்ளத்தனமானது’* (stealth Omicron) *என்று அழைக்கின்றனர்.*

*தென் ஆபிரிக்காவில் முதலில் கண்டறியப்பட்ட திரிபுக்கு ஒமைக்ரோன் என்று பெயரிடப்பட்டது. அதன் மூலக்கூறுகள்* BA1 *என்ற அறிவியல் குறியீட்டில் அழைக்கப்பட்டது. இதுவரை உலகெங்கும் பரவிய ஒமெக்ரோன் திரிபு அதுவே ஆகும். இப்போது அதிலிருந்து தோன்றிய பிறழ்வு ஒன்று* (sub-variant) *டென்மார்க், பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளில் பரவத் தொடங்கியுள்ளது. முந்தியதைப் போன்றே இதுவும் தொற்றாளர்களில் ‘மிக லேசான’ பாதிப்புகளையே உண்டாக்குவது தெரியவந்துள்ளது.*

*எனினும் ‘ஸ்பைக் புரதம்’ என்கின்ற அதன் புரத மரபு மூலக்கூற்று வடிவம்* (Spike glycoprotein) *தங்களுக்குக் ‘குழப்பங்களை’ ஏற்படுத்தியிருப்பதாகச் சில நாடுகளின் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.* BA.2 *எனப்படுகின்ற அந்த இரண்டாவது திரிபை சில அறிவியலாளர்கள் ‘கள்ளத்தனமானது’* (stealth Omicron) *என்று அழைக்கின்றனர்*

*அதற்குக் காரணம் என்ன?*


*உலகெங்கும் வைரஸ் தொற்றுக்களை உறுதி செய்யவும் தொற்றாளர் எண்ணிக்கையைக் கணக்கிடவும் பிசிஆர்* (PCR) *என்ற பரிசோதனை முறையே பின்பற்றப்பட்டு வருகிறது. ஒமைக்ரோனின் இந்த இரண்டாவது வகைத் திரிபை பிசிஆர் பரிசோதனையில் கண்டறிய முடியாதிருக்கும் என்று அறிவியலாளர்கள் நம்புகின்றனர். பொதுவாக கொரோனோ வைரஸ் வகைகளின் அடிப்படைப் புரதக் கட்டமைப்புகளே அவை மனித உடலில் தொற்றுவதற்கும் தடுப்பூசி மூலம் அதனை எதிர்ப்பதற்கும் பிசிஆர் போன்ற பரிசோதனைகளில் அதனைக் கண்டறிவதற்கும் உதவுகின்றன.*

*‘ஸ்பைக் புரதம்’* (Spike glycoprotein) *என்கின்ற மரபுக் கட்டமைப்புகளை ஒமைக்ரோனின் புதிய திரிபில் கண்டறிய முடியாதிருப்பதாகக்* (S-gene dropout) *கூறப்படுகிறது. இவ்வாறான அதன் ”கள்ளத்தனம்” பரிசோதனைகளையும் தடுப்பு முறைகளையும் கேள்விக்குள்ளாக்கிவிடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.*

*மிகத் தீவிர பரவல் தன்மை அவதானிக்கப்பட்டிருப்பினும் இந்தப் புதிய பிறழ்வு தொற்று நோயின் போக்கில் பெரிய மாற்றத்தையோ பாதிப்பையோ ஏற்படுத்தும் என்பதை உடனடியாகச் சொல்லிவிட முடியாது என்று நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஐரோப்பாவில் டென்மார்க்கிலேயே இந்தத் திரிபுத் தொற்று அதிக எண்ணிக்கையில் அவதானிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அந்த நாட்டிடம் உள்ள வைரஸ் மரபு வடிவங்களைப் பரிசோதித்துக் கண்டறிகின்ற போதிய வசதிகளும் ஒரு காரணமாகும்.*

*பிரான்ஸின் பிரதமர் ஜீன் காஸ்ரோ கடந்த வியாழனன்று கட்டுப்பாடுகளைத் தளர்த்துகின்ற அறிவிப்பை வெளியிட்ட சமயத்தில் ஒமெக்ரோனின் புதிய ‘சகோதரத் திரிபு’ பரவுவது பற்றிய தகவலையும் சாடமாடையாகக் கோடிகாட்டியிருந்தார்.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’





# இந்தவார ராசிபலன்
## 23.01.2022 – 29.01.2022

ஜனவரி. 23 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - தை -10
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 6.00
திதி : சஷ்டி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

முக்கியப் பொறுப்புக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். குழந்தைகளின் குறைகளை பக்குவமாக சுட்டிக் காட்டித் திருத்த வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். மனஈடுபாட்டு, அக்கறையுடன் வேலை பார்ப்பீர்கள்.யாரிடமும் பேச்சிலும், செயலிலும் கடுமை காட்ட வேண்டாம். உங்களுக்குச் சமூக வலைதளங்களில் பிரபலமானவர்கள் அறிமுகமாவார்கள். அதிக கவனத்துடன் செயல்படுங்கள். கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. அலுவலகத்தில் மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். மேலதிகாரிகள் பாராட்டுவர். பணிச்சுமை அதிகரிக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

பணியின் காரணமாக வெளியூர்களுக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படக் கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு அல்லது சம்பள உயர்வு பற்றிய தகவல் வரும். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். ஊதிய உயர்வு போன்ற சலுகைகள் தாமதமாகத்தான் கிடைக்கும். அதற்காக முயற்சிகள் அதிகமாக எடுக்க வேண்டி வரும். எந்த விஷயத்திலும் சற்று பொறுமையுடன் காத்திருக்க வேண்டியிருக்கும். மாணவர்கள் ஆசிரியர்களின் மத்தியில் நற்பெயர் வாங்குவர். பொறுப்புணர்வு அதிகரிக்கும். நிறைய நேரம் உழைப்பீர்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

அலுவலகத்தில் அதிகாரிகளின் ஆதரவு அதிகரிக்கும். எதிர்ப்பு காணாமல் போகும். இதமாகப் பேசி எதையும் சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் விஷயத்தில் கலகலப்பான சூழல் உண்டு. சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாகும். வீண்செலவு குறையும். வருமானம் அதிகரிக்கும் இந்த வாரம் தான் வளர்ச்சிக்கான நேரம். வழக்கில் நீங்கள் எதிர்பார்த்திருந்த நல்ல தீர்ப்பு வரும். தந்தையின் உடல்நிலை சீராகும். தந்தைவழிச் சொத்து பற்றிய பிரச்னை நல்ல முடிவுக்கு வரும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

நண்பர்கள் உதவுவார்கள். வெளியூர்ப் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. புது வேலை அமையும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். திருமண விஷயத்தில் தடைகள் இருந்தாலும் மனம் தளர வேண்டாம். விரைவில் நற்செய்தி கிடைக்கும். தொழிலில் லாபம் சீராக இருக்கும். பூர்வீக சொத்து விஷயத்தில் சுமுகமான உடன்பாடு ஏற்படும். அநாவசிய செலவுகள் இருக்கும். வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவீர்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

அனுபவ பூர்வமான தீர்மானம் செய்து எல்லோரையும் கவர்வீர்கள். சுபநிகழ்ச்சிகளால் வீடு களை கட்டும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும். திட்டமிட்ட பயணம் தள்ளிப் போகும். மனதில் மகிழ்ச்சி நிலைக்கும். புத்திசாலித்தனமான முடிவுகள் எடுப்பீர்கள். சவாலான விஷயங்களையும் சுலபமாக முடிப்பீர்கள். திடீர் பணவரவுக்கு வாய்ப்புண்டு. குடும்பத்திலோ அல்லது உறவினர் வட்டத்திலோ திருமணத்தைச் சிறப்பாக நடத்துவீர்கள். பொன்னான வாரம்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

ணியிடத்தில் திருப்திகரமான சூழ்நிலை உருவாகும். உழைப்பால் உயர முயற்சி செய்வீர்கள். நண்பர்கள் நன்மை உண்டாகும். சேமிக்க வாய்ப்புண்டு. உறவினர்களுடன் ஏற்பட்டிருந்த மனக்கசப்பு நீங்கும் அதன் காரணமாக குடும்பத்தில் மகிழ்ச்சியும் மன நிறைவும் உண்டாகும். நீங்கள் எடுக்கும் தீர்மானங்களில், அனுபவ அறிவு வெளிப்படும். விருந்தினர் வருகையால் வீடு களை கட்டும். வியாபாரத்தில் புதிய கொள்முதல் செய்வீர்கள். உயரதிகாரிகளின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

மனைவி வகையில் மருத்துவ செலவு வரலாம். திடீர் இடமாற்றம் வருவதற்கான வாய்ப்புள்ளது. பணத் தேவைகள் நிறைவேறும். மனைவியின் சகோதரர்கள் மூலம் உதவி கிடைக்கும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். பெரிய முடிவுகளை எடுக்க இது உகந்த நேரம். பிள்ளைகளின் வகையில் அலைச்சல், செலவுகள் இருக்கும். வேலை சம்பந்தமாக தேர்வு எழுதியவர்களுக்கு வெற்றிக்கான செய்தி வரும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் உண்டு.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

உஷ்ணம் காரணமாகச் சருமம் பாதிக்கப்படாமல் காத்துக் கொள்ளுங்கள். கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை வரக் கூடும். சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும்.பல வேலைகளை இழுத்து போட்டுப் பார்க்க வேண்டி வரும். மற்றவர்களிடம் கூடுமானவரை வளைந்து கொடுத்துப் போவது நல்லது. சகிப்புத் தன்மை தேவைப்படலாம். சமூகத்தில் செல்வாக்கு கூடும். விருதுகள், பாராட்டு பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமை காண்பீர்கள்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

எதிலும் நிதானமும் கவனமும் தேவை. கணவன், மனைவி ஒருவருக்கொருவர், விட்டுக் கொடுத்து போவது நல்லது. அடமானத்தில் இருக்கும் தங்க நகைகளை மீட்பீர்கள். சகோதர உறவுகளால் செலவுகள், அலைச்சல் ஏற்படலாம். இருப்பினும் நல்லுறவு நீடிக்கும். தந்தை உடல் நலம் லேசாக பாதிக்கப்படலாம். தொழில் விஷயமாக வெளியூர் செல்வீர்கள். பணியாளர்களுக்கு இருந்த மன உளைச்சல் நீங்கும். குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

நீண்ட காலத்துக்குப் பிறகு குடும்பத்தில் கலகலப்பு உண்டாகும். பணியிடத்தில் அதிகாரிகளின் ராஜதந்திரத்தை உணர்வீர்கள். புதிய முயற்சியில் அறிவாற்றல் காரணமாக வெற்றிடைவீர்கள். தடைப்பட்ட விஷயங்கள் தானாக கூடி வரும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். புதிய தீர்மானங்கள எடுப்பீர்கள். வியாபாரத்தில் நௌிவு சுளிவுகளைப் புரிந்துகொள்வீர்கள். பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வீர்கள். குடும்பத்தில் சாதகமான சூழ்நிலை உருவாகும். ஆதரவு கிடைக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இளைஞர்கள் பெற்றோரின் அறிவுரையை ஏற்பது அவசியம். சம்பள உயர்வு பற்றி தகவல் வரும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த கவலை நீங்கும். வலியப்போய் வழக்கு போட வேண்டாம். அழகும் இளமையும் அதிகரிக்கும். மற்றவர்களைக் கவருவீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும். மற்றவரின் உணர்வுகளைப் புரிந்துக் கொண்டு செயல்படுவீர்கள். யாருக்கும் பணம் நகை வாங்கித் தர வேண்டாம். சுற்றி இருப்போரை அனுசரித்துப் போகாவிட்டால் மனக்கசப்பு உண்டாகும். அதிகம் உழைக்க வேண்டிய வாரம்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

பழைய வாகனத்தை மாற்றிப் புது வண்டி வாங்குவீர்கள். வீடு மாற இடம் பார்த்தவர்களுக்கு நல்ல வசதியான வீடு அமையும். மருத்துவ மனையில் சிகிச்சை பெறுபவர்கள் குணமடைந்து வீடு திரும்புவர். வீடு கட்டுவதற்கான வேலைகளைத் தொடங்குவீர்கள். உடல் நலத்தில் அலட்சியமாக இருக்காமல் உடனுக்குடன் மருத்து வரைப் பார்ப்பது நலம் தரும். சாதகமான சூழ்நிலைகள் இருக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டிலிருந்து இனிக்கும் செய்தி கிடைக்கும். மனதில் குதூகலம் நிலவும். வழக்கில் தீர்வு வரலாம்.

# பணிவுப் பகிர்வு

பகிர்வு -13

கணபதி சர்வானந்தா

குலம் வேண்டின் வேண்டுக யார்க்கும் பணிவு - என்றுரைக்கிறது திருக்குறள். அஃது உயர் குடியில் பிறந்ததற்கு அடையாளம் பணிவோடு இருத்தல் என்று பொருள் படும். பணிவோடு இருப்பவன் உயர்வான எண்ணத்துக்குட்பட்டவனாக இருப்பான் என்று கூடச் சொல்லாம்.

பணிவு எப்படி இருக்க வேண்டும்? என்ற உதாரணத்துக்கு ஒன்று. வீட்டு வாசலில் உள்ள அழைப்பு மணியை யாரோ அழுத்துகின்ற சத்தத்தைக் கேட்டதும் "மகனே! கதவினைத் திறந்து யார் அழைக்கிறார் என்பதைப் பார்த்து வா" என்கிறார் தந்தை. அவன் கதவைத் திறந்து பார்த்தபோது அங்கே ஒருவர் நிற்கிறார். அவரைப் பார்த்ததும் அவர் மரியாதைக்குரியவர் போலத் தெரிகிறது. நீங்கள் அவரை "யார்" என்று அறிந்து உங்கள் தந்தைக்குத் தெரிவிக்க வேண்டும். நீங்கள் அவரை அறிகின்ற முறைமையில் அவர் மனம் கோணக் கூடாது. அதே சமயம் நீங்கள் பணிவையும் பேண வேண்டும்.

அதற்கு "வணக்கம். என் தந்தையிடம் யார் வந்திருப்பது என்று சொல்ல வேண்டும்" என்பதே மிகவும் பொருத்தமானதாக இருக்கலாம். அதே சமயம் உடல் மொழி மூலமும் பணிவை வெளிக்காட்டலாம்.

பணிவு என்ற பதத்துக்குக் கம்பன் இப்படித்தான் விளக்கமளிக்கிறான்.

வாலிக்குப் பயந்து சுக்ரீவன் ரிச்யமுக பர்வதத்தில் வாழ்ந்து வருகிறான். வாலி கொண்டுள்ள ஒரு சாபத்தின்படி அவன் அந்த இடத்துக்கு வரமுடியாது. அதனால் சுக்ரிவன் நிம்மதியோடு வாழ்ந்து வருகிறான். ஒரு நாள் வில்லோடு இருவர் அங்கு வருவதை அவன் காண்கிறான். உடனே அவனுக்குப் பயம் வந்துவிடுகிறது. வாலியே அவர்களை அனுப்பி வைத்துள்ளானோ! எனச் சந்தேகப்பட்டு அவர்களை விசாரித்து வருமாறு அனுமனை அனுப்புகிறான்.

அவர்களைக் கண்டதும் அனுமனுக்கு அவர்கள் பற்றி நல்லெண்ணம் தோன்றுகிறது. அவர்கள் சிறந்த குணநலன்கள் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என எண்ணி அவர்களை அணுகியதும் அவர்களோடு பின்வருமாறு உரையாடுகிறான்.

'யார் என விளம்புகேன் நான்,
எம் குலத் தலைவற்கு, உம்மை?
வீர! நீர் பணித்திர்! ' என்றான்,
மெய்ம்மையின் வேலி போல்வான்

வீரர்களே! எம் குலத்தின் தலைவனான சுக்ரீவனிடம் நான் உங்களை யார் என்று சொல்லுவது என எனக்கு தயைகூர்ந்து ஆணையிடுங்கள் என அனுமன் வேண்டுகிறான். பணிவுக்கு இலக்கிய வழியே சொல்லப்படுகின்ற கதை அது.

பணிவு என்ற பதத்துக்கு இந்திய திரைத்துறையின் உச்சியைத் தொட்டவரான நடிகர் அமிர்தாபச்சன் அவர்கள் தனது அனுபவத்தின் மூலம் கீழ்காணும் ஒரு விளக்கத்தைத் தருகிறார்.

எனது சினிமா வாழ்க்கையில் புகழின் உச்சக் கட்டத்தில் நான் இருந்த போது, விமானம் மூலம் ஒரு முறை பயணம் செய்தேன்.

எனக்கு அருகில் இருந்த பயணி, ஒரு சாதாரண உடை அணிந்து அமர்ந்திருந்தார். வயதான மனிதர், நடுத்தர வர்க்கம், நன்கு படித்தவர் போன்று அவர் தோன்றினார். நான் யார் என்பதை மற்றப் பயணிகள் கண்டு கொண்டார்கள்.

என் இருக்கையின் அருகில் வந்து ஹலோ சொல்லி அவர்கள் கை கொடுத்தனர். ஆனால் அருகில் இருந்த அந்த மனிதர் மட்டும் என் இருப்பை உணரவும் இல்லை. என்னை கண்டு கொள்ளவும் இல்லை. ஒருவேளை, அவர் நாளிதழை உன்னிப்பாகப் படித்துக் கொண்டிருநததால், என்னைக் கவனிக்கவில்லையோ! என எண்ணினேன். தேநீர் வழங்கப்பட்ட போது, அமைதியாக அதை எடுத்து, ரசித்துப் பருக ஆரம்பித்தார்.

என்னை அவருக்கு யார் என்று தெரியவில்லையா? அல்லது தெரிந்தும் தவிர்க்கிறாரா? என்னால் பொறுத்துக் கொள்ள முடியாமல், அவருடன் ஒரு உரையாடலைத் துவக்கும் முயற்சியில் நான் அவரை பார்த்துச் சிரித்தேன். அந்த மனிதரும் புன்னகை செய்து, "ஹலோ" என்று சொன்னார். நாங்கள் பேச ஆரம்பித்தோம். சமூகம், பொருளாதாரம், அரசியல், என்று பல விஷயங்களைப் பற்றி பேசினோம்.

அவரின் பேச்சில், ஒரு லயிப்பும் ஈர்ப்பும், தேர்ந்த ஒரு நேர்த்தியும் இருந்ததை நான் உணர்ந்தேன். சினிமா மற்றும் திரைப் படங்கள் சம்பந்தமான விஷயங்களை நான் வேண்டுமென்றே அதனிடையே கொண்டு வந்தேன்.

நீங்கள் திரைப்படங்கள் பார்ப்பீர்களா? என வினவினேன். "ஓ! மிகச் சிலவற்றைப் பல ஆண்டுகளுக்கு முன்பு நான் பார்த்திருக்கிறேன்" என அந்த மனிதர் பதிலளித்தார். நான் திரைப்பட துறையில் தான் இருக்கிறேன் என்று குறிப்பிட்டேன். அப்படியா? ரொம்ப நல்லது. நீங்கள் அந்த துறையில் என்ன செய்கிறீர்கள் எனக் கேட்டார்.

நான் ஒரு நடிகர் என பதிலளித்தேன். அவரிடமிருந்து எந்த வித சலனமும் இல்லை. அதன் பின் நாங்கள் இறங்கி வெளியேறும் போது, உங்களுடன் பயணம் செய்தது மிக்க மகிழ்ச்சி. நல்லது, என் பெயர் அமிதாப் பச்சன் என்றேன். அந்த மனிதரும் மகிழ்ச்சியுடன் சிரித்துக் கொண்டே, உங்களை சந்தித்த இந்த நாள், நல்ல நாளாக இருக்கட்டும் எனக் கூறி , "என் பெயர்: JRD ராட்டா (TATA) . நான் மோட்டார் தொழில் செய்கிறேன்" என்றார் பணிவுடன்.

நான் விக்கித்து நின்று விட்டேன். அன்றுதான் நான் பணிவைப் பற்றிக் கற்றுக் கொண்டேன் பெயரையும், புகழையும் வைத்து, நாம் தான் பெரிய ஆள், என்று நினைத்துக் கொண்டு இருக்கிறோம். ஆனால், நம்மை விட வசதியிலும், அறிவிலும், படிப்பிலும் உயர்ந்தவர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள்.

எப்போதுமே பணிவாய் பேசுங்கள். நல்ல நடத்தை, பண்பு என்பது அறிவை விட மேலானது. வாழ்க்கையில் பல கால கட்டங்களில், அறிவு, பணிவிடம் தோற்றுப் போய் உள்ளது. பணிவும் நல்ல நடத்தையும், எல்லா இடத்திலும் வென்றுள்ளது. எந்த சூழ்நிலையிலும், பணிவுடனும், அடக்கத்துடனும் நடந்து கொள்ளுங்கள்.அது உங்களை சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் கொண்டு போய் வைக்கும். -திரை நட்சத்திரம் அமிர்தாப்பச்சனின் பணிவுப் பகிர்வு அது!

# எஜமான் விரும்பியதற்கு அமையவே 13ஆவது திருத்தத்தை கோருகின்றனர்!

## கஜேந்திரகுமார் எம். பி. சாடல்



வவுனியா, ஜன. 23

ஒற்றையாட்சிக்குள் முடக்கும் 13ஆவது திருத்த சட்ட விடயத்தில் இந்திய அடிப்படை அமைப்புக்கள் தமது எஜமான் விரும்பியதற்கு ஏற்ப செயல்பட தயாராக இருக்கிறார்கள் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட செயல்பாட்டாளர்களுடன் நேற்றுமுன்தினம் மாலை நடத்திய கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் எமது கட்சி செயற்பாட்டாளர்களும், சிவில் அமைப்புக்களும், சிவில் செயல்பாட்டாளர்களும் சந்தித்து தமிழ் கட்சிகள் என்ற பெயரில் இயங்கிக் கொண்டிருக்கும் தமிழ் முகவர் அமைப்புக்கள் சேர்ந்து கலந்துரையாடி தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒற்றையாட்சிககுள் முடக்குகின்ற சதி முயற்சியை முறியடிக்க தமிழ் தேசிய மக்கள் முன்னனியும் சிவில் சமூகங்களும் இணைந்து முயற்சிகளை முன்னெடுத்துள் ளோம்.

இது தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தி, அதன் முதல் கட்டமாக எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் எதிர்ப்பு போராட்டம் முதலாவது நடவடிக்கையாக அமையும். அதன் பின் ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த விழிப்புணர்வு போராட்டம் நடைபெறும். அதன் பின் ஒவ்வொரு கிராமங்களிலும் வீடுவீடாகச் சென்று மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தேசியத்தை நேர்மையாக நேசிக்கும் அனைத்து தரப்புக்களுடனும் சேர்ந்து இந்த முயற்சியை முன்னெடுக்க ஒன்றிணைந்து செயல்பட விரும்புகின்றோம் எனக் கேட்டிருந்தோம். அதே கோரிக்கையை நாம் வவுனியாவிலும் கோருகின்றோம்.

சர்வதேச ரீதியில் இலங்கையில் இருக்க கூடிய அனைத்து மக்கள் கூட்டங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஓர் அரசியலமைப்பு நிறைவேறுவது அத்தியாவசியம் என்றும் அப்படி அனைத்து தரப்புக்களும் ஏற்றுக் கொள்ளும் அரசியலமைப்பு ஒன்று நிறைவேற்றப் பட்டால்தான் விசேடமாக தமிழ் தரப்புக்கு இனப் பிரச்னை தீர்க்கப்பட்டதாக கருதப்படும். அதுவரைக்கும் இனப்பிரச்னை நீடிக்கின்றது என்ற செய்தியையே வழங்கும் என்பதையும் கூறியுள்ளார்கள்.

கோட்டபாய ராஜபக்ஷ புதிய அரசமைப்பு ஒன்றை கொண்டு வர எத்தனித்துள்ளார். அவர் இந்த புதிய அரசமைப்பை இந்தியாவுக்கு சீனாவைக் காட்டி சீனாவை நாங்கள் தவிர்க்க விரும்பினால் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஒற்றையாட்சிக்குள் முடக்க நீங்கள் ஒத்துழைக்க வேண்டும். அதனை நீங்கள் செய்தால் நாம் சீனாவின் விடயத்தில் பரிசீலிக்கலாம் என்ற ஒரு கருத்தை சொல்ல இருக்கும் பின்னணியில் இந்தியாவின் கடுமையான அச்சுறுத்தல் காரணமாகவும், கட்டளையும் தான் அவர்களுடைய முகவர் அமைப்புக்கள் இன்று ஒன்று சேர்ந்து 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு இந்திய பிரதமரிடம் இந்திய விரும்பி கேட்டதை தங்களுடைய கோரிக்கையாக முன் வைத்துள்ளார்கள்.

எங்களைப் பொறுத்தவரை ஒற்றையாட்சிக்குள் எந்தவோர் இடத்திலும் தமிழருக்கு தீர்வு வரப்போவதில்லை. மாறாக ஒற்றையாட்சி அரசமைப்பை போன ஆட்சிக் காலத்தில் ஏக்கிய ராச்சிய என ஏற்றுக் கொண்டது. ஒற்றையாட்சி என்ற சிங்கள வசனத்தை ஒருமித்த நாடு என தமிழ் மக்களுக்கு பூச்சாண்டி காட்டி ஏக்கிய ராச்சிய அரசியலமைப்பை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள வைக்கும் சதி ஒன்றை செய்தது. அதனை நாம் முறியடித்தோம்.

13 வது திருத்தச் சட்டம் அல்லது இன்னொரு வடிவமாக இருக்கலாம் ஒற்றையாட்சியை நிராகரிப்பது தான் எம்மிடம் இருக்கும் ஒரே ஒரே வழி - என்றார். (ஐ)

# ஒருநாளில் பரீட்சை சான்றிதழ் வழங்கும் சேவை இடைநிறுத்தம்

கொழும்பு, ஜன. 23

ஒரு நாள் சேவை ஊடாக பரீட்சை சான்றிதழ் வழங்கும் நடவடிக்கை நாளை திங்கட்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்படவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனவே, சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிப்பதற்கு, இணைய முறைமையிலும், மின்னஞ்சல் ஊடாவும் மாத்திரம் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல். எம். டி. தர்மசேன தெரிவித்துள்ளார்.

தேவையான சான்றிதழ்கள் வெளிவிவகார அமைச்சுக்கு அல்லது விண்ணப்பதாரரின் முகவரிக்கு விரைவு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி மாதம் ஆரம்ப மாகவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு அதிகளவான பணியாளர்கள் ஈடுபடுத்தப் பட்டமையால் ஒருநாள் சேவை ஊடாக சான்றிதழ் வழங்கும் சேவையை தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டியுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

மேலும், விண்ணப்பங்களை அனுப்புவோர் மேலதிக தகவல்களுக்கு www.doenets.lk என்ற பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தை பார்வையிடுமாறும், அத்துடன் “'Exams Sri Lanka' என்ற உத்தியோகபூர்வ கையடக்கத் தொலைபேசி செயலியைச் செயற்படுத்து வதன்மூலம், சான்றிதழுக்காக விண்ணப்பிக்க முடியும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# உற்பத்தியாகும் பசளையின் தரத்தை உறுதி செய்யுங்கள்

## ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை



கொழும்பு, ஜன. 23

அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் ஊடாக உற்பத்தி செய்யப்படும் சேதன பசளையின் தரம் மற்றும் அதனூடாக கிடைக்கப் பெறும் விளைச்சல் தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விவசாய அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விவசாயத்துறை அமைச்சின் கீழ் உள்ள விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்கு திடீர் விஜயத்தை மேற்கொண்டார்.

இதன்போது நிலைப் பேறான விவசாயம் மற்றும் விசமற்ற உணவு உற்பத்தி அரசாங்கத்தின் பிரதான கொள்கையாகும். இம்முறை பெரும்போக விவசாயத்தில் சேதன பசளை பகிர்ந்தளிப்பு,பாவனை மற்றும் விளைச்சல் தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

சேதன பசளை உற்பத்திக்காக 34 அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.அந்தந்த நிறுவனங்களின் உற்பத்தியிலான சேதன பசளை மற்றும் அதனூடான விளைச்சல் தொடர்பில் ஆராயுமாறு ஜனாதிபதி மேலும் வலுயுத்தியுள்ளார். (ஐ)

# தேசிய கலை, இலக்கிய பேரவைக்கு வவுனியாவில் அலுவலகம் திறப்பு

வவுனியா, ஜன. 23

தேசிய கலை, இலக்கிய பேரவையின் அலுவலகம் வவுனியாவில் நேற்று சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

பேரவையின் தலைவர் க. தணிகாசலம் தலைமையில் குடியிருப்பு வீதி பூந்தோட்டம் வவுனியா எனும் முகவரியில் குறித்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் வரவேற்புரையை சு. டொன்பொஸ்கோ நிகழ்த்தியிருந்தார். அதனை தொடர்ந்து பேரவையின் தலைவரால் அலுவலகம் உத்தியோகபூர்வமாக நாடாவெட்டி திறந்துவைக்கப் பட்டது. அதனைதொடர்ந்து வாழ்த்துரைகளும், கவிதை அரங்கும் இடம்பெற்றிருந்தது.

அலுவலகத்தில் இ.கா.சூடாமணி அரங்கு மற்றும் மாவை வரோதயன் நூலகம் என்பன அமையபெற்றுள்ளன. நிகழ்வில் சிரேஷ்ட பொதுவுடமைவாதி சி. கா. செந்தில்வேல், ஓய்வுநிலை விரிவுரையாளர் நா. பார்த்தீபன், தமிழ்மணி மேழிக்குமரன், நி. பிரதீபன், கலை இலக்கிய செயல்பாட்டாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# விபத்தில் ஒருவர் பலி!

புத்தளம், ஜன. 23

புத்தளம் - திருகோணமலை பிரதான வீதியின் நொச்சியாகம நகரில் நேற்றிரவு இடம் பெற்ற வீதி விபத்தில் 45 வயது நபர் ஒருவர் உயிரிழந்தார்.

கலாஓயாவை நோக்கி பயணம் செய்த தனியார் பஸ் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரை அங்கிருந்தவர்கள் உடனடியாக நொச்சியாகமை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்ப்பித்தனர்.

எனினும், குறித்த மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து பயணம் செய்த நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் மற்றையவர் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ)

# விலங்கியல் திணைக்கள பணிப்பாளர் விலகினார்!

கொழும்பு, ஜன. 23

நாசவேலைகள் மற்றும் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தற்போதைய ஆபத்தான நிலைமையை நீக்கும் வரைதான் சேவையில் இருந்து விலகுகிறார் என்று விலங்கியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சர்மிளா ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு எழுதியுள்ள கடிதத்தின் மூலம் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

14 நாட்களுக்குள் விசாரணை நடத்தி தன் கடமையைச் செய்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

இல்லை என்றால் தாம் பதவி



விலகுகிறார் என்றும் அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் ஊழியர்கள் குழு வொன்றின் தன்னிச்சையான தொழில்சங்க நடவடிக்கை மற்றும் அதன் விளைவாக ஏனைய பணியாளர்கள் மற்றும் மிருகக் காட்சிசாலையின் விலங்கு களின் பாதுகாப்புக்கு ஏற்படும் பாதிப்புகளை மையமாக வைத்து மேற்படி தீர்மானத்தை மேற்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# சுவாமி விவேகானந்தர் வருகையின் 125ஆவது ஆண்டு நிறைவு விழா!

வவுனியா, ஜன. 23

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கமும் இராம கிருஷ்ண மிஷனும் இணைந்து ஏற்பாடு செய்த இந் நிகழ்வில் விவேகானந்தரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் நடராஜர் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. தமிழ்நாட்டின் கோயம் புதூர் இராமகிருஷ்ணமிஷன் வித்தியாலய சுவாமி ஹரிவ்ர தானந்த மஹராஜ் மற்றும் கொழும்பு இராமகிருஸ்ன மிஷன் சுவாமி அசராத்மா னந்த மகராஜ் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றனர். (ஐ)

# ஆட்சி அதிகாரத்தை தக்கவைப்பதற்கு தேவாலயத்தில் குண்டு வைக்கின்றனர்

## பாராளுமன்றில் சாடியது எதிர்க்கட்சி

**கொழும்பு, ஜன. 23**

**ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற குண்டு வெடிக்க வைக்கப்பட்டதை போன்று இன்று ஆட்சியை தக்க வைப்பதற்காக தேவாலயத்தில் குண்டை வைக்கின்றனர் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி சபையில் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சபை ஒத்தி வைப்புவேளை மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் வேலைத் திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி புத்தகங்களை அச்சிடுகின்றனர். இந்நிலையில் ஜனாதிபதி செயலாளராக இருந்த பீ. பி. ஜயசுந்தர இந்த நாட்டின் எதிர்காலத்தை இறைவனே பார்க்க வேண்டும் என்று கூறிவிட்டே பதவியில் இருந்து விலகி சென்றுள்ளார்.

ஆட்சிக்கு வரும்போது ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகள் மற்றும் மத்திய வங்கி திருடர்களை கைது செய்வோம் என்று கூறினர்.

ஆனால், இப்போது கால அவகாசம் கேட்கின்றனர். இப்போது கொரோனா நேரத்தில் பிரச்னைகள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில் எதிர்க்கட்சி நாட்டில் மக்களுக்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றது.

ஜனாதிபதியின் கொள்கைத் திட்டத்திற்கும் அப்பாலான வேலைத்திட்டத்தை எதிர்க்கட்சித் தலைவர் செய்கின்றார். மைத்திரிபால சிறிசேன தொடர்பாக ரவி கருணாநாயக்க பைல்கள் இருக்கின்றன எனக் கூறியுள்ளார். அது தொடர்பாக இந்த அரசாங்கம் விசாரணை நடத்தாது.

ஏனென்றால், ஈஸ்டர் தாக்குதலில் என்ன நடந்தது என்று மைத்திரிபால சிறிசேன கூறுவதாக தெரிவித்துள்ளார்.

ஆகவே, அவர் குறித்து அரசாங்கம் எதனையும் முன்னெடுக்கப் போவதில்லை.

இதேவேளை நாட்டில் இனவாதத்தை தூண்டுவதற்கும், இந்த அரசாங்கத்தின் இருப்பை தக்க வைக்கவும் முயற்சிக்கின்றனர். அன்று ஆட்சியை கைப்பற்ற குண்டு தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், இன்று ஆட்சியை தக்க வைத்துக்கொள்ள தேவாலயத்தில் குண்டை வைக்கின்றனர். இது திட்டமிட்டு செய்யப்பட்டதாகவே பார்க்கின்றோம் - என்றார். (ஐ)



## யாழ். பண்ணையில் பொலிஸார் சிரமதானம்!

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் பொலிஸார் சிரமதான பணியை முன்னெடுத்தனர்.

யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரால் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு சமூக பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இதன் ஓர் அங்கமாக யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வழிகாட்டுதலின் கீழ் யாழ்ப்பாண தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் நெறிப்படுத்தலில் பொலிஸாரால் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

பண்ணை கடற்கரை பகுதியில் குறித்த சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது. இந்த சிரமதானப் பணியில் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் சார்பான பொலிஸார் சிரமதானப் பணியை முன்னெடுத்திருந்தனர். (ஐ)

# அறுவடைக்கு இன்னும் 4 வாரங்களே! மானிய பசளைகள் கிடைக்கவில்லை

## கொக்கட்டிச்சோலை விவசாயிகள் கவலை

கொக்கட்டிச்சோலை, ஜன. 23

“அறுவடைக்கு இன்னும் ஆக நான்கு வாரங்கள் இருக்கின்றன. ஆனால், எமக்கு வழங்கப்பட வேண்டிய மானிய பசளையோ மானிய பசளைக்கான கொடுப்பனவோ இன்னும் வழங்கப்படவில்லை. எமது ஜீவாதாரமான பயிர் அழிந்து நாசமாகும் முன்னர் இவற்றை வழங்குமாறு வேண்டுகின்றோம்.”

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கொக்கட்டிச்சோலை கமநலப் பிரிவுக்கு உட்பட்ட கிளாக்கொடிச்சேனை கமநல அமைப்பு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

குறித்த அமைப்பின் தலைவர் சிவஞானம் அகிலேஸ்வரன் பொதுச்செயலாளர் வேலாப்போடி கணேசமூர்த்தி ஆகியோர் ஒப்பமிட்டு இந்த மகஜரை அனுப்பியுள்ளனர். பிரதிகளை விவசாய அமைச் சர், கிழக்கு ஆளுநர் தொடக்கம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அது தொடர்பாக தெரிவிக்கப்படுவதாவது, எமது கண்டத்தில் சுமார் நூறு விவசாயிகளுக்கு இன்னும் பிரஸ்தாப மானிய பொட்டாசியம் குளோரைட் பசளையோ, பசளை மானியமோ இன்னும் கிடைக்கவில்லை. இதனால் உரிய பசளையின்றி, பயிர்கள் மஞ்சள் நிறமாகி வீரியம் குறைந்து வருகிறது. அப்படியே விட்டால் பயிர் அழிந்துபோகும்.



உரிய அதிகாரிகளிடம் கேட்டால் “வந்தால் தருவோம்“ என கைவிரிக்கிறார்கள்.

இன்னும் நான்கு வாரங்களில் பயிர் அறுவடை செய்யப்படும் இன்றைய நிலையில் உடனடியாக பசளையையும் மானியத்தையும் வழங்க ஆவன செய்யவேண்டும் என்றும் கோரப்பட்டது.

இதுதொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் பி. ஜெகநாத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது,

இந்தப் பிரச்னை கொக் கட்டிச்சோலைக்கு மாத்திர மல்ல மட்டக்களப்பின் முழு மாவட்டத்திலும் உள் ளது. மாவட்டத்தில் இன்னும் சுமார் 3 ஆயிரம் பேருக்கு மானிய பசளைக்கான கொடுப்பனவு வழங்கப்படவேண்டும். விரைவில் அது வரும். வந்ததும் குறித்த விவசாயிகளுக்கு உடனடியாக வழங்குவோம் - என்றார். (ஐ)

# கொழும்பு றோயல் கல்லூரிக்கு பேருந்தை வழங்கினார் பிரதமர்!



கொழும்பு, ஜன. 23

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் அலரி மாளிகையில் வைத்து கொழும்பு றோயல் கல்லூரிக்கு புதிய பேருந்தொன்று வழங்கிவைக்கப்பட்டது.

கீர்த்தி மந்த்ரிரத்னவால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட இந்தப் பேருந்து ஜப்பானில் தயாரிக்கப்பட்ட 54 ஆசனங்களை கொண்ட சொகுசு பேருந்தாகும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கொழும்பு றோயல் கல்லூரியின் அதிபர் எம்.வீ.எஸ்.குணதிலகவிடம் பேருந்தின் திறவுகோலை வழங்கிவைத்தார்.

அதனை தொடர்ந்து பேருந்திலுள்ள வசதிகளை பிரதமர் பார்வையிட்டார். இந்தப் பேருந்தை அன்பளிப்பாக வழங்கிய கீர்த்தி மந்த்ரிரத்னவுக்கு பிரதமர் நினைவு சின்னமொன்றை வழங்கியதுடன், கொழும்பு றோயல் கல்லூரியின் அதிபர் எம்.வீ.எஸ்.குணதிலகவால் பிரதமருக்கும் நினைவு பரிசொன்று வழங்கப்பட்டது.

(ஐ)

# வவுனியாவில் அறுவடை ஆரம்பம் பெரும்போக செய்கை பெருவீழ்ச்சி!

வவுனியா, ஜன. 23

வவுனியாவில் பெரும்போக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் ஓர் ஏக்கருக்கு 5 தொடக்கம் 7 மூடைகள் நெல்லே கிடைக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஆண்டு சுமார் 50 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. தற்போது இதன் அறுவடைக்காலம் நெருங்கியுள்ளது. அத்துடன் பல்வேறு பகுதிகளிலும் அறுவடை இடம்பெற்றுவருகின்றது.

இம்முறை நெல்லுக்கான பசளை இறக்குமதிக்கு அரசு தடை விதித்திருந்தமையால் நெல் செய்கைக்கு தேவையான பசளை இல்லாமல் விளைச்சலில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, கடந்தகாலங்களில் ஏக்கருக்கு 30 மூடைகளுக்கு அதிகமாக விளைச்சல் கிடைத்த நிலையில் இம்முறை 5 தொடக்கம் 7 மூடை நெல்லே விளைந்துள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். அத்துடன், தமது வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இம்முறை பசளை இன்மை மற்றும் மருந்துபொருட்களின் விலை அதிகரிப்பு, ஏனைய செலவுகள் என ஒரு ஏக்கருக்கு 60ஆயிரத்திற்கும் மேல் செலவழித்துள்ளோம். எனினும் 30 ஆயிரம் ரூபாயே வருமானமாக கிடைத்துள்ளது.

இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், கடனாளிகளாக ஆக்கப்பட்டுளோம்.

எனவே, பசளை விடயத்தில் முன்னாயத்தமின்றி அரசாங்கம் மேற்கொண்ட முடிவால் நாட்டின் முதுகெலும்பான விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எமக்கான நஷ்டத்தை ஈடுசெய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றும் விவசாயிகள் கோரினர். (ஐ)



# தென்னிலங்கை அரசியலில் எட்டப்படும் இராஜதந்திர அடைவுகள்!

**பேராசிரியர் கே. ரீ. கணேசலிங்கம்**

தென்னிலங்கை அரசியலில் முன்பின்னான விவாதங்கள் அதிக அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தி வருகின்றன. குறிப்பாக, மாற்று அரசாங்கம் பற்றி வாதங்களும் ஆளும் கட்சிக்குள் குழப்பம் என்ற கருத்து நிகழ்வதையும் அவதானிக்க முடிகிறது. ஆனால், அவை அனைத்துமே வெறும் அரசியல் உரையாடல்களாக காணப்படுகின்றனவே அன்றி ஆழமான மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவிடயமாக தென்படவில்லை. அதற்கான அடிப்படை தற்போதைய ஆளும் தரப்பின் இயல்பான பலமும் இராணுவ செல்வாக்கும் ஒருபக்கம் அமைய மறுபக்கத்தில் பிராந்திய சர்வதேச சக்திகளை சரியான முறையில் கையாளும் போக்கையுமே காரணமாகக் கொள்ள வேண்டியுள்ளது.

இதேபோன்று ஜனாதிபதியின் பாராளுமன்ற கொள்கை விளக்க உரையில் தமிழர்களது தேசியப் பிரச்னைக்கு எந்தத் தீர்வும் முன்வைக்கவில்லை என்ற ஆதங்கமும் அதற்கான வார்த்தைகளும் இலங்கைத் தீவின் அரசியலில் இடம்பிடித்த விடயமாக உள்ளது. ஆனால், கடந்த எழுபது வருடமாக தமிழ் அரசியல் தலைமைகளின் ஏமாற்றத்தின் அனு பவப் பாடத்தை எப்படி விளங்கிக் கொள்வதென்பது தெரியாத விடய மாகவே உள்ளது. சிங்கள அரசியல் தலைமைகள் தமிழ் அரசியல் வாதிகளை ஏமாற்றுவதல்ல விட யம். தமிழ் மக்களை தமிழ் அரசி யல்வாதிகள் ஏமாற்றுகிறார்கள் என்பதே கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். இந்தக் கட்டுரையும் தென்னிலங்கையின் அரசியல் நகர்வுகளில் ஏற்பட்டுள்ள போக்கைத் தேடுவதாக உள்ளது.



தென்னிலங்கை ஆட்சியாளர்கள் அதிக இராஜதந்திர அறுவடைகளை எட்டிவருகின்றனர். அதற்கான ஒத்துழைப்பை கட்சி வேறுபாடுகளைக் கடந்தும் ஊடக தர்மத்தை புறந்தள்ளியும் அத்தகைய இராஜதந்திர செய்முறை கையாளப்படுகிறது. குறிப்பாக, இந்தியத் தரப்பைக் கையாண்டது பற்றி இலங்கைக்கான இந்தியத் தூதுவர் மிலிந்த மொர கொடவின் இராஜதந்திரம் பற்றி தென்னிலங்கை ஆங் கில ஊடகங்கள் அதிக பாராட்டை வெளிப்படுத்தி யுள்ளன. இலங்கையின் பொருளாதார நெருக்கடியை வைத்து இலங்கைக்கும் இந்தியாவுக்குமான அரசியலை கையாண்ட விதமே தனித்துவமானதாக அமைந் துள்ளது. வெளிப்படையாகப் பார்த்தால் ஐம்பது வருடங்களுக்கு பின்பு இந்தியா வெற்றி பெற்றதாக கூறப்பட்டாலும் இலங்கை இந்தியாவை திரு கோணமலை எண்ணெய் குதங்களுக்குள் மட்டுப் படுத்திவிட்டது என்ற வாதமே மேலோங்கியுள்ளது. இருந்தபோதும் இரு தரப்பும் ஆரோக்கியமான நகர்வுகளை எட்டியுள்ளன. ஈழத்தமிழார்களுக்கு மட் டும் நிர்க்கதி நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.

அதற்கான அடிப்படையானது தென்னிலங்கை அரசியல் தலைவர்களின் உத்தியால் ஏற்பட்ட அறுவடையாகவே காணப்படுகிறது. சீனா தொடர்பில் கிடைத்த வாய்ப்பை முழுமையாக தென்னிலங்கை ஆட்சியாளர்கள் தோற்கடித்துவிட்டனர். அறிக்கையிடும் தமிழ் அரசியல்வாதிகளால் ஏமாற்றத்தையே தமிழ் மக்களுக்கு வழங்க முடியுமே அன்றி ஆரோக்கியமான இருப்பை ஏற்படுத்த முடியாது.

கொழும்புக்கு வருகை தந்துள்ள தெற்காசிய மற்றும் பொதுநலவாய அபிவிருத்தி விவகாரத்திற்கான அமைச்சர் தாரிக் அஹமட்டை சந்தித்த ஜனாதிபதி புலம் பெயர்ந்த பிரிட்டனில் வாழும் இலங்கையர்களுடன் கலந்துரையாட விருப்பம் தெரிவித்ததுடன் அதற்கான ஏற்பாட்டை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளார். அதேநேரம் இலங்கையில் அனைத்து பிரஜைகளுக்கான மனித உரிமைகளை உறுதி செய்வதை முன்னிறுத்தி செயல்பட்டால் பிரிட்டன் ஆதரவு வழங்கத் தயார் எனவும் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் சமாதானத்தையும் பொறுப்புக்கூறலையும் நல்லிணக்கத்தையும் சமூகங்களுக்கு இடையிலான ஒற்றுமையையும் உறுதிப்படுத்துவதற்கான ஜெனிவாவின் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு தாரிக் அஹமட் கேட்டுள்ளார். வர்த்தகம் முதலீடு மற்றும் பரஸ்பரம் பாதுகாப்பு ஆகியவற்றில் இந்திய - பசுபிக் பிராந்தியத்தின் முக்கியத்துவம் குறித்து பிரிட்டன் விசேட கவனம் செலுத்தியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். அதுமட்டுமன்றி பிரிட்டன் பொருளாதார ரீதியில் தொடர்பை அடிப்படையாகக் கொண்டு வலையமைப்பை கட்டியெழுப்பி வருவதாகவும் அதில் இலங்கையுடன் ஒன்றிணைந்து செயல்பட விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதன் மூலம் பிரிட்டன் முன்வைத்துள்ள அம்சங்களை புரிந்து கொள்வது அவசியமானது.

முதலாவது மனித உரிமைகள் தொடர்பிலேயே பிரிட்டன் அதிக கவனம் செலுத்துவதுடன் ஜெனிவா முன்வைப்புகள் தொடர்பில் கரிசனை கொள்வதை அவதானிக்க முடிகிறது. சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தும் பிரிட்டன் தமிழ்த் தரப்புடனான உரையாடல் தொடர்பில் தெளிவான பதிலை வெளிப்படுத்தாத நிலையைக் காண முடிகிறது. அதாவது தமிழ்த் தரப்புடனான உரையாடலில் தமிழ்த் தரப்பு முன்வைத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் போது உங்கள் கோரிக்கையை ஆக்க பூர்வமாக அணுகுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக மட்டுமே வாக்குறுதியளித்தார். தமிழ்த் தரப்பின் நியா யமான தீர்வு பற்றி எந்தவித பதிலையும் வழங்காமை யின் ஊடாக பிரிட்டனின் உள்நோக்கத்தை உணர முடிகிறது.

இரண்டு இந்தியத் தரப்பிடமிருந்து தென் இலங்கை மீளும் போது ஒரு நெருக்கடியாக பிரிட்டனின் அணுகுமுறை அமைந்துள்ளது போல் தெரிகிறது. ஆனால், பிரிட்டனின் அணுகுமுறை இலங்கையுடனான இந்தோ - பசுபிக் வலையமைப்பை விருத்தி செய்வதாகவே உள்ளது. அதற்கான உபாயங்களையே முதன்மைப்படுத்தியுள்ளதை அவரது உரையாடல் வெளிப்படுத்துகிறது.

பிரதானமாக பிரிட்டனின் பொருளாதார வலையமைப் புக்குள் இலங்கையை உள்ளடக்குவது மற்றும் இந்தோ - பசுபிக் உபாயத்துக்குள் இலங்கையை இணைப்பது ஆகிய இரு இலக்குகளையே தாரிக் அஹமட் வெளிப் படுத்தியுள்ளார். அவரது மனித உரிமை தொடர்பிலான எண்ணமும் கரிசனையும் பிரிட்டனின் அடிப்படை அரசியலாக அமைந்தாலும் ஏனைய விடயங்களை அடைவதற்கான வழிமுறையாகவே மனித உரிமை பற்றிய உரையாடல் காணப்படுகிறது. எவ்வாறு அமைந்தா லும் பிரிட்டனின் நகர்வு இலங்கைத் தீவு பொறுத்த மேற்குலகத்தின் கொள் கையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

மூன்றாவது பிரிட்டன் அமைச்ச ரின் விஜயத்தை ஜனாதிபதி தமக்குச் சாதமாக மாற்ற முன்வைத்துள்ள உபா யமாகவே புலம்பெயர்ந்த பிரிட்டன் வாழ் இலங்கைப் பிரஜைகளுடன் சேர்ந்து இயங்குவதற்கு விரும்பு வதாகவும் அவர்களுடன் உரையாடப் போவதான கோரிக்கை அமைந்துள் ளது. ஜனாதிபதி இலங்கையர் என்று குறிப்பிட்டதாகவே ஊடகப்பரப்பில் செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால், அது ஈழத்தமிழர்களாக இருக்க முடியும் என்ற வாதங்களே முதன்மையாக உள்ளன. ஐ. நா. சபையில் உரையாற்றச் சென்றபோது ஜனாதிபதி புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்களுடன் உரையாடப் போவதாக தெரிவித்திருந்தமை நினைவு கொள்ளத் தக்கது. அப்படியாயின் அத்தகைய நகர்வென்பது தென் இலங்கை அரசியல் தலைமைகளின் இராஜதந்திர செய் முறையாகவே அமைய வாய்ப்புள்ளது. ஏறக்குறை ஈழத் தமிழரின் அரசியல் இருப்பானது புலம்பெயர்ந்த தளத் திலேயே பாதுகாக்கப்படுகிறதைக் காண முடிகிறது. அதனை நோக்கிய நகர்வுகளை மேற்கொள்ள திட்ட மிடும் தென் இலங்கை ஆட்சியாளர்கள் அதனையும் முறியடிப்பார்களாயின் முழுமையாக புலத்திலுள்ள ஈழத்தமிழரின் இருப்பு கேள்விக்குட்படுவதாகவே அமையும். அதன் பின்னர் புலத்திலுள்ள ஈழத்தமிழர்களை கையாள்வது இலகுவானதென தென்னிலங்கை ஆட்சியாளர்கள் கருதுகின்றனர்.

எனவே, தென்னிலங்கை ஆட்சியாளர்களின் இராஜதந்திர செய்முறை கொள்கைப் பிரகடனத்திலும் இந்தியாவுடனும் எப்படி வாய்ப்பானதாக அமைய திட்டமிடப்பட்டுள்ளார்களே அவ்வாறே பிரிட்டனின் அமைச்சரின் விஜயத்தையும் கையாள திட்டமிட்டுள்ளனர். இலங்கைக்கும் பிரிட்டனுக்குமான மூன்று நூற்றாண்டு அடிமைத்தனத்தை விட்டுவிட்டு 75 வருட இராஜீக உறவைக் கொண்டாட இலங்கை ஆட்சியாளர்கள் தயாகின்றனர். இதுவே, தென்னிலங்கையின் தந்திரோபாய நகர்வாகும். இதனை எல்லாம் எதிர்கொள்ள முடியாது தமிழ் அரசியல்வாதிகள் ஆத்திரம் கொள்வதில் பயன் ஏதும் ஏற்படப் போவதில்லை.

அரசியலில் எல்லாவற்றையும் தந்திரமாகவே பார்க்க வேண்டும். இராஜதந்திரம் என்பது ஏமாற்றுத்தனத்தாலும் சதியாலுமே கட்டப்பட்டுள்ளது. கௌடில்யர் கூறும் இராஜதந்திரம் அதனையே முதன்மைப்படுத்துகிறது.




# விமானங்களை பயமுறுத்தும் ஐந்தாவது தலைமுறை

**குரு அரவிந்தன்**

**5ஜி** விமானங்களைப் பய முறுத்துகிறதா? விமானங்களை மட்டுமல்ல, விமானப் பயணிக ளையும்தான்! சில நாட்களாகப் பயணிகளிடையே ஒருவித பயத்தை இது ஏற்படுத்தி இருந்தது. கோவிட்-19 பேரழிவு காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விமான சேவைகள் சில கட்டுப்பாடுகளுடன் தமது முக்கியமான சேவைகளை மீண்டும் ஆரம்பித்த நிலையில், 5ஜி யின் பயமுறுத்தல் வந்திருக்கின்றது.

பயணிகளின் பாதுகாப்புக் கருதிச் சில விமான நிறுவனங்கள் அமெரிக் காவுக்கான சில பறப்புக்களை நிறுத்தி வைத்திருப்பதாக அறிவித்தன. புதிதாக அறிமுகமான 5ஜி செல் போன் சேவைகளிற்கும் விமானங் களில் பாவிக்கும் முக்கியமான விமான தொழில்நுட்பத்திற்கும் இடையிலான தொழில்நுட்ப தொடர்புகளை காரணம்காட்டியே அமெரிக்காவிற்கான சில விமான சேவைகளை நிறுத்தப்பட்டன.

‘5ஜி என்றால் அது என்ன ஏலியனா அல்லது விமான எதிர்ப்புப் பீரங்கியா?’ என்று மெய்நிகர் ஊடாகக் கற்பித்தல் நிகழ்ச்சியில் 5 ஆம் வகுப்பில் கற்கும் ஒரு மாணவன் என்னிடம் கேட்டபோது, மாணவர்களின் சிந்தனை எங்கெல் லாம் பறக்கிறது என்று நினைத்துப் பார்த்தேன். ஏனென்றால் அவர்கள் ஏலியனைப்பற்றிய கதைகளை அறிந்திருக் கிறார்கள், ஆனால் 5ஜி பற்றித் தெரிந்திருக்க வில்லை. புதிய தொழில் நுட்பம் என்பதால் நானும் அதைப்பற்றி அதிகம் அறிந்தி ருக்கவில்லை. ஸ்மாட்போனில் ஒரு தரவை விரைவாகப் பதிவிறக்கம் செய்யவோ அல்லது ஒரு தரவை விரைவாகப் பதிவேற்றம் செய்யவோ இது பயனுள்ளதாக அமையும் என்பதை அறிந்திருந்தேன். அப்படித்தான் இங்கேயும் அறிமுகம் செய்திருந்தார்கள்.

ஜி என்ற ஆங்கில எழுத்து ‘ஜெனரேசன்’ என்பதைக் குறிக்கும். இதுவரை காலமும் 4ஜி தொழில்நுட்பம்தான் பாவனையில் இருந்தது. சுருக்கமாகச் சொல்வதானால் தொழில் நுட்ப வளர்ச்சியின் அடுத்த கட்டம்தான் 5ஜி ஆகும். தொலைபேசித் தொடர்பாடலில் 5ஜி என்பது செல்போன்களின் தொடர்பாடலின் விரைவையும், அதன் புதிய செயற்பாட்டையும் குறிக்கும் ஐந்தாம் தலைமுறைத் தொழில்நுட்ப வசதியாகும். இப்போது இந்த நவீனவசதிகள் சில நாடுகளில் மட்டுமே அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றன.

2019 ஆம் ஆண்டில் இருந்து செல்போன் நிறு வனங்கள் 5ஜிக்கு ஏற்றமாதிரியே தங்கள் புதிய தொலைபேசிகளைத் தயாரிக்கின்றனர். எதிர்காலத்தில் 5ஜி தொழில் நுட்பம் உலகெங்கும் சுமார் 170 கோடி வாடிக்கையாளர்களால் பாவனைப்படுத்தப்படும் என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

முதன் முதலாக வர்த்தக ரீதியாக காற்றலைகள் மூலம் வயர் தொடர்பில்லாமல் 1980களில் நடந்த செல்போன் சேவையைத்தான் ஜி1 என்று குறிப்பிட்டார்கள். மிகப் பெரியதொரு மாற்றத்தை தொலைத்தொடர்பில் இது ஏற்படுத்தி இருந்தது. முன்பு வயர்களால் தொடுக்கப் பட்ட தொலைபேசிகளே பாவனையில் இருந்தன. வீடுகளில், பணியிடத்தில், அல்லது அதற்காக அமைக் கப்பட்ட இடங்களில் இருந்துதான் தொலைபேசியில் கதைக்க முடியும். புதிய தொழில் நுட்ப வசதியால் எங்கும் கொண்டு செல்லக்கூடிய வகையில் இந்த செல்போன்கள் அமைந்திருந்தன. இதனால் விரைவான செய்திப் பரிமாற்றம் ஏற்பட்டது. அதன்பின் 1991 ஆம் ஆண்டு மேலும் பல வசதிகளோடு ஜி2 சேவை பின் லாந்து நாட்டில் அறிமுகமானதால் மேலும் சில வசதி கள் கிடைத்தன. 2001 ஆம் ஆண்டு ஜி3 சேவை அடுத்த கட்டமாக யப்பான் நாட்டில் அறிமுகமானது. வண்டிப் பயணத்தின்போது இடங்களை அறிந்து கொள்ளப் பாவிப்கும் ஜி.பி.எஸ் போன்ற வசதிகளை இது பெற்றுத் தந்தது.

2009 ஆண்டு ஜி4 சேவை தென்கொரியாவில் அறிமுகமானது. ஒரு நொடிக்கு நூறு மெகாபைட் வேகத்தில் இது செயற்பட்டது. அனேக நாடுகளில் இந்த ஜி4 சேவைதான் இப்போதும் பாவனையில் இருக்கின்றது. இதைத் தொடர்ந்து ஜி5 சேவை 2019 ஆண்டு அறிமுகமானாலும், இப்போது சில நாடுகளில் மட்டுமே அறிமுகமாகி இருக்கின்றது. இதற்கு மெமரிக் காட் தேவையில்லை. எங்கோ ஒரு கிராமத்தில் நடக்கும் நிகழ்வை உடனடியாக எங்கிருந்தும் தெளிவாகப் பார்க்க முடியும். இதன் மூலம் ஒரு திரைப்படத்தை முழுமையா கச் சில நொடிகளில் பதிவிறக்கம் செய்துவிட முடியும். திரையிடப் போகும் திரையரங்குகளுக்கு இதன் மூலம் விரைவாகத் திரைப்படங்களைத் தெளிவாகப் பதிவிறக் கம் செய்துவிட முடியும். பிலிம் பெட்டிகளைக் காவிக்கொண்டு திரியவேண்டிய அவசியமிருக்காது.

ஏன் அமெரிக்காவுக்கான சில விமான சேவைகளை தற்காலிகமாக நிறுத்தினார்கள் என்பதற்கான காரணத்தை நீங்கள் அறிந்து கொள்ள விரும்பலாம். விமான சேவைக்கும் இந்த 5ஜிக்கும் என்ன தொடர்பு என்று நீங்கள் நினைக்கலாம். இந்த ஜி5 சேவையைப் பரிமாறும் அன்ரனாக்கள் விமான நிலைத்தற்கு அருகே இருந்தால் அது ஆபத்தானது என்று இதற்கான நிபுணர்களால் சொல்லப்பட்டது. காரணம் விமானம் பறக்கும் உயரத்தைக் கணிப்பதற்கும், அவசரகாலங்க ளில் தரை இறங்குவதற்கும் இதுபோன்ற சக்தி வாய்ந்த சேவைதான் விமானிகளால் இப்போது பாவிக்கப்படு வதால், தவறான தகவல்களால் தரை இறங்கும் போது விபத்துக்கள் ஏற்படலாம் என விமான நிறுவனத்தினர் பயம் கொள்கிறார்கள். பொதுமக்களின் பாவனைக்கு இது வந்துவிட்டால், விடயம் தெரிந்த யாராவது தவறாக, அல்லது விஷமத்தனமாகக் கட்டளைகளைப் பிறப்பித்தல், நூற்றுக் கணக்கான விமானப் பயணிகளின் உயிர் இதில் தங்கி இருக்கின்றது. விமான ஓட்டு னரை நம்பி விமானத்தில் ஏறும் அப்பாவிப் பயணிகளைப் பலிக்கடாவாக்கக் கூடாதல்லவா?

அமெரிக்காவின் சில விமானநிலையங்களிற்கான சேவைகளை நிறுத்தியுள்ளதாக எமிரேட்ஸ் விமான சேவை நிறுவனத்தினர் முதலில் அறிவித்துள்ளனர். அதைத் தொடர்ந்து பயணிகளின் பாதுகாப்புக் கருதி எயர்இந்தியா, எயர் நிப்போன், ஜப்பான் எயர்வேய்ஸ், லுப்ஹன்ஸா, பிரிட்டிஷ் எயவேய்ஸ் போன்ற சில விமானநிறுவனங்கள் அமெரிக்காவில் உள்ள ஒன்பது விமான நிலையங்களுக்கான தங்கள் விமானச் சேவை களைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளன. எயர் பிரான்ஸ், கே.எல்.எம், வேஜின் அட்லான்டிக் போன்ற நிறுவனங்கள் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுகின்றன. டெல்டா எயலைன்சும் காலநிலையைப் பொறுத்து முடிவெடுக்க இருப்பதாக அறிவித்திருக்கின்றது. சுமார் 10 விமான நிறுவனங்களின் 1000 தினசரி சேவைகள் இதனால் பாதிக்கப்பட்டன. அல்டிமீட்டர்கள் பொருத் தப்பட்ட சில விமானங்களின் வகைகள், Airplane models with one of the five cleared altimeters include some Boeing 717, 737, 747, 757, 767, 777, MD-10/-11 and Airbus A300, A310,A319, A320, A330, A340, A350 and A380 models.

‘ரேடார் அல்டிமீட்டர்கள்’ என்று சொல்லப்படுகின்ற உபகரணங்கள் அனேகமான விமானங்களில் பொருத்தப் பட்டுள்ளன. பறப்பின் உயரத்தையும், அவசரதேவை யின் போது தரை இறங்குவதற்கும் இந்தக் கருவிகளே பாவிக்கப்படுகின்றன. அதிவேக 5ஜியின் அறிமுகத்தால் விமானத் தொழில்நுட்பத்திற்குப் பாதிப்பு ஏற்படலாம் என்பதுதான் இப்போது உள்ள பிரச்னை. வெள்ளம் வரமுன்பு அணை கட்டுவது நல்லது தானே என்ற முடி வோடுதான் சில விமான சேவைகளை நிறுத்தி வைத்தி ருந்தனர். 5ஜியின் பாவனைக்காக இந்த விமான நிலை யங்களுக்கு அருகே இருக்கும் அன்டனாக்களால் பாதிப்பு ஏற்படலாம் என விமான ஓட்டிகள் நம்புகின்றார்கள். எனவே அதற்கு ஒரு மாற்று வழியைக் கண்டு பிடிக்கும் வரை, தற்காலி கமாகச் சேவைகளை நிறுத்தி இருக்கிறார்கள்.

கனடாவில் சுமார் 49 நகரங்களில் இப்போது இந்த சேவை பாவனைக்கு வந்து விட்டது. சென்ற வருடம் கனடா, அமெரிக்கா, பிரித்தானியா, சீனா, தென் கொரியா, ஆஸ்திரேலியா, சுவிஸ், ஜெர்மனி, ஸ்பெயின் போன்ற முன்னேறிய சில நாடுகளில் மட்டுமே இந்த சேவை பயன்படுத்தப்பட்டு வந்தது. இப்போது பிரான்ஸ், தாய்லாந்து, இந்தியா போன்ற சுமார் 40 நாடுகளில் இந்த 5ஜி சேவை அறிமுகம் செய்யப் பட்டிருக்கின்றது. இந்தியாவில் ரிலையன்ஸ் ஜியோ டெலிகாம் நிறுவனம் 5ஜியை அறிமுகம் செய்வதில் தற்போது முனைப்புடன் செயற்படுகின்றது. இந்தச் சேவை அறிமுகம் செய்யப்பட்டால், ஜியோ நிறுவ னத்தின் சுமார் 40 கோடிக்கும் மேற்பட்ட வாடிக்கை யாளர்கள் 1 ஜிபிபிஎஸ் வேகத்தில் இணையத்தளத்தைப் பயன்படுத்த வாய்ப்புக் கிடைக்கும்.

ஜியோ நிறுவனம் இதை அறிமுகம் செய்தால் 5ஜி சேவைகள் அனைத்தும் ஜியோ இன்போகாம் சொந்த மாக உருவாக்கிய தொழில்நுட்பத்தின் வாயிலாக இந்தியாவின் டிஜிட்டல் பொருளாதாரத்தின் வெற்றிக்கு இது ஒரு முன் உதாரணமாக அமையலாம் என்று எதிர்பார்க்கிறார்கள்.

தெற்காசியாவில் பரீட்சார்த்தமாக 5ஜியை 2019 ஆண்டு பயன்படுத்திய நாடுகளில் இலங்கையும் அடங்கும்.

# இந்திய பிரதமரை சந்திப்பதற்காக தயாரிக்கப்பட்ட கடிதங்கள்...



## இந்தியத் தலையீட்டை விரும்பாத தமிழரசுக் கட்சி -02-

**மறவன்புலவு க. சச்சிதானந்தன்**

**நெடுமாறன் சந்திப்பு**

வாங்கோ சச்சி, நெடுமாறனிடம் போவோம் எனக் கவிஞர் கூறினார். நேரே நெடுமாறனிடம் போனோம். விவரத்தைச் சொன்னேன். ஏன் இப்படிச் செய்கிறார்கள்? கவலைப் படாதீங்க, எல்லாம் நல்லபடி நடக்கும் எனக் கூறி எங்கள் மூவரையும் வழியனுப்பினார்.

அன்று இரவு மாவை சேனாதிராசாவுக்கு நெடுமாறனிடமிருந்து தொலைப்பேசியில் செய்தி. 4.9இல் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வந்துவிடுவார், உடன் பிரதமரைச் சந்தியுங்கள் என்பேத செய்தியின் சாரம் என மாவை சேனாதிராசா என்னிடம் சொன்னார்.

இரா. சம்பந்தன் 5.9 இரவுதான் வருகிறார், அவர் வந்த பின்பு முடிவு செய்வோம் என்பைதயும் மாவை சேனாதிராசா சொன்னார்.

2.9 காலை நெடுமாறன் என்னிடம் தொலைப்பேசியில் பேசினார். கவலைப் படாதீங்க, எல்லாம் நல்லபடி நடக்கும்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாளையோ மறு நாளோ வருவார், வந்ததும் டில்லிக்குப் போகலாம் என்றார். மாவை சேனாதிராசாவுக்கும் அத்தகைய செய்தி இரவே வந்துள்ளைத அவரிடம் கூறினேன்.

**வைகோவின் செய்தி**

இதற்கிடையில் வைகோ என்னை அழைத்தார். 9.9க்குமுன் சந்திப்பு நிகழவேண்டும். 10.9 பிரதமர் வெளிநாடு போக உள்ளார். போனால் 20.9க்குப் பின்னர் தான் நாடு திரும்புவார் என்றார் வைகோ.

கலைஞரோ தமிழ் நாட்டின் முதலமைச்சர். மூத்த அரசியல்வாதி. ஏற்கனவே ஈழத்தமிழரின் சில செய்கைகள் அவரைப் புண்படுத்தியுள்ளன. அவரைச் சந்திக்காமல் பிரதமரைச் சந்திப்பது முறையல்ல. அவருடைய வாழ்த்துகளுடன் செல்வேத ஈழத் தமிழருக்கு நல்லது, எனவே அந்தச் சந்திப்புக்கு முயல்வோம் என்றார் மாவை சேனாதிராசா.

**கலைஞர் தவிர்க்கிறார்**

காலை வேளைகளில் தொலைப்பேசியில் அழைத் தால் கலைஞருடன் நேரில் பேசும் வாய்ப்புகள் உண்டு. என்னோடு உள்ள பரிச்சியத்தால் அவர் பேசுவதுண்டு.

எனவே 3.9 காலை 6 மணியளவில் கலைஞர் இல்லத்துக்கு அழைத்தேன். அவர் உடற் பயிற்சியில் இருக்கிறார் என்றார்கள். குழப்பாதீர்கள் பின்னர் அழைக்கிறேன் எனக் கூறிய நானே நேரில் போய்ப் பேசுவேதே முறை எனக் கருதினேன்.

அன்று முற்பகலில் உதவியாளர்களிடம் பேசினேன். உங்கள் கடிதத்தை இன்னமும் பார்க்கவில்லை என்றார்கள்.

எனக்கு மனம் கேடகவில்லை. இரா. சம்பந்தன் வரும் வரை பார்த்திருப்பதா? மாவை சேனாதிராசா கடிதம் எழுதினால் என்ன?

**மருத்துவர் இராமதாஸ்**

3.9 காலை 9 மணிக்கு மருத்துவர் இராமதாசின் உதவியாளரைத் தொலைப்பேசியில் அழைத்தேன். மருத் துவர் இராமதாஸே நேரில் பேசினார். பத்து மணிக்குச் சந்திப்போம் என்றார்.

மாவை சேனாதிராசாவும் நானும் சென்றோம். 22 உறுப்பினருள் 10 உறுப்பினராவது சேர்ந்து செல்ல வேண்டும் பிரதமரிடம் விவரங்களைச் சொல்லுங்கள் அழுத்தம் திருத்தமாகச் சொல்லுங்கள் என வாழ்த்தி அனுப்பினார்.

இரா. சம்பந்தன் சென்னைக்கு வராமல் எதையும் செய்யமுடியாது என்பதில் மாவை சேனாதிராசா முடிவாக இருந்தார்.

**கலைஞரிடம்**

8.9.2006 அல்லது 9.9இல், பிரதமரைச் சந்திக்கப் போகிறோம். உங்களைச் சந்திக்காமல் பிரதமரைச் சந்திப்பதும் முறையல்ல. 7.9 காலை எமக்கு நியமனம் தாருங்கள் எனக் கேடடு 4.9 நாளிட்ட கடிதம் ஒன்றை மாவை சேனாதிராசா எழுத, அதையும், 1.9 கடிதப் படியையும் இணைத்துக் கொண்டு, 4.9 காலை 9 மணிக்கு நேரில் கலைஞரின் இல்லம் சென்றேன்.

அங்குள்ள உதவியாளர் யாவரும் அன்புடன் என்னை வரவேற்று, கடிதங்களைப் பெற்றுக் கொண்டு, உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறினர். மாலையில் தொடர்பு கொள்ளுங்கள் என்றனர்.

மாவை சேனாதிராசாவும் நானும் மாறி மாறிக் கலைஞரின் உதவியாளருடன் தொடர்பு கொண்ட வாறிருந்தோம். சாதகமான பதில் வரவேயில்லை.

**சம்பந்தன் சென்னையில்**

5.9.2006 மாலை சம்பந்தன் சென்னை வந்தார். 6.9 காலை, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பத்மினி சிதம்பரநாதன் இருவரும் சென்னை வந்தனர். சிவாஜிலிங்கம் சென்னையிலேயே தங்கியிருந்தார்.

மாவை சேனாதிராசா, சிவாஜிலிங்கம், கஜேந்திர குமார் பொன்னம்பலம், பத்மினி சிதம்பரநாதன் நால்வரும் 6.9 மதியம் எனதில்லத்தில கூடிப் பிரதமரின் சந்திப்புப் பற்றிப் பேசினோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இந்தியா அங்கீகரிக்குமாறு பிரதமரிடம் கோருவது என்ற கருத்தில் அனைவருக்கும் ஒற்றுமை இருந்தது.

பிரதமர் அலுவலக மூத்த அலுவலர் ஓர்மிஸ்ஸைச் சில மாதங்களுக்கு முன் டில்லியில் சந்தித்த பொழுது இதே கருத்தை மாவை முன்வைத்திருந்தார்.

இரா. சம்பந்தன் சென்னையில் இருந்தாராயினும் அவர் இந்த நால்வரையும் 6.9அன்று சந்திக்கவில்லை. இவர்களும் அவரைச் சந்திக்கவில்லை.

**மடியில் நெருப்பு**

நெருப்பை மடியில் கட்டிக்கொண்டிருப்பது போன்ற உணர்வு எனக்கு. பிரதமர் சந்திக்க ஒப்புதல் தந்துள்ளார். சந்திப்புக்கு நேரம் ஒதுக்கக் கேட்டு நாம் அவருக்குக் கடிதம் அனுப்பவில்லை.

30.8இல் ஒப்புதல் தந்தவர், 10.9இல் வெளிநாட்டுக்குப் புறப்பட இருப்பவர், ஏதோ நாம் கேட்ட உடனே நேரம் ஒதுக் குவார் என்ற துணிவு 6.9 வரை எமக்கு இருப் பது அசாத்தியத் துணிவுதான் எனக் கருதினேன்.

ஆனாலும் உந்துதலை விடாமல் கடிதம் அனுப்புவோமா எனத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன்.

விதியே விதியே தமிழ்ச் சாதியை என்ன செய்தாய்? என்ற என் மனக் குமுறலை அதே சொற்களால் இந்த நால்வரிடமும் கூறினேன்.

7.9 காலை எனதில்லத்தில் இந்த ஐவரும் சந்திப்பது என இரா. சம்பந்தனிடமிருந்து தொலைப்பேசிச் செய்தி வந்தது.

**பிரதமர் சந்திக்க ஒப்பார்?**

காலை 10.30 மணியளவில் எனதில்லத் தில் இந்த ஐவரும் கூடினர். நானும் அங்கி ருந்தேன். பிரதமர் எங்களைச் சந்திக்க ஒப்ப மாட்டார், எனவே நியமனம் கேட்டு அவருக் குக் கடிதம் எழுதுவதில் பயனில்லை என்றார் இரா. சம்பந்தன்.

மற்ற நால்வருக்கும் அந்தக் கருத்தில் உடன்பாடில்லை. அதை அவர்கள் ஒவ்வொருவராக விளக்கிக் கூறினர்.

பிரதமர் அலுவலகத்தில் என்ன செய்வார்கள் என முன்கூட்டியே முடிவு செய்வதற்கு எமக்கு உரித்தில்லை. பிரதமர் அலுவலகம் செய்ய வேண்டிய முடிவை நாம் இங்கிருந்து செய்யவேண்டாம். மூன்று படி நிலைகளாக முயல்வோம்.

**கலைஞரை மீறலாமா?**

பிரதமருக்குக் கடிதம் எழுதுவோம், கலைஞருக்குக் கடிதம் எழுதுவோம், பிரதமரிடம் என்ன கேட்கப் போகிறோம் என்பைதயும் எழுதி வைத்திருப்பபோம் என அழுத்தம் திருத்தமாகச் சம்பந்தனிடம் கூறினேன்.

தமிழகத்தின் முதல்வர் கலைஞர். அவரை மீறி, அவ ரின் ஒப்புதல் பெறாமல் பிரதமரிடம் போவது முறை யல்ல. கலைஞரின் ஒப்புதலைப் பெறுவோம் அதன் பின்னர் பிரதமரிடம் செல்வோம் என்றார் இரா. சம்பந்தன்.

**கலைஞரின் மனோ நிலை**

தமிழக சட்டசபைத் தேர்தலுக்கு முன்னர், பெப்ரவரி 2006இல், மாவை சேனாதிராசாவும் நானும் கலைஞரைச் சந்தித்து நீண்ட நேரம் உரையாடியிருந்தோம்.

கலைஞருடைய வழிகாட்டலில் டில்லியுடன் தொடர்பு கொள்ள விரும்புகிறோம் என்று அப்பொழுது அவரிடம் கூறினோம்.

நீங்கள் நேரே டில்லியுடன் தொடர்புகொள்ளுங்கள், என அவர் அப்பொழுது சொன்னார். அதற்குரிய வலுவான காரணங்களையும் கலைஞர் எமக்கு விளக் கினார்.

ஈழத்தமிழருக்கு நன்மை எனில் கலைஞர் ஒரு பொழு தும் குறுக்கே நிற்கமாட்டார். ஈழத் தமிழர் தமக்குரி யதை விரைந்து பெறவேண்டும் என்பதே கலைஞரது உளமார்ந்த விருப்பம். அவர் தில்லிக்கு எங்களைப் போகச் சொல்லிவிட்டார். எனவே கலைஞரைக் காரணம் காட் டிச் சந்திப்பபைத் தவிர்க்கவேண்டாம் எனக் கூறினேன்.

அந்தச் சந்திப்பில் நிகழ்ந்ததை இரா.சம்பந்தனுக்கும் மற்ற நால்வருக்கும் மாவை சேனாதிராசா விரித்துக் கூறினார்.

**ஒருவாறு கடிதங்கள்**

மதியம் 1.30 மணியளவில் கலைஞருக்கான தமிழ்க் கடிதத்தை முதலில் நான் எழுதினேன். பிரதமருக்கான ஆங்கிலக் கடிதத்தை இரா.சம்பந்தன் எழுதினார். இரண் டையும் நானே தட்டச்சுச் செய்து கொடுத்தேன். சம்பந் தன் கையெழுத்திட்டுத் தந்தார்.

பிரதமரின் இல்ல மற்றும் அலுவலகத் தொலைநகல் எண்களைத் தேடிக் கொடுத்தேன். தொலைநகலை அனுப்பிவிட்டதாக மாவை சேனாதிராசா எம்மிடம் வந்து கூறிய பொழுது 7.9.2006 மணி பிற்பகல் 2.30. கலைஞருக்கும் தொலைநகலாகக் கடிதம் போய்ச் சேர்ந்தது.

சரி பிறகு சந்திப்போம் எனச் சம்பந்தன் எழுந்தார். பிரதமருக்கு என்ன சொல்லப் போகிறோம் என்பைதத் தெளிவாக்கி, எழுத்தில் தயாரித்து முடிப்போம் என நான் வலியுறுத்த, சம்பந்தன் மீண்டும் அமர்ந்தார். எழுதினார்.

**அடுத்த வாரமும்..**

# அவர்களே சாதனையாளர்கள்!



# சிவபூமி மனவிருத்தி கல்வியினூடாக ஒரு சமூகப் புரட்சி

கணபதி சர்வானந்தா

குறிப்பாக மன விருத்தி குன்றிய பிள்ளைகளை வைத்திருக்கின்ற பல பெற்றோர்கள் ஒரு வித மன இறுக்கத்தோடும், அப்பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய ஏக்கத்தோடும் தமது வாழ்நாளைக் கழிப்பது அவதானிக்கப்பட்ட விடயம். ஒரு சமூகத்தின் முன்னேற்றத்துக்கு அச் சமூகம் சார்ந்த குடும்பங்கள் முதலில் மகிழ்ச்சிக்குரியதாக இருக்க வேண்டும் என்பது நடைமுறை. மேலைத் தேச நாடுகள் அதனைக் கருத்தில் கொண்டு செயற்படுகின்றன. அதற்குரிய வசதி வாய்ப்புகளைச் செய்து கொடுக்கின்றன.அதனால் அங்கு சமூக முன்னேற்றம் என்ற விடயம் தங்குதடையின்றி நடைபெறுவதைக் காணலாம்.



பொதுவாக வளர்முக நாடுகளில் இவர்களைப் போன்ற மன விருத்தி குன்றிய பிள்ளைகளை ஒரு சுமையாகப் பார்ப்பதில்லை. அதனை ஒரு வரமாகப் பார்க்கின்றவகையில் அவர்கள் சமூகக் கட்டமைப்பை அமைத்திருக்கிறார்கள். அதனை ஒத்ததாக எமது சுற்றாடலிலும் ஒரு பாடசாலை உண்டு என்ற பெருமையை எமக்கு "சிவபூமி பாடசாலை" தந்திருக்கிறது. இவ்வாறானதொரு சமூகப் பொறுப்பை உணர்ந்து செயற்பட்ட கலாநிதி ஆறு திருமுருகனுக்கும் அவர் சார்ந்த பொறுப்பு மிக்க செயற்பாட்டாளர்களுக்கும் எமது சமூகம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறது.

மனவிருத்தி குறைந்தவர்களாக வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்த பிள்ளைகளை வாரி அணைத்து அன்பு பாராட்டினர். அவர்களும் சாதனைக்குரியவர்கள் என்ற விழிப்புணர்வைச் சமூகத்துக்கு ஏற்படுத்தினர். அவை மிகவும் கடினமான காரியங்கள் என்பதனை அனைவரும் அறிவர். அப்படிப்பட்ட ஒரு காரியத்தை நடைமுறைச் சாத்தியப்படுத்தி இருப்பதோடு அதில் வெற்றி கொண்டவர்களாகவும் அவர்கள் வலம் வருகின்றனர். அவர்கள் வேறுயாருமல்லர், எம்மவர்கள். கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலைச் சமூகத்தினர் ஏற்படுத்தியிருக்கும் சாதனை மகத்தானது. அது பற்றியே இந்தக் கட்டுரையில் நான் பதிவிடுகிறேன். அப் பாடசாலை நிறுவுனர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களின் வழிகாட்டலில் பாடசாலையைத் திறம்பட நடத்தும் கல்லூரி முதல்வரும், ஆசிரியர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

2019 ஆம் ஆண்டுக்கான, அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட, 'சுவசக்தி' மதிப்பீட்டுத் திட்டத்தின் கீழ், மிகச்சிறந்த மாற்றுத் திறன் பிள்ளைகளுக்கான, வாழ்க்கை மேம்பாட்டுத் திறன் வழங்கும் பாடசாலையாக, கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை முதல் நிலை தேசிய விருதைப் பெற்றுள்ளது.

மன வளம் குன்றிய பிள்ளைகளையும் வளப்படுத்தி அவர்களையும் சாதனையாளர்களாக ஆக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு ஆரம்பிக்கப்பட்டதே சிவபூமி மனவிருத்திப் பாடசாலை. இற்றைக்குப் பதினேழு ஆண்டுகளுக்கு முன்னர் கலாநிதி ஆறு திருமுருகன் கண்ட கனவு இன்று நனவாகி இருப்பது பெருமைக்குரியது மட்டுமல்ல பாராட்டுக்கும் உரியது. ஓட்டு மொத்தச் சமூகத்தின் சுமையைத் தன் தோழில் சுமப்பதை ஒத்த பொறுப்பொன்றை ஏற்றுக் கொண்ட பயணத்தில்.. அப்பாடசாலையானது பல வெற்றிகளைத் தன்னகப் படுத்தியிருப்பது சமூகத்தில் பலருக்குப் பலவிதமான நம்பிக்கையைத் தோற்றுவித்திருக்கிறது. அவ்வாறானதொரு நம்பிக்கையைக் கட்டி எழுப்புவதென்பது இலகுவானதல்ல.. அதற்குப் பின்னால் உள்ள உழைப்பு என்பது பெரியது. அதுவும் பாராட்டுதற்குரியது.

"எமது பாடசாலை வெற்றி பெறுவது இதுவே முதல் தடவை அல்ல. இதற்கு முன்னரும் பல விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றியிருந்த எமது பாடசாலை மாணவர்கள் அப்போட்டிகளில் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.குறிப்பாக விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்றுச் சாதனை படைத்து எமது மண்ணுக்குப் புகழ் பெற்றுத் தந்ததோடு எமது பாடசாலையை உலகத் தரத்துக்கு உயர்த்தியுள்ளனர். அதையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம். வீட்டு வாசலின் எல்லையைத் தாண்ட முடியாமல், வீட்டின் கதவோரம் நின்று எட்டிப் பார்த்து நாங்களும்வெளியில் சென்று வர முடியுமா? என்று ஏங்கிய பிள்ளைகளை, இங்கிருந்து பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள கிறிஸ் நாட்டுக்கும், அவுஸ்திரேலியாவுக்கும், அமெரிக்காவுக்கும் அழைத்துச் சென்று மாபெரும் சாதனைகளுக்குச் சொந்தக்காரர்களாக்கியதையிட்டு கோண்டாவில் சிவபூமி மன விருத்திப் பாடசாலை பெருமைகொள்கிறது" என கலாநிதி ஆறு திருமுருகன் மகிழ்வோடு தெரிவித்திருக்கிறார்.

பாடசாலை பற்றித் தொடர்ந்து அவருடன் பேசினோம். முன்னெடுக்க வேண்டிய பணிகள் பற்றிய உரையாடலின்போது அவர் சமூகத்துக்கு முன்னால் சில வேண்டுதலை முன்வைக்கிறார். அதனை வெறும் வேண்டுதல் என்பதைவிட சமூகம் உணர வேண்டிய ஒரு முக்கியமான பொறுப்பென்று குறிப்பிடுவதே பொருத்தமானதாக இருக்கும் என எண்ணுகிறேன்.

**உங்கள் பாடசாலைக்குக் கிடைத்துள்ள இவ் விருது பற்றி?**

உண்மையில் இதனை நாம் பெற்றது பெரு வெற்றி என்று சொல்வதில் பெருமைப்படுகிறேன். நாம் பேணுகின்ற தரத்தை மிகவும் துல்லியமாக அளவிடுவதற்காக, அதுவும் ஒரிரு முறையல்ல, பல தடவைகள், இலங்கைச் சமூக சேவைத் திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு எமது பாடசாலைக்கு விஜயத்தை மேற்கொண்டது. அவர்கள் எமது நடைமுறைகளைக் கூர்ந்து கவனித்தனர். பல ஆய்வுகளை மேற்கொண்டனர். அதன் பின்னரே எமது பாடசாலையை விருதுக்காகப் பரிந்துரைத்தனர்.

தற்போது அந்தத் தேசிய விருதினூடாக உங்கள் பாடசாலைக்குக் கிடைத்துள்ள அங்கீகாரம் என்ற விடயம் பெரியது. அதனூடாக ஒரு மூன்றாவது தரப்பு உங்கள் பாடசாலையின் தரத்தை உறுதி செய்துள்ளது. எனவே அதனை மேலும் வலுப்படுத்த அல்லது விரிவுபடுத்த என்ன முயற்சிகள் செய்ய வேண்டும்? அல்லது சமூகம் எவ்வாறு தமது பங்களிப்பை வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? அரச நிறுவனங்கள் எவ்வாறு உதவலாம்? என ஆறு திருமுருகனிடம் கேட்டோம்.

குறிப்பாக வட பகுதியிலே பிறப்பால் மன வளர்ச்சி குன்றிய பிள்ளைகள் யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பலர் இருக்கின்றனர்.எமது பாடசாலைகளில் ஏறத்தாழ 175 மாணவர்கள் அனுமதி பெற்றிருக்கிறார்கள் அவர்களில் 125 மாணவர்கள் கிரமமாகப் பாடசாலைக்கு வருகின்றனர். மன வளர்ச்சி குன்றிய பல பிள்ளைகளைப் பெற்றோர் இன்னும் தமது வீடுகளில் வைத்திருக்கிறார்கள். அவர்களை எதுவித கல்விக்காகவோ அல்லது பயிற்சிகளுக்காகவோ வெளியே செல்ல அனுமதிப்பதில்லை. தற்போது அரச பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர் கல்விக்கென இட ஒதுக்கீடுகள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் அதில் சமூகம் அவ்வளவு கவனம் செலுத்தியதாக இல்லை. அவை அதிக வெற்றியளித்ததாகவும் இல்லை.

குறிப்பாக எமது பாடசாலையை எடுத்துக் கொண்டால் அங்கே கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பல பயிற்சிகளைப் பெற்றவர்கள். விசேட தேவையுடைய மாணவர்கள் பற்றிய கல்வியையும் அனுபவத்தையும் இந்தியாவில் சென்று பெற்றவர்கள். அவர்களை இந்தியாவுக்கு அனுப்பிப் பயிற்சிகள் பெற வைத்திருக்கிறோம். அதனால் இங்கு கல்வி கற்கும் மாற்று வலுவுடைய விசேடமாக மன விருத்தி குன்றிய மாணவர்களுக்கு மிகவும் உயர்தரமான கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்குகிறோம். அதனூடாக அவர்கள் பல சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளனர். பதக்கங்களை வென்றிருக்கின்றனர். அதுவும் அவர்களில் ஒருவர் ஒரு முறை அமெரிக்காவி நடைபெற்ற போட்டியில் பங்குபற்றி அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஒபாமா அவர்களின் பாரியாரிடமிருந்து விருதினைப் பெற்று வந்துள்ளனர். எனவே வீடுகளில் முடங்கிக் கிடந்த அவர்களைச் சர்வ தேச அரங்கிற்கு அழைத்துச் சென்று விருதுகளைப் பெற வைத்ததென்பதை நாம் ஒரு சாதாரண விடயமாகக் கருத முடியாது. அதற்குப் பின்னால் பலரது உழைப்பும், நேர அர்ப்பணிப்பும் இருந்திருக்கிறதென்பதே உண்மை.

குறிப்பாகத் தென்னிலங்கையில் உள்ள கல்விமான்காளால் போற்றப்படும் பாடசாலையாக எமது பாடசாலை இருக்கிறது. இருந்தும் வடக்கிலே எமது பாடசாலையை இன்னும் அறியாதவர்களும் இருக்கின்றனர். ஏனெனில் இது போன்ற மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளை வீட்டிலே வைத்துப் பராமரிக்கின்ற நிலைமை தொடர்ந்து காணப்படுகிறது. குறிப்பாக வடமராச்சியில் இருந்து எமது பாடசாலைக்கு பிள்ளைகளின் வரவு குறைவாகக் காணப்படுகிறது. அங்கிருந்து வந்து போவதற்குரிய விசேட போக்குவரத்து வசதிகளைச் செய்திருக்கிறோம். அவர்கள் அதற்கு விரும்பினால் பணம் தரலாம். கட்டாயம் இல்லை. இலவசமாகவும் வருவதற்கு அனுமதிக்கிறோம்.தினமும் அந்தப் போக்குவரத்துச் சேவை நடைபெறுகிறது. அது மட்டுமல்லாது பாடசாலைக்கு வரும் மாணவர்களுக்குத் தினமும் சிற்றுண்டி. தேநீர், மதிய போசனம் எனப் பல வசதிகளை யும் செய்து கொடுத்திருக்கிறோம். அவர்களுக்கென விசேட சீருடைகள் வழங்கப்படுகின்றன. அவர்களின் சுகாதாரத் தேவைக்கு முன்னுரிமை விழங்கப்படுகிறது. **(16 ஆம் பக்கம் பார்க்க...)**

# பழமையான இராட்சத பவளப்பாறை கண்டுபிடிக்கப்பட்டதில் என்ன சிறப்பு?

பிரெஞ்சு பொலினீசியாவின் தஹிதி கடற்கரையில் 100 அடி ஆழத்தில் 3 கிலோ மீட்டர் பரப்பில் “பழமையான” பவளப்பாறையை கடல்சார் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இத்தகைய ஆழத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய பவளப்பாறைகளில் இது ஒன்று என்று இந்த பணியை வழிநடத்திய ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பு கூறுகிறது.

இந்த சுற்றுச்சூழல் அமைப்புகளில் இதுபோன்று இன்னும் பல இருக்கலாம் என்றும், நமக்கு அதுகுறித்து தெரியவில்லை எனவும் யுனெஸ்கோவைச் சேர்ந்த டாக்டர் ஜூலியன் பார்பியர் கூறியுள்ளார்.

“நாங்கள் அவற்றை வரைபடமாக்குவதற்கும் , அவற்றைப் பாதுகாப்பதற்கும் பணியாற்ற வேண்டும்,” என்று அவர் கூறினார்.

கடலுக்கு அடியில் என்ன இருக்கிறது என்பது பற்றிய நமது அறிவை இந்த குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்பு விரிவுபடுத்தியுள்ளது என்று யுனெஸ்கோவின் இயக்குநர் ஜெனரல் ஆட்ரி அசோலே கூறுகிறார்.

நவம்பரில், கடலின் ”ஒளிமங்கிய மண்டலம்” என்று அழைக்கப்படும் ஆழத்திற்கு, டைவிங் பயணம் மேற்கொண்டபோது இந்த பாறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது உலகளாவிய கடற்பரப்பு-வரைபடம் அமைக்கும் பணியின் ஒரு பகுதியாகும்.

“கண்ணுக்கு எட்டிய தூரம் வரை நீண்டு கிடக்கும் அழகான, ராட்சத பவளப்பாறைகளைக் காண்பது அற்புதமாக இருந்தது” என்று நீருக்கடியில் புகைப்படம் எடுக்கும் பிரெஞ்சு கலைஞர் அலெக்சிஸ் ரோசன்ஃபீல்ட் கூறுகிறார்.

“அது ஒரு கலை வேலைப்பாடு போல இருந்தது,” என்று அவர் மேலும் கூறினார்.



பவளப்பாறைகள் கடலில் மிகவும் பாதிப்படையக்கூடிய சுற்றுச்சூழல் அமைப்புகளில் ஒன்றாகும். மாசு, உயரும் கடல் வெப்பநிலை மற்றும் நீரில் கரையும் கார்பன்-டை-ஆக்சைடு உமிழ்வுகளால் ஏற்படும் வேதியியல் மாற்றம் ஆகியவற்றால் பாதிக்கப்படக்கூடியவை இவை.

கடலைப் பற்றி நாம் இன்னும் எவ்வளவு கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை இந்த கண்டுபிடிப்பு காட்டுகிறது என்று எடின்பரோ பல்கலைக்கழகத்தின் முன்னணி கடல்சார் விஞ்ஞானியான பேராசிரியர் முர்ரே ராபர்ட்ஸ் கூறுகிறார்.

“நாம் இன்னும் ஆழமற்ற வெப்பமண்டல கடல்களுடன் பவளப்பாறைகளை தொடர்புபடுத்து கிறோம். ஆனால், இங்கு முன்னர் அறியப்படாத ஒரு பெரிய பவளப்பாறை அமைப்பைக் காண்கிறோம்.”, என்கிறார்.

“ஆழமான நீரை விட ஆழமற்ற நீர் வேகமாக வெப்பமடைவதால், இந்த ஆழமான கடல் நீரடிப் பாறை அமைப்புகள் எதிர்காலத்தில் பவளப்பாறைகளுக்கு அடைக்கலமாக இருப்பதைக் காணலாம். இந்த சிறப்பு இடங்களை வரைபடமாக்குவதற்கும், அவற்றின் சுற்றுச்சூழல் பங்கைப் புரிந்துகொள்வதற்கும், எதிர் காலத்திற்காக அவற்றைப் பாதுகாப்பதற்கும் நாம் பணியாற்ற வேண்டும்”, என்று அவர் விவரிக்கிறார்.

இந்த அழுத்தங்களால் இந்த கடல் நீரடிப் பாறை சேதமடைந்ததற்கு தற்போது ”எந்த ஆதாரமும் இல்லை” என்று டாக்டர் பார்பியர் கூறினார். இது ”மிக நல்ல நிலையில்” இருக்க, அதன் அசாதாரண ஆழம் ஒரு காரணம் என்கிறார்.

“பொதுவாக நாம் அவற்றை ஆழமற்ற சூழலில் காண்கிறோம். ஏனெனில், பவளப்பாறைகளின் உடலுக்குள் வாழும் பாசிகளுக்கு ஒளி தேவைப்படுகிறது.” என்று அவர் கூறுகிறார்.

- பி.பி.சி.



## 2022இன் நாயகி

இந்த ஆண்டு அதிக படங்களில் நடித்தர் ரகுல் ப்ரீத்தி சிங் என்று இப்போதே எழுதி வைத்துக் கொள்ளலாம். காரணம் அடுத்தடுத்து அவர் நடித்துள்ள 7 படங்கள் வரிசையாக வெளிவர இருக்கிறது. இதில் 6 பொலிவூட் படங்கள்.

ஆயுஷ்மானுடன் 'டாக்டர் ஜி', அமிதாப் பச்சன் மற்றும் அஜய் தேவ்கனுடன் 'ரன்வே 34', அஜய் தேவ்கன், சித்தார்த் மல்ஹோத்ராவுடன் 'தேங்க் காட்', இது தவிர 'சத்ரிவாலி', 'அட்டாக்' மற்றும் அக்ஷய் குமாருடன் பெயரிடப்படாத படம் என பொலிவூட் படங்கள் வரிசை கட்டுகின்றன. இது தவிர, சிவகார்த்திகேயனுடன் நடித்திருக்கும் அயலான் இந்த ஆண்டு வெளிவருகிறது.

இந்தியன் 2இல் நடித்தாலும் அந்த படம் இந்த ஆண்டு வெளிவருவதற்கான சாத்தியகூறுகள் இல்லை. அப்படி வெளிவந்தால் இந்த ஆண்டு ரகுல் ப்ரீத் சிங் நடித்த 8 படங்கள் வெளிவரும்.





## ஏப்ரலில் ஆர். ஆர். ஆர்.

ராஜமவுலி இயக்கத்தில், ஜூனியர் என்.டி. ஆர்., ராம் சரண், அலியா பட் மற்றும் பலர் நடித்துள்ள "ஆர். ஆர். ஆர்." பட வெளியீடு பற்றிய புதிய அறிவிப்பை தயாரிப்பு நிறுவனம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

இதன்படி, மார்ச் 18 ஆம் திகதி அல்லது ஏப்ரல் 22ஆம் திகதி படம் வெளியாகும். இதனால், மற்றப் படங்களின் வெளியீட்டை உரியவர்கள் திட்டமிட வசதியாகி உள்ளது.

## அமலா பாலின் வெளியீடு



"மைனா" படத்தின் மூலம் பிரபலமடைந்தவர் அமலா பால், அதன்பின் சில வெற்றிப் படங்களில் நடித்தார். சமூகவலைதளத்தில் அவ்வப்போது தனது கவர்ச்சிப் படங்களை வெளியிட்டு அதிர்ச்சி கொடுப்பவர் அமலா பால்.

கடந்த வாரம் அடுத்தடுத்து சில புகைப்படங்களை அள்ளித் தெளித்து ஆச்சரியப்பட வைத்துள்ளார் அமலா பால். அவர் ஹிந்தியில் நடித்துள்ள "ரஞ்சிஷ் ஹை சாஹி" வெப் தொடரின் விளம்பரத்துக்காக எடுத்த படங்களை அவர் வெளியிட்டுள்ளார்.

இந்த வெப் தொடர் 70களின் கனவுகன்னி பர்வீன் பாபி மற்றும் ஹிந்தி இயக்குநர் மகேஷ் பட் ஆகியோரின் காதல் பற்றியது. இதில் பர்வீன் பாபி கதாபாத்திரத்தில் அமலாபால் நடித்துள்ளார்.



## கவர்ச்சியின் உச்சம்

நடிகைகள் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் அடிக்கடி கவர்ச்சி படங்களை வெளியிடுவது வழக்கம். அவற்றில், நீச்சலுடை படங்களே அதிகம். ஆனால், கவர்ச்சிப் படங்களின் உச்சமாக அண்ட்ரியா 'பாத் ரொப்' படத்தை வெளியிட்டுள்ளார்.

நுரை பொங்கும் 'பாத் ரொப்பில் மகிழ்ச்சி பொங்கும் முகத்துடன் அவர் வெளியிட்ட புகைப்படங்கள் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளன. அதில் ஒரு படத்தில் அவரின் கால்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. இப்படி 'பாத் ரொப்' படங்களை இதற்கு முன்பு தமிழ் நடிகைகள் யாரும் வெளியிட்டிருக்கவில்லை.

## வொன்டர் வுமன் யாஷிகா

இருட்டு அறையில் முரட்டு குத்து படம் மூலம் அறிமுகமானவர் யாஷிகா ஆனந்த். கடந்த ஆண்டில் ஏற்பட்ட கார் விபத்தில் படுகாயமடைந்த யாஷிகா ஆனந்த், நான்கு மாதங்களுக்கு மேலாக தீவிர சிகிச்சை பெற் வந்து தற்போது அதிலிருந்து மீண்டு வந்திருக்கிறார்.



திரையுலகில் விட்ட இடத்தை பிடிக்க தயாராகி வரும் அவர் அதோடு தனது சமூக வலைதளப் பக்கத்தில் கவர்ச்சி புகைப்படங்களை வெளியிடுவதை வாடிக்கையாக வைத்திந்தவர் தற்போது வொண்டர் வுமன் வேடத்தில் கையில் வாளோடு நிற்பது போன்று படங்களை வெளியிட்டுள்ளார்.

## திரை விமர்சனம்

| | |
|---|---|
| திரைப்படம் | : முதல் நீ முடிவும் நீ |
| இயக்கம் | : தர்புகா சிவா |
| இசை | : தர்புகா சிவா |
| நடிப்பு | : ஹரிஷ், கிஷன் தாஸ், மீதா ரகுநாத் |



பாடசாலை வாழ்க்கை, காதல், பிரிவு, மீள் சந்திப்பு என விஜய் சேதுபதி, த்ரிஷா நடித்த '96' படம் மாதிரியான கதைதான். ஆனாலும், ஒரு சுவாரசியமான படத்தைக் கொடுத்திருக்கிறார் இயக்குநர் தர்புகா சிவா.

பாடசாலை வாழ்க்கையை கடந்த ஒவ்வொருவருக்கும் அந்த நாள் ஞாபகங்கள் எப்போதும் மனதில் பசுமையாக இருக்கும். அதன்பின் கல்லூரி வாழ்க்கை, கல்யாண வாழ்க்கை என வந்தாலும் ஒருநாளாவது அந்த பாடசாலை வாழ்க்கையிலேயே இருந்திருக்கலாமே என்று எண்ணத் தோன்றும். அந்த அளவிற்கு நமது பள்ளி வாழ்க்கையில் எத்தனையோ மகிழ்ச்சி, சோகம் என பல மறக்க முடியாத சுவாரசிய சம்பவங்கள் நடந்திருக்கும். அவற்றை மீண்டும் நினைத்துப் பார்த்து வைக்கிறது இந்தப் படத்தின் முதல் பாதி.

சைனீஸ், வினோத் இருவரும் நெருங்கிய நண்பர்கள். வினோத்துக்கு உடன்படிக்கும் ரேகாமீது காதல். இருவரும் அடிக்க சந்தித்துப் பேசி தங்கள் காதலை வளர்த்துக் கொள்கிறார்கள். பள்ளியின் பேர்வெல் தினத்தன்று வேறு ஒரு பெண்ணுடன் வினோத் நெருக்கமாக இருந்ததாக நினைக்கும் ரேகா, வினோத்துடன் சண்டை போட்டு தன் காதலை முறித்துக் கொள்கிறார். காலங்கள் கடக்கிறது, வினோத் சினிமாவில் பிரபலமான இசையமைப்பாளராக இருக்கிறார். மீண்டும் பள்ளி மாணவர்கள் சந்திக்கும் மீள் சந்திப்பு முதன் முதலாக நடக்கிறது. ரேகா தனது வருங்காலக் கணவருடன் விழாவுக்கு வருகிறார். பிரிந்த நண்பர்கள் தங்கள் பள்ளி வாழ்க்கையை நினைத்துப் பேசுகிறார்கள். ரேகாவைப் பார்த்ததும் வினோத்துக்குக் காதல் தவிப்பு ஏற்படுகிறது. ரேகாவும் பள்ளிக் கால காதலை நினைத்து தவிக்கிறார். அதன்பின் என்ன என்பதுதான் மீதிக் கதை.

பள்ளி மாணவர்களாக, மாணவிகளாக, ஆசிரியர்களாக நடித்திருக்கும் ஒவ்வொருவரும் அவ்வளவு யதார்த்தமாக நடித்துள்ளார்கள். அந்தப் பள்ளியின் ஒரு மூலையில் நின்று கொண்டு நாமே அதை நேரில் பார்ப்பது போன்ற ஒரு உணர்வைக் கொடுத்திருக்கிறார்கள்.

சைனீஸ் ஆக ஹரிஷ், படத்தில் நடித்தவர்களிலேயே அவ்வளவு குறும்புடன், யதார்த்தத்துடன் நடித்தவர்களில் இவருக்குத்தான் முதலிடம். நமது பள்ளி நண்பர்கள் குழுவில் எப்படியும் இப்படி ஒரு நண்பர் இருப்பார். எதைப் பற்றியும் கவலைப்படாத ஒரு குணம், என்ன வேண்டுமானாலும் செய்யும் இப்படி ஒரு நண்பன் கிடைத்தால் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் சிறப்பாக அமையும் என எண்ண வைக்கிறார்.

வினோத் ஆக கிஷன் தாஸ். பள்ளி மாணவராக இருக்கும் போது காதல் நாயகனாக கலக்குகிறார். காதலைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது என்பது போல் காதலுக்காக உருகுகிறார். விஜய் அன்ரனியை அதிகம் பார்த்து ரசித்திருப்பார் போலிருக்கிறது. அவரைப் போலவே அப்படியே பவ்யமாகப் பேசி பரிதாபப்பட வைக்கிறார்.

படத்தின் நாயகி என்று ரேகாவாக நடித்திருக்கும் மீதா ரகுநாத் சினிமாத்தனம் இல்லாத இயல்பான ஒரு முகம். பள்ளி மாணவிகள் எப்படி பேசுவார்கள், பழகுவார்கள், நடந்து கொள்வார்கள் என பார்த்துப் பார்த்து நடித்திருக்கிறார். முத்தக் காட்சியில்கூட தைரியமாக நடித்திருக்கிறார். அப்பாவித்தனமான பெண்களிடம்தான் காதல் ஊற்றெடுக்கும் என்பதற்கு இவரின் கதாபாத்திரம் ஓர் உதாரணம்.

ஆசிரியையாக நடித்திருக்கும் சிவசங்கரி, மற்ற மாணவர்களாக நடித்திருக்கும் சரண் குமார், ராகுல் கண்ணன், மஞ்சுநாத், வருண் ராஜன், சச்சின் நாச்சியப்பன், கௌதம் ராஜ், நரேன் ஆகியோரும் பள்ளி மாணவர்களாகவே வாழ்ந்திருக்கிறார்கள்.

தர்புகா சிவாவின் இசையில் மீள் சந்திப்பு போது இடம் பெறும் பாடல் உணர்வு பூர்வமாய் அமைந்துள்ளது. பள்ளிக் காட்சிகளில் சுஜித் சாரங்கின் ஒளிப்பதிவு ஒரு பள்ளியை நம் கண்முன் நிறுத்துகிறது.

இடைவேளை வரை இடம் பெற்ற காட்சிகள், வசனங்கள், நடிப்பு என ஒவ்வொன்றிலும் இருக்கும் சுவாரசியம் இடைவேளைக்குப் பிறகு இல்லாமல் போய்விடுகிறது. மீள்சந்திப்பிலேயே திரைக்கதை ஒரே இடத்தில் அப்படியே நின்று விடுகிறது. இடைவேளை வரை ஒரு படத்தை யதார்த்தமாய் ரசித்தது, பின் ஒரு நாடகத்தைப் பார்க்கும் உணர்வை ஏற்படுத்திவிடுகிறது.

# கோடிகளை இழக்கும் ஜொகோவிச்



அவுஸ்திரேலியா ஓப்பன் ரென்னிஸ் தொடர் , கடந்த ஜனவரி 17ஆம் திகதி மெல்பர்னில் தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் பங்கேற்பதற்கு கொரோனா தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும் என்று அவுஸ்தி ரேலியா அரசு உத்தரவு பிறப்பித்திருந்தது. இதனால் தடுப்பூசி செலுத்தாத ஜொகோவிச்சின் வீசாவை இரு முறை இரத்து செய்தது அவுஸ்திரேலியா. இதனால், அவரால் அவுஸ்திரேலிய ஓப்பனில் பங்கேற்க முடியவில்லை.

மேலும், தடுப்பூசி போட்டுக் கொள்ளாமல் ஜொகோவிச் தனது நிலைப்பாட்டை தொடர்ந்தால் மற்ற கிராண்ட்ஸ்லாம் தொடர்களிலும் விளையாட மறுக்கப்படுவார் எனத் தெரிகிறது. 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களுக்கு சொந்தக்காரரான அவர் ஜூன் மாதம் நடக்கவிருக்கும் விம்பிள்டன் சம்பியன்ஷிப் தொடரில் பங்கேற்பது குறித்து அமைப்பாளர்கள் உறுதி அளிக்கவில்லை. இதனைத் தொடர்ந்து, ஜொகோவிச்சின் பல்வேறு அனுசரணையாளர்களும் தங்களது கருத்துக்களைத் தெரிவித்துவருகின்றனர்.

பிரெஞ்சு நாட்டின் ஆடை நிறுவனமான லக்கோஸ்ட் தங்கள் ஒப்பந்தத்தை மீள் பரிசீலனை செய்யவுள்ளதாகக் கூறியுள்ளது. இந்த நிறுவனத்துடன் 90 இலட்சம் டொலர்களுக்கு - நம் நாட்டு மதிப்பில் சுமார் 182 கோடி ரூபாய் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று, ஜொகோவிச், தனது ரென்னிஸ் மட்டை நிறுவனமான ஹெட் நிறுவனத்துடன் 90 இலட்சம் டொலர்களுக்கு நம் நாட்டு மதிப்பில் சுமார் 182 கோடி ரூபாய் ஒப்பந்தமாகியுள்ளார். காலணிகளுக்கான ஒப்பந்ததை அசிக்ஸ் நிறுவனத்துடன் கையொப்பமிட்டுள்ளார்.

மேலும் ஜேக்கப் கிரீக்கு எனும் வைன் நிறுவனத்துடன் 20 இலட்சம் டொலர்களுக்கு - நம் நாட்டு மதிப்பில் சுமார் 40 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தமாகியுள்ளார். இதுதவிர யுகேஜி, லெமரோ போன்ற நிறுவனங்களுடனும் அவர் ஒப்பந்தம் செய்துள்ளார். தன் ஸ்பான்ஸர்களின் மூலம் மட்டும் ஓர் ஆண்டிற்கு 4 கோடியே 10 இலட்சம் டொலர்களை நம் நாட்டு மதிப்பில் சுமார் 828 கோடி ரூபாய் வரை ஈட்டுகிறார் ஜொகோவிச். ஆனால், இனிவரும் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஜொகோவிச்சின் பங்கேற்பு உறுதிசெய்யப்படாத நிலையில் உள்ளது. இதே நிலை தொடர்ந்தால் அவரின் சில முக்கிய ஒப்பந்தகாரர்கள் தங்கள் ஒப்பந்தத்தில் இருந்து விலக நிர்பந்திக்கப்படுவார்கள் என்று கூறப்படுகிறது.

# பிபா விருது லெவண்ட்டோஸ்கிக்கு ரொனால்டோவுக்கு சிறப்பு விருது



உதைபந்தாட்ட உலகில் வருடந் தோறும் வழங்கப்படும் உயரிய விருதுகளுள் ஒன்றான பிபா விருதுகள் கடந்த வாரம் வழங்கப்பட்டன. ஆண்கள் பிரிவில் இரண்டாவது ஆண்டாக சிறந்த வீரருக்கான விருதை வென்றார் போலாந்து அணித் தலைவர் ரொபேர்ட் லெவண்டோஸ்கி. பேயர் மூனிச் அணிக்காக கழகத்துக்கான போட்டிகளில் தொடர்ந்து அதிரடி காட்டி வரும் லெவண்டோஸ்கி, 2020-21 தேசிய லீக் உதைபந்தாட்ட (bundes liga) தொடரில் 41 கோல்கள் அடித்து சாதனை படைத்திருந்தார். தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு வரும் அவர், லயனல் மெஸ்ஸி, முகமது சலா ஆகியோரை பின்னுக்குத்தள்ளி இந்த விருதை வென்றிருக்கிறார்.

மெஸ்ஸி, சலா ஆகியோரும் கடந்த ஆண்டு மிகச் சிறப்பாகச் செயல்பட்டிருந்ததால், இந்த விருது யாருக்குக் கிடைக்கும் என்பதில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டிருந்தது. அதுமட்டுமல்லாமல், பலன் டி ஓர் விருதை மெஸ்ஸிதான் வென்றிருந்தார். அதனால், இந்த விருதும் அவருக்கே கொடுக்கப்படலாம் என்ற பேச்சு இருந்தது. இருந்தாலும், பலன் டி ஓர் கைகூடாத லெவண்டோஸ்கி, இந்த விருதை வென்று விட்டார். 2020ஆம் ஆண்டும் இவ்விருதை அவரே வென்றிருந் தார்.



பெண்கள் பிரிவில் ஆண்டின் சிறந்த வீரருக்கான விருதை பார்சிலோனா வீராங் கனை அலெக்சியா புதேயாஸ் வென்றார். பெண்கள் சம்பியன்ஸ் லீக் தொடரில் சம்பி யன் பட்டம் வென்ற பார்சிலோனா அணி யின் அசைக்க முடியாத நம்பிக்கையாக விளங்குகிறார் புதேயாஸ். நடுக்களத் தில் அவர் காட்டும் ஆட்டம் அந்த அணிக்கு உயிர்நாடியாக விளங்குகிறது. முன்பு வழங்கப்பட்ட பலன் டி ஓர் விருதையும் அவரே வென்றி ருந்தார்.

சர்வதேச உதைபந்தாட்ட அரங்கில் அதிக கோல்கள் அடித்தவரான ஈரான் வீரர் அலி டேயின் கோல் எண்ணிக் கையை, கடந்த ஆண்டு முறியடித்து சாதனை படைத்தார் போர்த்துக்கல் அணியின் தலைவரான கிறிஸ்ரியானோ ரொனால்டோ. அந்தச் சாதனையைப் பாராட்டும் விதமாக அவருக்கு சிறப்பு விருது வழங்கப்பட்டது. பெண்கள் பிரிவில் கனடாவின் கிறிஸ்ரின் சின்க்ளேருக்கு சிறப்பு விருது வழங்கப்பட்டது.

ஆண்கள் பிரிவில் சிறந்த பயிற்றுவிப்பாளருக்கான விருதை செல்சீ மேனேஜர் தாமஸ் டுகெல் வென்றார். குறுகிய காலத்தில் அந்த அணியை சம்பியன்ஸ் லீக் பட்டம் வெல்ல வைத்த அவர், ராபர்டோ மான்சினி, பெப் கார்டியோலா ஆகியோரை வீழ்த்தி இந்த விருதை வென்றார். பெண்கள் பிரிவிலும் இவ்விருது செல்சீ பக்கமே வந்தது. செல்சீ பெண்கள் அணியின் பயிற்றுவிப்பாளர் எம்மா ஹெய்ஸ் இந்த விருதை வென்றார். பெண்கள் எவ். ஏ. கிண்ணம், பெண்கள் லீக் கிண்ணம், பெண்கள் சுப்பர் லீக் என அனைத்து உள்ளூர் பட்டங்களையும் வென்றது செல்சீ.

கோல் காப்பாளர்களுக்கான விருதை ஆண்கள் பிரிவில் செல்சீயின் எட்வர்ட் மெண்டியும், பெண்கள் பிரிவில் லயனின் கிறிஸ்ரியன் எண்ட்லரும் வென்றனர். போர் பிளே விருதை டென்மார்க் அணியும், அணியின் பயிற்றுவிப்பாளர் மற்றும் மருத்துவக் குழுவும் வென்றது. 2020 யூரோ தொடரின்போது மாரடைப்பு ஏற்பட்டு களத்திலேயே கிறிஸ்டியன் எரிக்சன் விழுந்தபோது, அவர்கள் வெளிப் படுத்திய உணர்வுக்காக இந்த விருது வழங்கப்பட்டது.




## ஆண்கள் பிரிவின் சிறந்த பதினொருவர் அணி

கியான்லூயி டொன்னரும்மா - இத்தாலி - பாரிஸ் சென். ஜெர்மைன், டேவிட் அலாபா - ஆஸ்திரியா - ரியல் மாட்ரிட், ரூபன் டியாஸ் - போர்த்துக்கல் - மான்செஸ்டர் சிற்றி, லியனார்டோ பொனுச்சி - இத்தாலி - ஜூவென்டஸ், ஜோர்ஜினியோ - இத்தாலி - செல்சீ, எங்கோலோ கொன்டே - பிரான்ஸ் - செல்சீ, கெவின் டி புருய்னா - பெல்ஜியம் - மான்செஸ்டர் சிற்றி, கிறிஸ்ரியானோ ரொனால்டோ - போர்த்துக்கல் - மான்செஸ்டர் யுனைடட், எர்லிங் ஹாலண்ட் - நோர்வே - பொருஷியா டார்ட்மண்ட், ரொபேர்ட் லெவண்டோஸ்கி - போலாந்து - பேயர்ன் மூனிச், லயனல் மெஸ்ஸி - ஆர்ஜென்ரீனா - பாரிஸ் சென். ஜெர்மைன்.



"மெல்லத் தமிழினி சாகும்' என்ற வரிகள் இடம்பெற்ற பாடலை பாரதியார் பாடியதற்குக் குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சிதான் காரணம். 20-ம் நூற்றாண்டு ஆரம்பத்தில் கல்கத்தாவிலிருந்து வந்த 'மாடர்ன் ரிவ்யூ' என்னும் இதழில், எல்லா பாடங்களையும் தாய்மொழியில் படிக்க முடியும் என்று யதீந்திர சர்க்கார் எழுதினார் இதற்கு வரலாற்றுப் பேராசிரியர் கே.ஏ.நீலகண்டன் மறுப்பு எழுதினார். தமிழுக்கு அந்த வலிமை இல்லை என்றார். இதை விமர்சித்து, பாரதி ஒரு கட்டுரை எழுதினார்.

அ.கா.பெருமாள்

# மெல்லத் தமிழ் இனி சாகாது

பாரதியார் 'தமிழ்த்தாய்' என்னும் தலைப்பில் பாடிய பாடலின் வரிகள் இவை:

'புத்தம் புதிய கலைகள்-பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்:
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை
சொல்லவுங் கூடுவதில்லை - அவை
சொல்லும் திறமை தமிழ்மொழிக்கு இல்லை
மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்
என்று அந்தப் பேதை உரைத்தான்-ஆ
இந்த வசை எனக்கு எய்திடல் ஆமோ'

இப்பாடலில் வரும் 'மெல்லத் தமிழ் இனி சாகும்' என்னும் வரியை எல்லோரும் மேற்கொள் காட்டுவது சகஜம். எதிர்காலத்தில் அழியப்போகும் மொழிகளுள் தமிழும் ஒன்று என்று ஐ.நா. கூறியதாகச் சிலர் மேற்கோள் காட்டிச் சொல்வதும் சகஜம். இந்த இரண்டில் ஒன்று கவிஞரின் ஆதங்கம் இன்னொன்று ஆய்வாளர்களின் ஊகம்.

தென் மாவட்ட வரலாற்றுப் பேராசிரியர் ஒருவர் அவரது இளம் வயதில் மேம்போக்காக 'மெல்லத் தமிழ் இனி அழியலாம்' என்று சொன்னதன் மீதான கோபத்தை பாரதியார் தன் கவிதையில் வெளிப்படுத்தினார். பாரதி பாண்டிச்சேரியில் இருந்தபோது தமிழைவிட வங்க மொழி உயர்ந்தது என்று அரவிந்தர் உட்படச் சிலர் பேசியது (வ.ரா.கருத்து) பாரதியைப் பாதித்திருக்கலாம்.

ஒரு மொழியின் வாழ்வும் வளர்ச்சியும் அந்த மொழி சார்ந்த பண்பாட்டின் கூறுகளிலும் மக்களின் உணர்விலும்தான் இருக்கும். இன்னொரு வகையில் மொழியின் வளர்ச்சியானது ஆளும் அரசின் நிலையைப் பொறுத்தும் இருக்கும். இந்த விஷயங்களை 2,000 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பாரம்பரியம் கொண்ட தமிழுக்குப் பொருத்திப் பார்க்க வேண்டும்.

**உலக மொழிகள்**

உலக மொழிகளின் எண்ணிக்கை அவை பற்றிய சரியான கணிப்பு, அவற்றின் வீழ்ச்சி, அழிவு பற்றிய கணக்கைத் துல்லியமாகக் கூற முடியவில்லை என்பதே ஆய்வாளர்களின் கருத்து. உலகில் சுமார் 6,800 மொழிகள் உள்ளன என்பது ஒரு கணக்கு. இவற்றில் 43% அழி யப்போகும் சூழலில் உள்ளன வாம். உலக மொழிகளில் 40% மக்கள்தான் தாய்மொழியில் படிக்கின்றனர். உலக மொழிகளில் தொழில்நுட்பப் படிப்புக்குரிய கூறுகளுடன் இருக்கும் மொழிகள் நூற்றுக்கும் குறைவு என்கின்றனர் ஆய்வாளர்கள்.



இந்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அறிக்கை யில் உள்ள மொழிகள் பற்றிய கணக்கு துல்லியமாக இல்லை என்று கூறு கின்றனர். 1921-2011 ஆண்டுகளில் 1,599 மொழிகள் இருந்தன. 220 மொழி கள் அழிந்துவிட்டன என்கின்றனர். இந்திய அரசமைப்புச் சட்டம் 8 ஆம் அட்டவணைப்படி இந்தியாவில் 23 மொழி கள் அங்கீகாரம் பெற்ற வையாக உள்ளன.

**பழமை, தொடர்ச்சி**

பழமையான உலக மொழிகளில் தமிழும் ஒன்று என்பதை மொழியியலர்கள் ஒத்துக்கொள்கின்றனர். ஒரு மொழியின் சிறப்பு அதன் தொன்மையில் மட்டுமல்ல அதன் பண்பாட்டுத் தொடர்ச்சி, புரிதல் போன்றவற்றிலும் இருக்கிறது. செம்மொழிக்குரிய அந்தஸ்தே இதுதான். தமிழ், கிரேக்கம், மாண்டரின் (சீன மொழி), சமஸ்கிருதம் போன்ற மொழிகளும் பழமையானவையே. தமிழில் 2,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்குறளைப் புரிந்துகொள்வதில் இன்றைய சாதாரண மாணவனுக்குப் பெரிதும் பிரச்னை இல்லை.

ஆனால், கிரேக்கம், மாண்டரின் போன்ற மொழிகளில் உள்ள பழைய இலக்கியங்களை அந்த மொழி பேசும் நவீன வாசகர்கள் புரிந்துகொள்வதில் சிரமம் உண்டு. இந்தியச் செம்மொழிகளான தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஒடியா, சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளில் தமிழ் பழமையானது. இவை இலக்கியம் வழியாக மட்டுமல்ல. அகழாய்வுச் சான்றுகள் வழியும் நிறுவப்பட்டுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கவித்துவம் வாய்ந்த கபிலரின் தொடர்ச்சி ஆண்டாள், கம்பன், பாரதி எனத் தொடர்கிறது.

**பன்முகத்தன்மை**

தமிழ்ப் பண்பாடு ஒற்றைத் தன்மை கொண்டதல்ல. பன்முகத்தன்மை உடையது. இதற்குச் சமூகவியல்ரீதியான காரணங்கள் நிறையச் சொல்லலாம். முக்கியமாகத் தமிழ்நாட்டுக்கு வெளியிலிருந்தும் அயல் நாடுகளிலிருந்தும் நடந்த வணிகம், படையெடுப்பு ஆகியவற்றைக் கூறலாம். இதற்கெல்லாம் தமிழ்நாட்டில் கிடைத்த ரோமானிய, கிரேக்க நாணயங்களும் அயலிடங்களில் கிடைத்த பிராமி பொறிப்புகளும் சான்றுகளாகும்.

**பழங்காலத்தில் பன்மொழி அறிவு**

தமிழ்நாட்டில் பல மொழிகள் அறிந்த தமிழ் வணிகர்கள் இருந்தனர். பத்துப்பாட்டில் ஒன்றான பட்டினப்பாலையில்,

'மொழிபல பெருகிய பழிதீர் தேயத்து
புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம்"

என்னும் வரிகளை இதற்கு மேற்கோளாகக் கூறலாம். இதனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் வணிக நகரங்களில் பல மொழிகள் பேசிய வணிகர்கள் இருந்திருக்க வேண்டும் என்றும், அவர்களின் வழியாக அந்த மொழிகளைத் தமிழர்கள் அறிந்திருக்கலாம் என்றும் ஊகிக்கலாம்.

**பலவகைப் பண்பாடுகள்**

இந்திய சுதந்திரம் வரையுள்ள காலகட்டத்துத் தமிழ்நாட்டு வரலாற்றை மேம் போக்காகப் புரட்டுகிறவர்களுக்குப் பல்வேறு மொழிகள் பேசிய பல்வகைப்பட்ட பண்பாடு கள் கொண்டவர்கள் தமிழ்நாட்டை ஆண்டது தெரியும். சங்க காலத்திலேயே சமண, பௌத்த மதங்கள் தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டன. இவர் களின் வழியாக பிராகிருதம், பாலி, அர்த்தமாகதி போன்ற மொழிகளின் சொற்கள் தமிழில் கலந்தன.

1,500 ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டின் ஒரு பகுதியை ஆண்ட களப்பிரர்கள் தமிழர் அல்லர். இவர்களின் தாய்மொழி தமிழ் அல்ல. இவர்கள் காலத்தில் பிராகிருதமும் சம்ஸ்கிருதமும் தமி ழுடன் உறவாடின. தமிழ் ஆட்சி மொழியாக, அரசியல் மொழியாக இருக்கவில்லை. இவர்களை அடுத்து வந்த பல்லவர்களும் தமிழரல்லர். காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு தமிழ்நாட்டின் பெரும் பகுதியை ஆண்ட இவர்களின் ஆட்சி மொழி தமிழல்ல. இவர்கள் தங்கள் செப்பேடுகளை சம்ஸ்கிருதம், பிராகிருத மொழிகளில் வெளியிட்டனர்.

பல்லவர் காலத்தில் படையெடுப்பு, வணிகம் காரணமாக கன்னடம், தெலுங்கு மொழிச் சொற்களும், பண்பாட்டு விஷயங்களும் தமிழுடனும் தமிழ்நாட்டுப் பண்பாட்டுடனும் கலந்தன. தமிழர் பண்பாட்டில் வடஇந்திய சமயக் கூறுகள் பெரிதும் கலந்தது இக்காலத்தில்தான். பல்லவர் காலத்துக்குப் பின் வந்த சோழ அரசர்களில் சிலர் தெலுங்கு வம்சாவழியினராக இருந்தனர். ஆனால், ஆட்சிமொழி தமிழ்தான். சோழரை அடுத்து வந்த பாண்டியர்களின் ஆட்சிமொழி தமிழ்தான்.

பாண்டியரின் வீழ்ச்சிக்குப் பிறகு இந்திய விடுதலை வரை தமிழ்நாட்டைத் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவரே ஆண்டனர். தமிழ்நாட்டைத் தெலுங்கு பேசியவர்கள் நீண்ட காலம் ஆண்டிருக்கின்றனர். தஞ்சைப் பகுதியில மராட்டியர் இருந்தனர். அப்போது ஆட்சிமொழி மராட்டியே. மோடி என்ற எழுத்துகளில் நிர்வாக விஷயங்களை எழுதி வைத்தனர்.

ஆங்கிலேயர்களின் ஆட்சியில் கல்வி நிலையங்களிலும் ஆங்கிலம் செல்வாக்கடைந்தது. இப்படியாகத் தமிழ்நாட்டில் 2,000 ஆண்டுகளாக சம்ஸ்கிருதம், பிராகிருதம், பால்லி, அர்த்தமாகதி, தெலுங்கு, கன்னடம், மராட்டி, ஆங்கிலம், பிரெஞ்சு, போர்த்துகீசியம், பாரசீகம் எனப் பல மொழிகள் கலந்திருக்கின்றன. 2,000 ஆண்டுகளின் வரலாற்றில் சோழர்கள், முற்காலப் பாண்டியர்கள், பிற்காலப் பாண்டியர்கள் காலம் தவிர்த்து, உத்தேசமாக 1,500 ஆண்டுகள் தமிழ் ஆட்சிமொழியாக இருக்கவில்லை. இப்படியான சூழ்நிலையிலும் தமிழின் கவிதை, இலக்கணம், உரைநடை போன்றவை அழியவில்லை. பல்வேறு மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன.

**கலை, சடங்கு, மரபு**

ஒரு மொழியின் வளர்ச்சியைத் தொய்வின்றிச் செயல்படுத்துவதில் படைப்பாளிகளுக்குரிய இடம் கலை, சடங்குகள், வாய்மொழி மரபு போன்றவற்றுக்கும் உண்டு. இந்தக் கூறுகளின் தொடர்ச்சி அவற்றின் பன்முகப் பண்பாட்டைப் பாதுகாப்பதில்தான் இருக்கிறது. இப்படியான பாதுகாப்பு எண்ணம் அண்மையில் இளைஞர்களிடம் ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சியான விஷயம்.

'மெல்லத் தமிழினி சாகும்' என்ற வரிகள் இடம்பெற்ற பாடலை பாரதியார் பாடியதற்குக் குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சிதான் காரணம். 20-ம் நூற்றாண்டு ஆரம்பத்தில் கல்கத்தாவிலிருந்து வந்த 'மாடர்ன் ரிவ்யூ' என்னும் இதழில், எல்லா பாடங்களையும் தாய்மொழியில் படிக்க முடியும் என்று யதீந்திர சர்க்கார் எழுதினார் இதற்கு வரலாற்றுப் பேராசிரியர் கே.ஏ.நீலகண்டன் மறுப்பு எழுதினார். தமிழுக்கு அந்த வலிமை இல்லை என்றார். இதை விமர்சித்து, பாரதி ஒரு கட்டுரை எழுதினார். பெரியசாமி தூரனின் 'பாரதித் தமிழ்' தொகுப்பில் இக்கட்டுரை உள்ளது. இன்று அந்தச் சூழல் மாறிவிட்டது. மெல்ல மட்டுமல்ல, எப்போதும் தமிழ் சாகாது. ■



# அசைல்

**ஆசி கந்தராஜா**

இன்று இலங்கை அகதிகளுக்கான விசாரணை நாள். குடிவரவு அதிகாரிகளினால் நடத்தப்படும் இந்த முதலாவது நேர்காணலில், அகதி அந்தஸ்துப் பெறுவோரின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. இப்பொழுதெல்லாம் நிலமை முந்தின மாதிரி இல்லை, சொன்னதையெல்லாம் அப்படியே நம்புவதற்கு. அந்தந்த நாடுகளின் அரசியல் பிரச்னைகளை, ஆதியோடந்தமாக விசாரணை அதிகாரிகள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. முதலாவது விசாரணையில் வெற்றி பெறாதவர்கள் கீழ் நீதிமன்றம், மேல் நீதிமன்றம், உயர் நீதிமன்றம் என, மாறிமாறி மனுச் செய்து காலத்தைக் கடத்துவார்கள். அதற்குள் உழைப்பதை உழைத்து, ஊரில் போய்ச் செட்டிலாகிவிடலாம் என்ற பொருளாதார மனக்கணக்கு இவர்களுக்கு. இதற்காகவே நீதிமன்றங்களில் அப்பீல் செய்ய, பெருவாரியான வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். நம்மவர்கள் உட்பட!

காத்திருப்போர் அறையில் தமிழர்கள் மட்டுமல்ல, ஒருசில சிங்களவர்களும் விசாரணைக்காகக் காத்திருக்கிறார்கள். தங்கள் பக்க நியாயங்களை எடுத்துச் சொல்ல, ஒருசிலர் வழக்கறிஞர்களுடன் வந்திருக்கிறார்கள். இன்னும் சிலர் இங்குள்ள தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள், உறவினர்கள், நண்பர்களைக் கூட்டிவந்திருக்கிறார்கள். மொத்தத்தில், இவர்கள் எல்லோரும் தமிழ் சிங்கள தேசிய முரண்பாட்டுப் பின்புலத்தை மையமாக வைத்து, அகதி அந்தஸ்துக் கோர வந்தவர்கள். இவர்கள் மத்தியில் தமிழரசி தன்னந்தனியே விசாரணைக்காகக் காத்திருக்கிறாள். முப்பது ஆண்டுகால ஈழப் போராட்டம் தன் கண்முன்னே வீழ்ந்த கொடூரம், தாளாத துயரமாக மனதை அழுத்த, அவள் அமைதியாக ஒரு மூலையில் அமர்ந்திருக்கிறாள். அவளுடைய நினைவில் அலை அலையாக போர்க்காலச் சம்பவங்கள் வந்துவந்து மறைந்தன. இந்த நாட்டுக்கு அவள் தானாக விரும்பி வந்தவளல்ல. மாறாக கூட்டிவரப்பட்டவள்.

தமிழரசி என்பது, அவளுக்கு இயக்கம் வைத்த பெயர். அதுவே இன்றுவரை நிரந்தரமாக நிலைத்துவிட்டது. நீண்ட காலத்தின் பின்னர், அவள் அகதி அந்தஸ்துக் கோரும் விண்ணப்பத்தை நிரப்பிய போதே அபிராமி என்று தன் உண்மையான பெயரை எழுதினாள். பெயர் விஷயத்தில்கூட காலம் தன்னை எப்படிக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது என்பதை நினைத்து, தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

காத்திருப்போர் அறை, நடைபாதையைப் போலச் சற்றுக் குறுகி நீண்டிருந்தது. இதனால் எதிரும் புதிருமாக இரண்டு வரிசைகளில் கதிரைகளை அடுக்கியிருந்தார்கள். அறையின் ஒரு பக்க அந்தலைச் சுவரில் மாட்டப்பட்ட தகவல் பலகையிலே, உலக அகதிகள் பற்றிய, ஜெனீவா உடன்படிக்கைச் சரத்துக்கள் எழுதப்பட்டுள்ளன.

தமிழரசிக்கு நேரெதிரே இன்னமும் மீசை முளைக்காத தமிழ்ப் பெடியன் ஒருவன், தனக்கும் இலங்கையில் அரசியல் பிரச்னை இருக்கென நிரூபிக்க, திகிலடித்த முகத்துடன் காத்திருக்கிறான். அவனுக்கு வசதியுள்ள உறவினர்கள் இந்த நாட்டில் இருக்கவேண்டும். இல்லையேல் பசைப்பிடிப்புள்ள பின்புலம் இருக்கவேண்டும். ஒரு தமிழ் லோயரைத் தன்னுடன் அழைத்து வந்திருக்கிறான். இருவரும் குரலைத் தாழ்த்தி மெதுவாகப் பேசினாலும் லோயரின் தடித்த குரல், முன்னால் இருந்த தமிழரசிக்குத் தெளிவாகக் கேட்கிறது.

“இலங்கையை விட்டு வெளியேற, உன்னை நிர்ப்பந்தித்த “இறுதி”க் காரணத்தை மட்டும், விளக்கமாகச் சொல்லு“ என விசாரணையில் சொல்லவேண்டியதை நினைவுபடுத்தினார் லோயர்.

“முந்தின பிரச்னைகளைச் சொல்லவேண்டாமோ”?

பெடியனின் கதையைக்கேட்டு, லோயர் டென்ஷனானார். தமிழரசி மனதுக்குள் சிரித்துக் கொண்டாள்.

“முந்தின பிரச்னைகள் அவங்களுக்குத் தேவையில்லாதது. அந்தப் பிரச்சனைகளுக்கு மத்தியிலும் உன்னால் அங்கு வாழ முடிந்திருக்கிறது, என அதிகாரிகள் நினைப்பார்கள்”.

“ம்”

“இந்த நாட்டில் அகதி அந்தஸ்துப் பெற வேண்டுமென்றால், ஊரிலிருந்து வெளியேற உன்னை நிர்ப்பந்தித்த, வலுவான காரணத்தைச் சொல்லவேண்டும். அந்தக் காரணம், இலங்கையில் உன்னால் தொடர்ந்து வாழ முடியாத நிலைக்குத் தள்ளியிருக்கவேண்டும்“.

லோயர் சொன்ன லாஜிக் விளங்காமல் “பே”என விழித்தான் பெடியன்

லோயரால் இதற்கு மேலும் விளக்கமாகச் சொல்ல முடியவில்லை. “நான் சொல்லித்தந்ததை மாத்திரம், விசாரணையில் சொல்லு” என்றார் காட்டமாக.

சற்றுநேரம் அமைதி காத்த பெடியன், ஜாக்கெட் பாக்கெட்டில் பத்திரப் படுத்தி வைத்திருந்த, கடித உறையை வெளியில் எடுத்தான். பின்னர் குரலை வெகுவாகத் தாழ்த்தி, “ஊரிலை நான் இயக்கத்திலை இருந்தனானெண்டு கிராம சேவகர் தந்த கடிதத்தைக் கொடுக்க வேண்டாமோ”? எனக் கேட்டான்.

தமிழரசிக்கு உடம்பில் உஷ்ணம் பரவி சட்டெனத் தலைக்கேறியது. காதைப் பொத்தி பெடியனுக்கு இரண்டு “அறை” குடுக்கவேணும் போல இருந்தது. கஷ்டப்பட்டு உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டாள்.

“அந்தக் கடிதத்தை உள்ளே வை. இந்த நாட்டுச் சட்டப்படி, இயக்கம் ஒரு தடைசெய்யப்பட்ட அமைப்பு. அடுத்த பிளேனிலை உன்னைத் திருப்பி அனுப்புவாங்கள், விருப்பமோ”? எனச் சீறியவரின் செல்போன் சிணுங்கவே, எடுத்துக் காதில்வைத்தபடி வெளியே போனார் லோயர்.

பெடியன் தயாவுக்கு ஒரே குழப்பமாகவும் பயமாகவும் இருந்தது. அவனுக்குப் பக்கத்திலிருந்த சிவா இறுகிய முகத்துடன் “காக்க காக்க கனகவேல் காக்க” என, மனதுக்குள் முணுமுணுத்தபடி இருந்தான். இருவரும் இலங்கையில் இருந்து ஒரு ஏஜென்சி மூலமாகத்தான் இந்த நாட்டுக்குள் வந்தவர்கள். சிவாவுக்கு லோயர் வைக்க காசில்லை. ஒன்றுவிட்ட தமையனின் தயவில் இங்கு வந்தவன். பத்து வருடங்களுக்கு முன்னர் தமையனும் இந்த நாட்டுக்கு ஈழப் போராட்டத்தை முன்வைத்து வந்தவன்தான். இப்போதுள்ள கடுமை முன்னர் இல்லாததால், சீக்கிரம் விசா கிடைத்துக் காலூன்றிவிட்டான். இவன் மட்டுமல்ல, இங்கு அகதியாக வந்து இப்பொழுது பிரமுகர்களாகவும் செல்வந்தர்களாகவும் வாழும் பெரும்பாலானோர், இந்த வழியாக நாட்டுக்குள் நுழைந்தவர்கள்தான்.

நான்கு அறைகளிலும் மொழிபெயர்ப்பாளர்களின் உதவியுடன் விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. ஒருசிலர் மட்டும் நீண்ட நேரம் விசாரிக்கப்படுகிறார்கள். பேயறைந்த முகத்துடன் பலர் விசாரணை முடிந்து வெளியே வருவதால், காத்திருப்போர் அறையில் ஒருவகை அச்சம் கலந்த அமைதி நிலவுகிறது. வெளியே வந்தவர்களிடம் உள்ளே நடப்பதைக் கேட்டறிய முடியாதபடி பாதுகாப்பு அதிகாரிகள் குறுக்கும் மறுக்குமாக விறாந்தையில் நடந்து திரிகிறார்கள்.

குழந்தைகளுடன் வந்திருந்த இளம் தம்பதிகள், தாங்கள் கொண்டுவந்த வீபூதியைப்பூசி, ஆஞ்சநேயர் படத்தைக் கண்களில் ஒத்தி, பயபக்தியுடன் பிரார்த்திக்கிறார்கள். இடையிடையே சிலுவைக் குறியிடுகிறார்கள். ஆஞ்சநேயருக்கும் வீபூதிக்கும் சிலுவைக் குறிக்குமான முரண் அவர்களுக்குத் தேவையற்றது. வந்த விஷயம் ஒப்பேறவேண்டும். அதற்காக எதையும் சொல்லத் துணிந்தவர்களாகவே விசாரணைக்கு வந்திருக்கிறார்கள்.

இலங்கையில் நீண்டகாலம் நடந்த விடுதலைப்போர், பலரை மரணத்தில் தள்ளி, எஞ்சியவர்களின் உணர்வைச் சிதைத்து, மனச்சாட்சியை மழுங்கடித்து இறுதியில் எல்லாவற்றையும் விழுங்கி விட்டது என்ற எண்ணம் தமிழரசியைத் துரத்தியடித்தது. அத்துடன் நீண்ட நேரம் ஒரே இடத்தில் இருந்ததால், அவளின் பாதிப்படைந்த தண்டுவடம் வலித்தது. எழுந்து சிறிது தூரம் நடந்தாள்.

“நீ என்ன சொல்லப்போறாய்”? என சிவாவுக்கு நூல்விட்டுப்பாத்தான் தயா.

“கட்டாய ஆள்சேர்ப்பில் இயக்கம் என்னைப் பிடிச்சுக்கொண்டுபோய் வைச்சிருந்ததாய், அண்ணை சொல்லச்சொன்னவர்” என்ற சிவா, பின்னர் உஷாராகி, பேச்சை மேலும் வளர்க்க விரும்பாது ரொயிலெற்றை நோக்கி நடந்தான்.

இந்த நாட்டில் இயக்கம் தடை செய்யப்பட்ட அமைப்பு என்பது உண்மைதான். ஆனாலும் அந்த இயக்கம் முன்னெடுத்த விடுதலைப் போராட்டமே அனைவரையும் இந்த நாட்டுக்குள் கொண்டு வந்து சேர்த்ததென்பது அதைவிடவும் பெரிய உண்மை. இதைத் தெரிந்துகொண்டும் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தவும் குற்றம் சொல்லவும் தயாராகவே பலர் விசாரணைக்கு வந்திருக்கிறார்கள். அகதி விசாவுக்காகவும் அதனால் கிடைக்கப்போகும் வசதியான வாழ்க்கைக்காவும் எப்படி இவர்களால் சட்டென்று மாறமுடிகிறது? என்ற கேள்வி தமிழரசியின் மனதைக்கிளற, அவள் வெகுவாக ஆத்திரப்பட்டாள்.

தமிழரசி விடுதலை இயக்கத்தில் நீண்ட காலம் இருந்தவள். முன் அரங்குகளில் நின்று வீரத்துடன் போர்புரிந்தவள். ஈழப் போராட்டம் தோற்கவில்லை என்று இன்னமும் நம்புவள். போரின் இறுதிக் கட்டத்தில் களமுனையில் படுகாயமுற்று நீண்டகாலம், வெளிநாட்டு உதவியுடன் இயங்கிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றவள். பின்னர் புலம்பெயர் அமைப்பு ஒன்றின் உதவியுடன் இந்த நாட்டுக்கு வந்தவள். இன்றும் போர்க்கால நினைவுகளுடன் வாழ்பவள்.

நீண்ட நேர காத்திருப்புக்குப் பின்னர், தமிழரசியின் முறை வரவே விசாரணைக்கு அழைக்கப்பட்டாள். உள்ளே ஒரு பெண் அதிகாரி மொழிபெயர்ப்பாளருடன் அமர்ந்திருந்தார். அதிகாரியின் முதலாவது கேள்வி, அவளது முகத்திலும் கழுத்திலும் துலக்கமாகத் தெரிந்த தழும்புகள் பற்றியது.

அவை “விழுப்புண்கள்” என்றாள் சுருக்கமாக. அது சரியாக மொழி பெயர்க்கப் படாததால் தமிழரசி அதற்குரிய ஆங்கில வார்த்தையைச் சொன்னாள். அவள் பன்னிரண்டாம் வகுப்புவரை ஆங்கில மொழியில் படித்ததால், அவளால் சரளமாக ஆங்கிலம் பேசவும் எழுதவும் முடியும். இதனால் சொற்களைக் கவனமாகத் தெரிந்தெடுத்து, ஆங்கிலத்தில் மேலே தொடர்ந்தாள்.

“நான் களமுனையில் நின்று போராடியவள்” என மொட்டையாக நிறுத்தியவள், சற்று நிதானித்து “ஈழ விடுதலைப் போராட்டம் ஒரு பயங்கரவாதச் செயற்பாடென நீங்கள் நினைக்கலாம்.

(16 ஆம் பக்கம் பார்க்க...)

# தைப்பூச தினத்தில் தைப்பொங்கல்விழா






காரைதீவு பிரதேசசபையின் வருடாந்த தித்திக்கும் தைப்பொங்கல் பெருவிழா செவ்வாய்க்கிழமை தைப்பூசதினத்தன்று காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் பிரதேச சபையில் சிறப்பாக நடைபெற்றது.

பிரதமஅதிதியாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனையின் தலைமை பொறியியலாளர் ஏ. எஸ். கௌரிபாலன் கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.எல். எ. கமல் நெத்மினி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனையின் சனசமுக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. ரவீந்திரமூர்த்தி சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டார்.

சாதனை அதிதியாக கலந்துகொண்ட கொழும்பு மருத்து வபீடத்தில் அதிகூடிய 13 தங்கப் பதக்கங்களைப்பெற்று முதல்தரமாணவியாக தெரிவுசெய்யப்பட்ட அக்கரைப்பற் றைச்சேர்ந்த சாதனை மாணவியும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியுமான டாக்டர் தர்ஷிகா தணிகாசலம் பொன்னாடை போர்த்தப்பட்டு "தங்கத்தாரகை" "சாதனைச்செல்வி" "தங்கமகள்" போன்ற பல விருதுகள் மற்றும் நினைவுச்சின்னங்கள் வழங்கப்பட்டு பாராட்டப்பட்டார். நிகழ்வை வி. ரி. சகாதேவராஜா நெறிப்படுத்தி தொகுத்தளித்தார்.

# அசைல்

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அது அப்படியல்ல" என்றவள், விசாரணை அதிகாரியின் ரெஸ்போன்ஸூக்காகக் காத்திருந்தாள்.

உஷாரான அதிகாரி, மேலே சொல்லு என்னும் பாவனையில் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"எனக்கும் அப்போது படித்துப் பெரியாளாக வேண்டுமென்ற ஆசை இருந்தது. என்னைப் போலவே பலருக்கும் அந்த ஆசை இருந்தது. நாங்கள் தங்கியிருந்த கோவிலின் மேலே கொத்துக் கொத்தாக குண்டுகளை வீசி, அப்பாவிப் பொதுமக்களைக் கொலை செய்தபோதுதான் நான் அவர்களுக்கெதிராக போராட முடிவெடுத்தேன். என் கண் முன்னாலேயே எனது மூன்று வயது தம்பி வயிறு பிளந்து, குடல் வெளியே வந்து இறந்து கிடந்தான். இரண்டு நாட்களின் பின் அம்மாவின் உடல், இடிபாடுகளின் கீழே கண்டெடுக் கப்பட்டது. அப்பா சித்தப்பிரமை பிடித்தவராக சில காலம் வாழ்ந்தவர் திடீ ரென தற்கொலை செய்து கொண்டார்.

நெஞ்சு நிறையக் கோபம், தனித்து நின்று என்னால் எதுவும் செய்யமுடியாதென்ற இயலாமை. மனதில் சிதறிக் கிடந்த கோப நெருப்பைக் குவிக்க எனக்கு ஒரு மையம் தேவைப்பட்டது. நெஞ்சிலே குமுறிக் கனன்று கொண்டிருந்த நெருப்பை ஒன்றுசேர்க்க எனக்கு ஒரு அமைப்புத் தேவைப்பட்டது".

"கொலைக்குக் கொலை தீர்வாக இருக்கமுடி யாது தமிழரசி. நீ சார்ந்த இயக்கமும் சிங்களப் பிரதேசங்களில் பல பொதுமக்களைக் கொலை செய்தார்களே, அதை எப்படி நியாயப்படுத்து கிறாய்"?

"யாருடைய உயிராக இருந்தாலும் அது எல்லாவற்றையும் விட மேலானது என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. ஆனால் அதைவிடவும் பெரியது, எமது இனத்தின் விடுதலை என நான் சார்ந்திருந்த இயக்கம் முழுமையாக நம்பியது. களமுனையின் முன் அரங்குகளில் நின்று போரா டிய பல ஆயிரம் போராளிகளில் நானும் ஒருத்தி. என்னால் எப்படித் தலைமையை எதிர்த்துக் கேள்வி கேட்கமுடியும்? நீண்டகாலம் களமுனையில் நின்று போராடியதாலோ என்னவோ, ஒரு நிலையில் எங்களால் போர் வெற்றியைத் தவிர வேறு எதையும் சிந்திக்க முடியவில்லை".

"நீ சார்ந்திருந்த இயக்கம் இந்த நாட்டில் தடை செய்யப்பட்ட அமைப்பு என்பது உனக்குத் தெரி யுமா தமிழரசி"?

"நன்றாகவே தெரியும். எனக்கு நடந்த துன்பியல் சம்பவங்களை உங்களுக்கு ஏற்றமாதிரி என்னால் மாற்றியும் திரித்தும் சொல்ல முடியம். இன விடுதலைக்காக சகலதையும் இழந்தவள் நான். இந்த நாட்டில் கிடைக்கலாம் என்ற சுகபோக வாழ்க்கைக்காக, எப்படி நான் துவக்குத் தூக்கிப் போராடவில்லையென மனச்சாட்சிக்கு மாறாகச் சொல்லமுடியும்"?

தமிழரசி உணர்ச்சி வசப்பட்டதால் அவளால் தொடர்ந்து பேசமுடியவில்லை. கொண்டு வந்திருந்த மருத்துவ அறிக்கையை அதிகாரியிடம் கொடுத்து விட்டு, யன்னலூடாக வெளியே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அதிகாரி மேற்கொண்டு எதுவும் கேட்க வில்லை. தமிழரசி கொடுத்த மருத்துவ ஆவணங் களைக் கவனமாக வாசித்தபின், விரைவில் முடி வைத் தெரிவிப்போம் எனச் சொல்லி விடை கொடுத்தார்.

தமிழரசிக்கு முதுகுத் தண்டுவடம் தொடர்ந்து பிரச்சனை கொடுத்தது. முறையான "விசா" இன்றி, தகுந்த சிகிச்சை பெற முடியாத நிலையில், வலி யுடன் நகர்ந்து கொண்டிருந்தது காலம். மனிதர்கள் எதிர்பாத்துக் காத்திருப்பது பலநேரங்களில் நடப் பதில்லை. ஆனால் காத்திருந்ததை விடவும் அழகான விஷயங்கள் சிலநேரங்களில் நடந்து விடு கின்றன. தமிழரசிக்கும் அது நடந்தது. எதிர்பாராத விதமாக அவளுக்கு குடிவரவு இலாகாவிலிருந்து கடிதம் வந்திருந்தது. அரச மருத்துவ இலாகாவைத் தொடர்பு கொண்டு, தண்டுவட சிகிச் சையைச் செய்யுமாறும் அதற் குரிய அனைத்துச் செலவுக ளையும் கொடுப்பனவுகளையும் அரசே ஏற்றுக் கொள்ளுமென் றும், கடிதத்தில் சொல்லப்பட்டி ருந்தது.

வீதியோர தபால்பெட்டிக்கு வெள்ளிக்கிழமை வந்து சேர்ந்த கடிதத்தை அன்று மாலையே தமிழரசி பார்த்தாள். எல்லாம் நல்லபடியாக முடியவேண்டுமென முருகன் கோவிலுக்குப் போய் அருச்சனை செய்ய வேண்டும்போல இருந்தது. அன்று ஐப்பசி வெள்ளி. திருவிளக்குப் பூசை வேறு. கோவில் மண்டபம் நிரம்பி வழிந்தது. சனம் கொஞ்சம் குறையட்டுமென தமிழரசி வெளியே நின்றாள். தூரத்தில் இருந்து தமிழரசியைக் கண்ட தயாவும் சிவாவும் ஆக்களை இடித்துத் தள்ளாத குறையாக விரைந்து வந்தார்கள்.

"ஞாபகமிருக்கா அக்கா, விசாரணையில் சந்திச்சனாங்கள்" எனத் தங்களை அறிமுகப்படுத்தி னான் சிவா.

கூடநின்ற தயா தொடர்ந்தான். "ஒட்டுமொத் தமாய் எல்லாருக்கும் றிஜெக்ட் பண்ணிப் போட் டாங்கள், ஒருதருக்கும் 'விசா' கிடைக்கேல்லை. இனிக் கீழ்க்கோட்டிலை அப்பீல் பண்ணவேணும். ஊரிலை திரும்பவும் பிரச்னை துவங்கினால்தான் அப்பீல் வழக்கிலை வெல்லலாம்".

"நீங்கள் முந்தி இயக்கத்திலை இருந்தனீங்கள் தானே அக்கா. நிலமை இப்ப என்னமாதிரி? சண்டை திரும்ப வருமோ?" எனக் கேட்டு அவளின் சாதகமான பதிலுக்காகக் காத்திருந்தான் சிவா. அவன் இருபது இலட்சம் இலங்கை ரூபாக்கள் ஏஜென்சிக்கு, வட்டிக்கு கடன் வாங்கிக் குடுத்து வந்தவன். குறைந்த பட்சம் அந்தக் காசையாவது உழைக்க வேண்டுமென்ற கவலை அவனுக்கு.

தமிழரசி..!

கனவுக்கும் யதார்த்தத்துக்கும் இடையில் அலைந்து திரியும் உண்மைப் போராளிகளில் அவளும் ஒருத்தி. அவளால் இவர்களுக்கான பதிலை எப்படிச் சொல்லமுடியும்?

# சிவபூமி மனவிருத்தி ...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

உதாரணமாக தற்போது காணப்படும் இடர்கால நெருக்கடியை எதிர்கொள்ளத் தேவையான தடுப்பூசியையும் முன்னுரிமை பெற்று அவர்களுக்கு வழங்கியுள்ளோம். அவர்கள் விளையாட விசாலமான விளையாட்டு மைதானம் எம்மிடம் உண்டு.

எமது சமூகமும் பொறுப்போடு உதவுகிறது. அதற்குச் சான்றாக அவர்கள் வழங்கும் உதவிகள் அமைந்திருக்கின்றன. குறிப்பாகப் பலர் தமது குடும்பக் கொண்டாட்டங்களையும் விழாக்களையும் எமது மாணவர்களோடு இணைந்து கொண்டாடுகின்றனர். புலம் பெயர் தேசத்து மக்கள் தமது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நினைவாகப் பல விடயங்களை எமது பாடசாலையோடு பகிர்ந்து கொள்ளுகிறார்கள்.அது மட்டுமல்ல அவர்கள் நிதி வழியாகவும் உதவிகளைச் செய்து வருகின்றனர்.

இருந்தும் பல மாணவர்கள் இன்னும் எமது பாடசாலைக்கு வராதிருக்கின்றனர் என்ற குறை எம்மிடத்தில் உண்டு. அது பற்றிய கணக்கெடுப்பு அதனை எமக்கு உணர்த்தியிருக்கிறது. அவர்களை எமது பாடசாலைக்கு அழைத்து வரவேண்டும். அந்த வகையில் பிரதேசச் செயலங்கள் எமக்கு உதவலாம். அங்கு கடமையாற்றும் சமூக சேவை அதிகாரிகள் இது பற்றி அதிக கவனமெடுக்க வேண்டும் என்று எதிர்பாக்கிறோம். ஏனெனில் இது ஒரு சமூகக் கடைமை என்ற வகையில் அவர்கள் கடமையாற்ற வேண்டும். பிரதேச செயலக ஆட்சிக்குட்பட்ட இடங்களில் இருக்கின்ற இப்படியான பிள்ளைகளின் விபரங்கள் அவர்களிடம் உண்டு. ஆகக் குறைந்தது அப்படியானவர்கள் இது போன்ற பயற்சிக்குட்படுத்தப்பட்டுள்ளனரா என்ற விபரத்தைச் சேகரித்து அவ்வாறு அல்லாதவர்களை எம்மோடு தொடர்பு படுத்தலாம். அவர்கள் தமது காரியாலயப் பணிக்கு அப்பால் இதனை ஒரு பொறுப்புள்ள சமூக சேவை என்ற அடிப்படையிலே செய்ய முன்வர வேண்டும். அவர்களை சமூகத்துக்குப் பயனுள்ளவர்களாக மாற்ற முடியும். அதற்கான சகல வசதிகளும் எம்மிடத்தில் உண்டு.

அது மட்டுமல்லாது விசே தேவை உடையவர்களுக்கான ஒரு தொழில் பயற்சிப் பிரிவும் எமது பாடசாலையின் ஒரு அங்கமாகச் செயற்பட்டு வருகிறது.இங்கே படித்த பிள்ளைகளும் அதில் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அதில் நெய் விளக்கு, கற்பூரம் போன்றவற்றைத் தயரிப்பதோடு அச்சுத் தொழிலையும் அங்கே கற்றுக் கொடுக்கிறோம். கமுகம் பாளைகளில் பொருட்களைத் தயாரிக்கின்ற தொழில் பயற்சியும் உண்டு. அதற்கென விசேட பயிற்சிகளைக் கொடுக்கக் கூடிய ஆளுமைகள் இருக்கின்றனர். அவர்களுக்கென வடிவமைக்கப்பட்ட விவசாயப் பயிற்சியும் உண்டு. கணனித் துறையிலும் விசேட பயிற்சி உண்டு. அவர்களை மாத வேதனம் பெறக்கூடிய சிறந்த தொழிலாளர்களாக மாற்ற முடியும் என்ற நம்பிக்கையை அப் பிரிவு ஏற்படுத்தியிருக்கிறது.

எமது முயற்சியின் தொடர்ச்சியாகக் கிளிநொச்சி கனகபுரத்திலே ஒரு பாடசாலையை நிறுவியுள்ளோம். இரண்டு மாடிகளைக் கொண்ட அந்தப் பாடசாலையில் கோண்டாவில் பாடசாலையில் உள்ளது போன்று அனைத்து வசதிகளையும் செய்திருக்கிறோம்.

எமது எதிர்கால முயற்சிகளில் ஒன்றாக, அரச திணைக்களப் பணியாளர்காக இவர்களை உள்வாங்குவதற்கான பேச்சுவார்த்தைகளை அது சார்ந்த அரச அதிகாரிகளோடு முன்னெடுக்க இருக்கிறோம். அவரவர் தகமைகளுக் கேற்ற பணிகளை இனம் கண்டு அவர்களை அங்கே பணிக்கு அமர்த்துவது. இது பல விதமாக சமூகத்தை வலுப்படுத்தும் என்ற ஆழமான நம்பிக்கை எமக்கு உண்டு.


# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

24. ஒரு பக்கத்தில் 10 தூண்கள் கொண்ட சதுரவடிவ மண்டபம் ஒன்றில் ஓர் இடை வெளியில் ஒரு சிவப்பு நிறப் பூவும், ஒரு மஞ்சள் நிறப்பூவும் கட்டப்பட்டன எனின், மண்டபத்தின் இரு பக்கங்களிலும் கட்டப்பட்டுள்ள பூக்களின் மொத்த எண்ணிக்கை யாது?

   1) 20 2) 40 3) 36

❖ 25 ஆம், 26 ஆம் வினாக்களுக்கு வென்வரிப்படத்தை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.







25. மூன்று விளையாட்டுக்களிலும் ஈடுபடாத நபர் யார்?

   1) F 2) B 3) C

26. கபடி மட்டும் விளையாடுபவர் யார்?

   1) H 2) A 3) D

27. தளவாடியில் பார்க்கும்போது மாற்றமின்றித் தெரியும் உரு யாது?

1)  2)  3) 

28. 21 ஆம் நூற்றாண்டின் 7 ஆவது தசாப்தத்திற்கு உரிய ஆண்டினைத் தெரிவு செய்க.

   1) 2007 ஆம் ஆண்டு 2) 2021 ஆம் ஆண்டு 3) 2061 ஆம் ஆண்டு

❖ **29 ஆம், 30ஆம் வினாக்களுக்குத் தரப்பட்ட கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு விடையினைத் தெரிவு செய்க.**

29. ஏப்ரல் மாதம் முழுவதும் தினமும் உண்டியலில் பணம் சேர்க்கும் ஒருவர் பணம் சேர்க்கும் நாள் எத்தனையாம் திகதியோ அந்தத் திகதிக்குரிய பணத்தை உண்டியலில் இடுவார் எனின் 30ஆம் நாளின் இறுதியில் அவர் சேர்ந்த பணம் எவ்வளவு?

   1) ரூபாய் 450.00 2) ரூபாய் 465.00 3) ரூபாய் 30.00


30. இரும்பு ஒட்டும் தொழிற்சாலை ஒன்றில் 2 கம்பிகளைப் பொருத்தி ஒட்டுவதற்கு ரூபாய் 50.00 செலுத்த வேண்டும். 9 கம்பித்துண்டுகளை ஒன்றாகப் பொருத்துவதற்கு செலவாகும் பணம் எவ்வளவு?,

   1) ரூபாய் 100.00 2) ரூபாய் 450.00 3) ரூபாய் 400.00

31. 3 மீற்றர் நீளமும் 2 மீற்றர் அகலமும் உடைய சுவர் ஒன்றிற்கு தீந்தை பூசுவற்கு 2ℓ தீந்தை தேவைப் பட்டது எனின், 6 மீற்றர் நீளமும் 3 மீற்றர் அகலமும் உடைய சுவரிற்குப் பூசுவதற்குத் தேவையான தீந்தை எவ்வளவு?

   1) 3 ℓ 2) 4 ℓ 3) 6 ℓ

❖ **32 ஆம், 33 ஆம் வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள தொடர்பினை அவதானித்து விடை எழுதுக.**




= ரூபாய் 140.00

= ரூபாய் 250.00

32. 6 பென்சில்களினதும் 3 கொப்பிகளினதும் விலை யாது?

   1) ரூபாய் 250.00 2) ரூபாய் 390.00 3) ரூபாய் 400.00

33. ஒரு கொப்பியின் விலைக்கும் ஒரு பென்சிலின் விலைக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

   1) ரூபாய் 90.00 2) ரூபாய் 50.00 3) ரூபாய் 100.00

34. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு A, B, C ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க.

| | | |
|---|---|---|
| A ............................... | மல்லிகை | பலா |
| கத்தரி | B ............................... | மா |
| துளசி | தாமரை | C ............................... |

   1) பூசணி, பாகல், பாலை 2) வெண்டி, பூசணி, வேம்பு 3) மிளகாய், பாகல், வாழை

35. சரியான கணிதச் செய்கைக்குரிய கோவையைத் தெரிவு செய்க.

   1) $6 \times 4 + 6 = 60$
   2) $6 \times 6 + 4 = 40$
   3) $6 \times 0 + 4 = 10$

## விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 24) 3 | 25) 3 | 26) 1 | 27) 2 | 28) 3 |
| 29) 2 | 30) 3 | 31) 3 | 32) 2 | 33) 3 |
| 34) 2 | 35) 2 | | | |

CHANNEL-1

## 23.01.2022 ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

CHANNEL - 2

## 23.01.2022 ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# சப்புகஸ்கந்தை மின் நிலையம் மீண்டும் செயலிழக்கும் அபாயம்!

கொழும்பு, ஜன. 23

உராய்வு எண்ணெய் தட்டுப்பாடு காரணமாக, சப்புகஸ்கந்தை மின்னுற்பத்தி நிலையம் மீண்டும் செயலிழக் கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கனியவளக் கூட்டுத்தாபனத்தால், இலங்கை மின்சார சபைக்கு நேற்று வரை மாத்திரமே உராய்வு எண்ணெய்யை வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனாலேயே இந்த அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையம் தற்போது சீராக இயங்குகின்றது. இதன்படி, களனிதிஸ்ஸ கூட்டு வட்ட மின் நிலையத்தில் இருந்து 165 மெகாவோட்ஸ் அலகு மின்சாரமும், களனிதிஸ்ஸ மின்நிலையத்தில் இருந்து 115 மெகாவோட்ஸ் அலகு மின்சாரமும் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இலங்கை மின்சார சபையிடம் இருந்து கிடைக்கப்பெற்ற டீசல் தொகையானது எதிர்வரும் 7 நாட்களுக்கு போதுமானதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)



# இராணுவ வாகனம் விபத்து இரு சிப்பாய்கள் காயம்!

கிளிநொச்சி, ஜன. 23

இரணைமடு - முறிகண்டிக்கு இடைப்பட்ட பகுதியில் ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் இரவு இராணுவ வாகனம் தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்தனர்.

இரணைமடு பகுதியிலிருந்து ஏ - 9 வீதியூடாக முறிகண்டியை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இராணுவ வாகனம் முறிகண்டி பொலிஸ் காவலரணை அண்மித்தபோது, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் மறுபுறத்துக்கு சென்று தடம்புரண்டு வடிகாலில் வீழ்ந்தது.

இந்த விபத்தில் இராணுவ வாகனத்தில் பயணித்த இருவர் காயமடைந்ததுடன் மேலதிக விசாரணைகளை முறிகண்டி காவலரண் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசாங்கத்தை பார்த்து மக்கள் சலித்துவிட்டனர்!

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்

கொழும்பு, ஜன.23

"அரசாங்கத்தைப் பார்த்து மக்கள் சலிப்படைந்துவிட்டனர். மக்கள் நீண்டவரிசையில் காத்திருக்கும் யுகமே உருவாகியுள்ளது. அன்றைய நாளுக்கான பிழைப்புப் பயணத்தையே அரசாங்கம் தற்போது மேற்கொள்கின்றது என்று, ஐக்கிய இளைஞர் சக்தியின் தேசிய அமைப்பாளர் சமித் விஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். இதன்போது தொடர்ந்துரைத்த அவர்,

ஊடக சந்திப்புகளை நடத்தி கருத்து கூறுவதில் பயனில்லை. இன்று அரசாங்கத்தைப் பார்த்து மக்கள் சலிப்படைந்துள்ளனர். எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆலோசனைகளை பொறுப்படுத்தாத அரசாங்கங்கத்தின் செயல்பாட்டால், அதிகாலை 3 மணிக்கே மக்கள் வரிசையில் நிற்பதை ஊடகங்களில் பார்த்தோம்.

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் காலையில் பதவி நீக்கம் செய்யப்பட்டு மாலையில் மீண்டும் நியமிக்கப்பட்டார். அரிசியை இறக்குமதி செய்ய மாட்டோம் என்று விவசாய அமைச்சர் கூறுகினார். ஆனால், அரிசியை இறக்குமதி செய்கின்றனர். ஜனாதிபதி சிம்மாசன உரையை நிகழ்த்திய பின்னர் நாட்டில் டொலர்கள் இல்லை என மக்களிடம் கூறினார். விவசாயப் பிரச்னையை மீண்டும் மீண்டும் கூறுகின்றார்.

இவை அனைத்தையும் ஜனாதிபதி புதிததாகக் கூறத் தேவையில்லை. இந்தப் பிரச்னைகளுக்கு தீர்வு என்ன என்பதே எமது எதிர்பார்ப்பு. இவற்றுக்கு பதில் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். தவறு இருந்தால் பரவாயில்லை. குறைந்தபட்சம் தீர்வு காண வேண்டியது ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

பிரச்னைகள் பற்றி மக்களுக்கு சொல்ல வேண்டிய அவசியமில்லை. தீர்வுகளையே சொல்லியிருக்க வேண்டும். ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் ஆகியுள்ள நிலையில் வன அழிப்பு 30 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இது மற்றுமொரு சாபக்கேடு. ஆளும் தரப்பு உறுப்பினர்களுக்கு மரங்களை பார்த்தால் சும்மா இருக்க முடியவில்லை.

வெள்ளை யானை திட்டங்களுக்கு கோடிக்கணக்கில் செலவு செய்து இன்று மக்களுக்கு உணவுத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியவில்லை - என்றார்.

(கே)

# மரண அறிவித்தல்

பிறப்பு 13 . 07 . 1942



இறப்பு 19 - 01 - 2022

## திரு. கந்தையா கோபாலகிருஷ்ணன்

(டவர் வோச் வேக்ஸ் உரிமையாளர் - யாழ்ப்பாணம்)

யாழ். மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Paris ஐ வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கோபாலகிருஷ்ணன் கடந்த 19.01.2022 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் இளைய புதல்வரும், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற குமாரசாமி - சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், சரோஜினி தேவி அவர்களின் அன்புக் கணவரும், கோபிநாத் (கண்ணன் - சுவிஸ்), கோமதி (ராசாத்தி - பிரான்ஸ்), அமர்நாத் (பாபு - லண்டன்), பிறேம்நாத் (பிறேம் - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிரோஜினி (சுவிஸ்), உதயகுமார் (பிரான்ஸ்), சங்கீதா (லண்டன்), கிஷானி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரோஹித், சஹனா (சுவிஸ்), நிஷானி, அபிஷா (பிரான்ஸ்), ஹர்சினி, டிவேஷ் (லண்டன்), விதுசி, ஜிவன்சி, வினுஷன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், கனகமுத்து (நோர்வே), தவமணி, லோகேஸ்வரன் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், விமலாதேவி (லண்டன்), காலஞ்சென்றவர்களான கமலாதேவி, ஜெயவீரசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயந்தி, ஜெயம் (நோர்வே), ஜெயக்குமாரி (கனடா), ஜெயகௌரி (சுவிஸ்), காலஞ்சென்ற பிரேம்குமார், உதயகுமார் (இந்தியா), வசந்தி, சாரதா (கனடா), ஜெயப்பிரியா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், வைதேகி, செந்தூரன், அபிராமி (பிரான்ஸ்), ஜானகி (சுவிஸ்), மாலி (இலங்கை), சிவகுமார், சதீஷ்குமார் (லண்டன்) ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

கிரியை :
Monday, 31 Jan 2022 10:00 AM - 11:00 AM
Funérarium de Châtillon 2 Vla des Paroseaux, 92320 Châtillon, France

தகனம் :
Monday, 31 Jan 2022 12:00 PM
Crematorium Val de Bièvre 8 Rue du Ricardo, 94110 Arcueil, France

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**பிறேம் (மகன்)**
**00447787872485**

தகவல் :
**குடும்பத்தினர்**

# மணமகள் தேவை

ஆண் 31 வயது, யாழ். இந்து வேளாளர், சதுமலை, சைவபோசனம், உத்தரட்டாதி நட்சத்திரம் B.Sc(special) Computational Physics (Colombo) - ஆசிரியர் (physics & Computer Science) சைவபோசனமுடைய பெண் விரும்பத்தக்கது. ஆனால் கட்டாயமில்லை.

தொலைபேசி - 0762213233

# மரண அறிவித்தல்

மலர்வு 19 - 02 - 1934



உதிர்வு 19 - 01 - 2022

## திருமதி பரமநாதர் நாகேஸ்வரி (நாகம்மா)

காரைநகர் புதுறோட்டு சிதம்பராமூர்த்தி கேணியடியை பிறப்பிடமாகவும், புதுறோட்டு சிவன் கோவில் வீதியை தற்போதைய வாழ்விடமாகவும் கொண்ட பரமநாதர் நாகேஸ்வரி அவர்கள் கடந்த 19.01.2022 புதன்கிழமை அன்று சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி கந்தையா - இராசம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் பரமநாதர் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், தனபாக்கியம் (Germany), சிவசுப்பிரமணியம் (பொம்பே மணியம், இலங்கை), சிவலிங்கம் (U.K), சிவராசா (U.K), தவராசா (U.K) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற பாலஸ்காந்தன் மற்றும் பூமலர், வளர்மதி, அருந்ததி, அஜந்தி ஆகியோரின் அருமை மாமியாரும், பார்த்தீபன் (U.K), தர்சினி (Australia), தர்சிகரன் (U.K), சிவஅன்பு (U.K), சிவகரன் (U.K), துஷ்யந்தினி (U.K), சிவதீபன் (U.K), அபிராம் (U.K), ஆதிசன் (U.K), அபிதன் (U.K), திவிதன் (U.K) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், லக்ஷா, சேயோன் (Australia) ஆகியோரின் அருமைப்பூட்டியும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, பரமநாதன், தம்பிராசா மற்றும் சடாசிவம், மாணிக்கம், தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பொன்னையா கணபதிப்பிள்ளை, நடராசா மற்றும் பாக்கியம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (23.01.2022)) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை மணிக்கு சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
**பிள்ளைகள்**

தொடர்புகளுக்கு :
**தனபாக்கியம் - 015143459523 (ஜேர்மனி)**
**சிவசுப்பிரமணியம் - 0752399555 (இலங்கை)**
**சிவலிங்கம் - 07956591653 (லண்டன்)**
**சிவராசா - 07860870571 (லண்டன்)**
**தவராசா - 07951956843 (லண்டன்)**

## மனித உரிமைகள்...

உரிமைகள் பேரவையில் வெளி நாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

எமது சொந்த அரசமைப்பு மற்றும் எமது சர்வதேசக் கடமைகளுக்கு இணங்க மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் இலங்கை தனது நீண்டகால அர்ப் பணிப்பை மீண்டும் வலியுறுத்தியுள்ளது. 2022 ஜனவரி 18ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தின் 9ஆவது கூட்டத் தொடரின் தொடக்கத்தில் ஜனாதிபதியால் அண்மையில் இந்தச் செய்தி மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

இலங்கை அரசாங்கம் பொருளாதார, சமூக மற்றும் மனித அபிவிருத்தி மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைதல் உட்பட அனைத்து துறைகளிலும் தனது ஆணையை நிறைவேற்றுவதில் அதன் மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும். அதே நேரத்தில், கோவிட்-19 தொற்றுநோயால் ஏற்பட்ட செயல்பாட்டு, பொருளாதார மற்றும் மனித தடைகள் இருந்தபோதிலும், இலங்கை மக்களின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட மற்றும் சர்வதேச ரீதியாக வலியுறுத்தப்பட்ட போருக்குப் பிந்தைய நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை வழங்குவதில் அரசாங்கம் முக்கியமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

சுதந்திரமான உள்நாட்டு நிறுவனங்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம், இழப்பீடுகள் அலுவலகம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் மற்றும் இலங்கையின் நிலைபேறான அபிவிருத்தி சபை ஆகியன இந்த முயற்சிக்கு முக்கிய உறுதுணையாக உள்ளன.

இந்த நிறுவனங்களின் சுதந்திரமான சட்டபூர்வ ஆணைகளை நிறைவேற்றுவதற்காக நிதி மற்றும் ஏனைய ஆதரவுடன் நாங்கள் அதிகாரம் பெற்றுள்ளோம். மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் குறித்த உள்நாட்டு செயன்முறைகள் மூலம் ஏற்பட்ட முன்னேற்றம் தொடர்பான வழக்கமான புதுப்பிக்கப்பட்ட தகவல்கள் ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் பேரவையிலான இலங்கையின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்திற்கு நாங்கள் அளித்த பதிலில், பயங்கரவாத தடைச் சட்டத்திலான திருத்தம், பொறுப்புக்கூறல், பயங்கர வாத தடைச் சட்டத்தின் கீழ் கைதிகளை விடுவித்தல், ஒன்று கூடுவதற்கான சுதந்திரம், கோவிட் தொற்றுநோய் மற்றும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் போன்ற பல துறைகள் தொடர்பான சமீபத்திய மாதங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை நாங்கள் முன்னிலைப்படுத்தியுள்ளோம்.

சர்வதேச செயல்பாட்டாளர்களைப் பொறுத்தமட்டில், எமது சர்வதேச பங்காளிகளான ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேசத்தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் நல்லெண்ணம் மற்றும் ஆலோசனை களை அரசாங்கம் பெரிதும் மதிப்பதாக நாம் குறிப்பிட்டுள்ளோம். அவர்களுடனான எமது தொடர்ச்சியான தொடர்புகளைத் தொடர்ந்துள்ள அதேவேளையில், இலங்கையுடனான அவர்களின் வழக்கமான ஈடுபாட்டையும் ஊக்குவித்துள்ளோம்.

விஜயங்களை மேற்கொள்ளும் இரு தரப்பு உயரதிகாரிகள், ஐக்கிய நாடுகள் சபையின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் விஷேட ஆணையுடையவர்கள் உட்பட பல பரிமாற்றங்களின்போது, நாம் அனைத்து வகையான உள்நாட்டு உரையாடல்களையும் அணுகுவதற்கு வசதிகளை ஏற்படுத்தி, அவர்களின் ஊக்கம், ஆலோசனை மற்றும் கரிசனைகளுக்கு திறந்த நிலையில் இடமளித்துள்ளோம்.

அபிவிருத்தி நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பல விடயங்களில் நிறுவப்பட்ட தொடர்பு மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் எமது உள்நாட்டு சிவில் சமூகப் பங்காளிகளுடனான எமது தொடர்புகளை நாம் குறிப்பாக மதிக்கின்றோம். நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விடயங்களை அடைந்து கொள்வதற்கான எமது முயற்சிகளில் அவர்களை ஈடுபடுத்தியுள்ளோம்.

ஒரு பரந்த முனையில், நாம் முன்னோக்கிச் செல்லும்போது எம்முடன் பங்காளியாக ஈடுபடுவதற்காக இலங்கையின் புலம்பெயர் குழுக்களுக்கும் நாம் அழிப்பு விடுத்துள்ளோம். மனித உரிமைகள் பேரவையில் இலங்கை யின் நிலைப்பாடு தொடர்பாக, 2021 செப்ரெம்பர் மாத சபை அமர்வில் நாம் குறிப்பிட்டது போல, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பொறிமுறைகள் மற்றும் சபையுடன் இலங்கை தனது நீண்டகால ஒத்துழைப்பைத் தொடரும்.

உள்நாட்டு செயன்முறைகள் மற்றும் நிறுவனங்களின் மூலம் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை நிவர்த்தி செய்வதற்கான எமது உறுதிப்பாட்டை நாம் வழங்குகின்றோம்.

தீர்மானம் 46/1 இல் உள்ள சாட்சியங்களை சேகரிக்கும் பொறிமுறையானது சபையில் பிளவுக்கு வழிவகுத்தமையானது தேவையற்றதும், உதவியற்றதும் மற்றும் இலங்கையில் அரசியல்மயமாக்கல் மற்றும் துருவமுனைப்புக்கு வழி வகுக்கும் என இலங்கை கருதுகின்றது - என்றுள்ளது. (ஐ)

## துறைமுக....

பேர்வரை ஈடுபட்டால் 50 ஆயிரம் ரூபாயும் அதேகால அவகாசத்துக்கு கட்டணமாக இருக்கும்.

வணிக நோக்கிலான படம் மற்றும் காணொலிகளை எடுக்க 10இற்கும் குறைந்தவர்கள் படப்பிடிப்பில் ஈடுபட்டிருந்தால் ஒரு இலட்சம் ரூபாய் கட்டணமாக செலுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கட்டணங்களை சீன வங்கிக்கே செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், சீன வங்கிக்கு எதற்கு பணம் செலுத்த வேண்டும் என்று விமர்சனங்கள் எழுந்த நிலையில், இதற்குப் பதிலளித்த துறைமுக நகரத்தின் அதிகாரியான கசாபா, “சீன வங்கி உள்ளூர் வங்கிகளில் கணக்கைப் பேணுவதே காரணம்”, என்றார்.

இதேவேளை, மெரினா திறக்கப்பட்ட முதல் வாரத்தில் 90 ஆயிரம் பேர் அங்கு வருகை தந்துள்ளனர். இதனால், அங்கு கொரோனா தொற்று பரவும் அச்சம் எழுந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. இதையடுத்து, அங்கு நாளொன்றில் 700 பேரை அனுமதிப்பது என்று முடிவு எட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## செவ்வாய்...

செவ்வாய்க்கிழமை வரை மின்னுற்பத்திக்கு தேவையான எரிபொருள் உள்ளதாகவும் அவர் கூறி னார். இதனிடையே, நுரைச்சோலை அனல் மின்னுற்பத்தி நிலை யத்தில் செயலிழந்துள்ள மின் பிறப்பாக்கியை செவ்வாய்க்கிழமைக்குள் சீர்செய்ய முடியும் என அவர் நம்பிக்கை வெளி யிட்டார்.

அதன் பின்னரும் தொடர்சியான மின்சார விநியோகத்தை வழங்க எதிர்பார்ப்பதாக மின்சக்தி அமைச்சர் கூறினார்.

## புதுவருட...

சந்தித்த போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார். பொருளாதார நெருக்கடியை சமாளிக்க வெளிநாட்டு உதவிகள் எவ்வாறு பெறப்பட்டுள்ளன என்பது குறித்து விளக்க மளித்தார்.

இதன்படி, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடியதன் பிரகாரம் 25 இலட்சம் அமெரிக்க டொலர்கள் இலங் கைக்கு சலுகையாகக் கிடைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (ஐ)

## யாழ்ப்பாண...

நிறுவகத்தின் சுற்றாடல் பிரிவின் பணிப்பாளர் சரத் பிரேமசிறி குறிப்பிட்டார்.

பலத்த காற்று வீசுவதால், வளி மாசடைவு அதிகரித்துள்ளது. இதனிடையே, மின்னுற்பத்தியில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு மத்தியில், மின்பிறப்பாக்கிகள் அதிகமாக பயன்படுத்தப்படுவதாலும் வளி மாசடைதல் அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## 29, 30ஆம்...

பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் பல திணைக்களங்கள் கலந்துகொள்ளவுள்ளமையால் பொதுமக்கள் தமக்குத் தேவையான சேவையை பயனுள்ளவகையில் பயன்படுத்தி தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

மேலும் இந் நடமாடும் சேவையில் கலந்துகொள்ளவுள்ள திணைக்களங்களும் அவற்றின் மூலமாக மக்களுக்கு வழங்கப்படவுள்ள சேவைகளும் வருமாறு,

தொழிலாளர் தீர்ப்பாயம், சமாதான நீதிவான், திடீர் மரண விசாரணை, சத்தியப்பிரமாணத்திற்கான ஆணையாளர், அகில இலங்கை மொழிபெயர்ப்பாளர் தொடர்பான சேவைகள் மூலம் தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிணக்குகளை தீர்க்க முடியும்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலக சேவை மூலம் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விவரங்களை அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பார்வையிட முடியும். அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான புதிய முறைப்பாடுகளை மேற்கொள்ளவும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஆவணங்களையும் சமர்ப்பிக்கவும் முடியும்.

சட்ட உதவி ஆணைக்குழுவிடம் நிலுவையிலிருக்கும் ஏதேனும் வழக்குகள் தொடர்பில் சட்ட ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும், ஏதேனும் வழக்கு ஒன்றை தொடர்வதற்கான சட்டத்தரணிகளின் சேவையைப் பெற்றுக் கொள்ளவுமான சேவைகளை பெறமுடியும்.

இழப்பீட்டுக்கான அலுவலகம் மூலம், புனர்வாழ்வு அதிகார சபைக்கு ஏற்கனவே அனுப்பப்பட்ட பொதுமக்கள் சொத்து இழப்பு, இறப்பு, மற்றும் காயம், தொடர்பான கோவைகள் அரசாங்க ஊழியர் சொத்து இழப்புக்குரிய கோவைகள் மற்றும் போரால் சேதமடைந்த ஆலயங்களின் கோவைகள் தொடர்பாக ஏற்கனவே அனுப்பப்பட்ட இதுவரை இழப்பீட்டை பெற்றுக் கொள்ளாதவர்களும் மேலதிகமாக இந்த ஆவணங்களை சமர்ப்பிக்க முடியும். தவிர, சுயதொழில் திட்டப் பயிற்சி நெறிகள் தொடர்பான விவரங்களை இந்த நடமாடும் சேவையில் பெற்றுக்கொள்ளலாம்.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் மூலமாக விழிப்புணர்வு, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் சம்பந்தமான செயல்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

குற்றம் மற்றும் சாட்சியங்களால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்கான அதிகார சபை ஊடாக குற்றச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சியங்கள் என்ற வகையில் மக்களின் பிரச்னைகள் அல்லது முறைப்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கான விசேட சாளரமொன்று திறக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய அவர்கள் தமது பிரச்னைகளை முன்வைக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

ஆட்பதிவு திணைக்களம் ஊடாக புதிய, புதுப்பித்தல் மற்றும் தொலைந்த அடையாள அட்டைகளை பெறுவதற்கு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தொடர்புடைய ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்கனவே, பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அடையாள அட்டையை பெறுவதற்கான விண்ணபத்தின் தற்போதைய நிலையை அறிய முடியும். அடையாள அட்டைக்கான விண்ணபத்தை சமர்ப்பிப்பதில் இடர்பாடுகளை எதிர்நோக்குபவர்கள் அது தொடர்பான ஆலோசனைகளை பெறமுடியும்.

பதிவாளர் நாயகம் திணைக்களம் ஊடாக காலம் கடந்த பிறப்பு, இறப்பு, திருமண பதிவுகளை உரிய ஆவணங்களுடன் சமுகளமளித்து சேவைகளையும் ஆலோசனைகளையும் பெறலாம்.

தவிர, சமூக சீர்திருத்த அலுவலகம், மாகாண காணி ஆணையாளர் திணைக்களம், மத்தியஸ்தர் சபை, சிறைச்சாலைகள் திணைக்களம், சிறு தொழில் முயற்சி மற்றும் உள்ளூர் உற்பத்தி, தொழில் பயிற்சி அதிகார சபை, கடன் இணக்க சபை திணைக்களம், பனை அபிவிருத்தி சபை, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் அலுவலகம் ஆகிய திணைக்களங்களின் சேவைகளையும் இந்த நடமாடும் சேவையில் பெறமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சித்திரை...

சிங்கள புத்தாண்டுக்கு முன்னதாக புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை வெளியிட எதிர்பார்த்துள்ளதாக அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இந்த ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு 255,062 சிங்கள மொழி மூல பரீட்சார்த்திகளும் 85,446 தமிழ் மொழி மூல பரீட்சார்த்திகள் உட்பட மொத்தம் 340,508 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். (அ)

## பாதுகாக்கப்பட்ட....

கண்டவாறு தெரிவித்தார்.

பாதுகாக்கப்படவேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தாலும் பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதை யாரும் தடைசெய்ய முடியாது என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்துக்குள் அமைந்துள்ள கட்டைக்காடு எழுவரைக் குளத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு பிரதேச மீனவர்களுக்கு உடனடியாக அனுமதியளிக்குமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

நேற்று டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் கருத்து தெரிவித்த பிரதேச செயலாளர் பிரபாகரமூர்த்தி,

சுண்டிக்குளம் தேசிய பூங்காவுக்கான பிரதேசமாக சுமார் 19,000 ஹெக்ரேயர்களும் நாகர் கோவில் பிரதேசத்தில் சரணாலயமாக மேலும் 19,000 ஹெக்ரேயர்களும் வனஜீவராசி கள் திணைக்களத்தினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை, மணற்காடு சவுக்குத் தோப்பு பகுதியில் சுமார் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை வனப் பாதுகாப்பு திணைக்களத்தினால் பிரகடனப் படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவற்றினால் வாழ்வாதார செயற்பாடுகள், அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் அன்றாட வாழ்விற்கும் அச்சுறுத்தல் ஏற்படுவதாக மக்களால் பிரதேச செயலகத்திடம் முறையிடப்பட்டுள்ளது.” என்று தெரிவித்தார். (அ)

## ஓ.எல்....

இதன்படி, எதிர்வரும் பெப்ரவரி 3ஆம் திகதி வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ஐ)

## மேலும்....

பீடத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு, கல உயிரியல் மற்றும் மூலக்கூற்று உயிரியல் பிரிவின் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார். (ஐ)

## கஞ்சா...

காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழான மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவும் கடற்படையும் இணைந்து நேற்று நடத்திய தேடுதல் நடவடிக்கையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மூன்று உரப்பைகளில் பொதியிடப்பட்ட நிலையில் சுமார் 85 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுழிபுரம் பறளாய் பகுதியில் உள்ள வீட்டு வளாகத்திலிருந்து கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்ட நிலையில் 36 வயதுடைய கணவரும் அவருடைய மனைவியும் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்கள் இருவரும் காங்கேசன் துறை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர். (அ-03)

ஈழநாடு
Eelanadu




# ஜனாதிபதிக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கப்படும்!

## பௌத்த மகா சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 23

பொறுமையுடனும் நன்கு திட்டமிடப்பட்ட வகையிலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரதிபலன்கள் தற்போது யதார்த்தமாகி வருகின்றன. தொலைநோக்குப் பார்வையும் நடைமுறை சிந்தனையும் கொண்ட தலைவராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷமீது நம்பிக்கை வைத்து, மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற ஒன்றிணைவது அனைத்துத் தரப்பினரினதும் பொறுப்பு என்று பௌத்த மகா சங்கத்தினர் கூறினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பௌத்த ஆலோசனை சபையின் 12ஆவது கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

கோவிட் தொற்றிலிருந்து மக்களை மீட்டெடுக்கவும் சவால்கள் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கும், ஜனாதிபதியின் பங்களிப்பைப் பாராட்டி பௌத்த மகா சங்கத்தினர் பௌத்த ஆலோசனை சபையில் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

அதலபாதாளத்துக்கு சென்றுகொண்டிருந்த நாட்டையும் தேசத்தையும், பாரம்பரியத்தையும் காப்பாற்றக்கூடிய ஒரே தலைவர் என்ற வகையில் கோட்டாபய ராஜபக்ஷமீது வைத்திருந்த நம்பிக்கை வீணாகவில்லை எனவும், கூரகலை புனித பிரதேசம், மு/ஹது மகா விகாரை உள்ளிட்ட வடக்கு, கிழக்கில் உள்ள விகாரைகளைப் பாதுகாத்து, நாட்டுக்கு உரிமையாக்குவதற்கு கடந்த இரண்டு வருடங்களில் ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். இதேபோன்று, நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பிலான உண்மைத் தகவல்களை வழங்குவதும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதில் ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்குவதும், பௌத்த ஆலோசனை சபையின் பொறுப்பாகும் என்றும் மகா சங்கத்தினர் குறிப்பிட்டனர்.

சட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நிறைவேற்றுவதற்கு மகா சங்கத்தினரின் வழிகாட்டலை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். அழியும் தறுவாயில் இருந்த சிங்கள - பௌத்த பாரம்பரியத்தை கோவிட் தடைகளுக்கு மத்தியிலும் பாதுகாத்து, பெரும்பான்மை மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்பட்டதைப் போன்று, அந்த வரலாற்றுச் சிறப்புமிக்கத் தலங்களை அபிவிருத்தி செய்வதற்கு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயல்படுவதாக ஜனாதிபதி தெரிவித்தார். (ஐ)

# மரண அறிவித்தல்



மலர்வு 11 - 02 - 1934

உதிர்வு 20 - 01 - 2022

## திருமதி
## தனலஷ்மி தர்மலிங்கம் (தனம்)

யாழ். அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கம்பளையை வதிவிடமாகவும், கனடா Toronto வை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட தனலஷ்மி தர்மலிங்கம் அவர்கள் 20.01.2022 வியாழக்கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதப்பிள்ளை - விசாலாட்சி தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான நமச்சிவாயம் - கனகம்பாள் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தர்மலிங்கம் நமச்சிவாயம் அவர்களின் அன்பு மனைவியும், தர்மராஜ், ஸ்ரீஹரன், தனபாலன், நவராஜ், சிவராஜ், தவராஜ், தர்மினி, லோகராஜ் ஆகியோரின் அருமைத் தாயாரும்,சரினா, மிதுனலஷ்மி, அகிலேஸ்வரி, உமா, வசந்தா, கிரிஸ்டீன், சுதானந்தன், ஹேமா ஆகியோரின் மாமியாரும்,டீனா, ஜீலி, டியானா, பிரேமசாயி- -மைதிலி, ஸ்ரீலஷ்மி- செந்தூரன், கிருஸ்ணா- சர்மினி, காலஞ்சென்ற கிரிஸ்டி, கிருசாந்தி- அம்ரித், மாலி, வினோத், வித்யா- சதன், விக்னேஷ், விக்ரம், சிந்துஜா- டேன், கார்த்திகா, அஞ்சலி, அனிருத் ஆகியோரின் அன்புப் பாட்டியும், அர்ஜுனன், அபினேஷ், லவின் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான பகவதி, கணேசய்யா மற்றும் நாகராசா, தான்யலஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற துரைசிங்கம், சத்யபாமா, காலஞ்சென்றவர்களான சிந்தாமணி, சோமசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

பார்வைக்கு :
Monday, 24 Jan 2022 5:30 PM - 9:00 PM
Tuesday, 25 Jan 2022 12:00 PM - 12:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை:
Tuesday, 25 Jan 2022 12:30 PM - 2:00 PM
Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada

தகனம்:
Tuesday, 25 Jan 2022 3:00 PM
Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**லோகராஜ் தர்மலிங்கம்**
**(லோகன் - மகன்)**
**Mobile : +14166660317**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# கொரோனாவுக்கு 12 பேர் மரணம்!

கொழும்பு, ஜன. 23

நேற்று முன்தினம் கொரோனா தொற்றால் நாட்டில் 12 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நேற்று உறுதிப்படுத்தினார்.

இதனால், தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 284ஆக உயர்ந்துள்ளது. (ஐ)

# இத்தாவிலில் பாரவூர்தி தடம் புரண்டு விபத்து!

கிளிநொச்சி, ஜன. 23

இத்தாவில் பகுதியில் பய ணித்துக்கொண்டிருந்த பார ஊர்தி ஒன்று தடம்புரண்டு வாய்க்காலுக்குள் விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நேற்று அதிகாலை இடம்பெற்றது. சீனி மூடைகளை ஏற்றிக் கொண்டு ஏ - 9 நெடுஞ்சாலை ஊடாக யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த பார ஊர்தியே இவ்வாறு விபத்துக்குள்ளானது. திடீரென பாரவூர்தியின் ரயர் வெடித்தமையே விபத்துக் கான காரணம் என்று தெரிய வந்துள்ளது. எனினும் இந்த விபத்தால் தெய்வாதீனமாக எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தாய், மகள் எரிந்து பலி;
# சடலங்களின் அருகே கத்தி, போத்தல் மீட்பு!

கிளிநொச்சி, ஜன. 23

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி நாதன் குடியிருப்பு பகுதியில் தீயில் கருகி உயிரிழந்த தாய், மகளின் சடலங்களை கிளிநொச்சி நீதிவான் பார்வையிட்டார்.

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு ஆனந்தராசா சீதேவி (47)என்ற 07 பிள்ளைகளின் தாயாரும் அவரது மகளான லக்சிகா (17) ஆகியோர் தீயில் எரிந்து கருகிய நிலையில் அடையாளம் காணப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பாக நேற்றுமுன்தினம் தருமபுர பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த தருமபுரம் பொலிஸார் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இந்த நிலையில் சம்பவ இடத்துக்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார் நேற்று காலை சென்று பார்வையிட்டார்.

குறித்த சடலத்தை பிரேத பரிசோதனை மேற்கொள்ளும் அதே வேளை பகுப்பாய்வுக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்ட நிலையில் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அத்துடன், அப்பகுதியில் ஒரு போத்தலில் பெற்றோலும் மற்றும் ஒரு கத்தி, ஒரு தொலைபேசி என்பனவற்றை தடயவியல் பொலிசார் அடையாளம் கண்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஐ)

# காசல்ரீ நீர்தேக்க காட்டில் தீ;
# 2 ஏக்கர் காடு எரிந்து நாசம்!

நுவரெலியா, ஜன. 23

ஹற்றன் - நோட்டன் பிரதான வீதி, காசல்ரீ நீர்த்தேக்கத்தின் கரையோரப் பகுதிகளில் நேற்று முன்தினம் பிற்பகல் ஏற்பட்ட காட்டுத் தீயால, சுமார் இரண்டு ஏக்கர் காடு எரிந்து நாசமானது.

மலையகத்தில் தற்போது வறட்சியான காலநிலை நீடித்து வருகின்றது. இந்நிலையில், நுவரெலியாவின் காசல்ரீ நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ள நிலையில் கரையோரப் பகுதியிலுள்ள வனத்துக்கு இனந்தெரியாதோர் தீ வைத்துள்ளனர் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர். (கே)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-சந்தோஸ் சுப்பிரமணி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-திறமையாளர்களுக்கான களம்

**இரவு**

7.00 மணி : SPOTLIGHT- குருசுவாமி சுரேந்திரன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : டான் பட்டிமன்றம்



10.00 மணி: நேர்கொண்ட பார்வை




## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு